# கலா சுரபி

தூண்டல்-1 துலங்கல்-5



யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற் கல்லூரி.
2005

# கல்லூரி கீதம்

இராகம் : பிருந்தாவன சாரங்கா
தாளம் : ஆதி

### பல்லவி

வாழ்க யாழ் கல்வியியற் கல்லூரி - என்றும்
சூழ்க நல் ஆசிரியர் கலைக் கல்வி பல்லூழி

### அனுபல்லவி

ஆழ்கடலெனக் கல்வி அறிவு தரும் அன்னை
ஏழிசை பாடியே என்றும் துதிப்போம் - நாமே

### சரணம்

தெய்வபக்தி தேசபக்தி தெய்வீகக் குருபக்தி
உய்யும் வழி காட்டிடவே உணர்ந்து வணங்கிடுவோம்
செய்வதெல்லாம் செம்மையுறச் செய்திடவே கற்றிடுவோம்
வையகத்தில் ஆசிரிய வளர் கல்வி நல்கும் அன்னை
(வாழ்க)

உளவியல் கல்வியியல் உயர்ந்த கற்பித்தல் முறை
வள நிறை விஞ்ஞானம் வரை சித்திரம் கணிதம்
அளவிலா நயம் நிறை ஆடலும் பாடலும்
விளையாடல் ஆரம்ப விதிக் கல்வி தரும் அன்னை
(வாழ்க)

பாங்கான கணனியும் பாலிக்கும் நூலகவியல்
ஆங்கிலம் தொழிற் கல்வி அழகுறத் தரும் அன்னை
நீங்காத பாசத்துடன் நிறைகல்வி நல்கும் மாதா
நாம் காணும் கலைத் தேவி நானிலத்தில் பல்லாண்டு
(வாழ்க)

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்
பழுத்த செந்தமிழின் பழச்சுவை ஊட்டுவான்
செழித்திடும் ஆசிரியச் சீர்கல்வி தருவான்
வழுத்தியே வாழ்த்துவோம் வளமார் கல்லூரி அன்னை
(வாழ்க)

தாமரை நாயகன் உதித்தே எழுந்தான்
தண்கலை கல்வியில் தாமரை விரித்தான்
நாமகள் வந்துறையும் கோவிலும் சமைத்தான்
நலம்பெறக் கல்வியிற் கல்லூரி வளர்த்தான்
(வாழ்க)

ஆக்கம்:
"கலாரத்னா" கலாபூக்ஷணம் முதுதமிழ் கலாநிதி, "மஹா வித்துவான்"
யாழ்ப்பாணம்
பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணி ஐயர் எம்.ஏ.ஜே.பி.


# கலாசுரபி

தூண்டல் – 01 துலங்கல் – 05

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
யாழ்ப்பாணம்.
2005

Thirumagal Number

# Our President



Dr. Thirunavukarasu Kamalanathan
M.A. Dip.in.Ed.

# Teacher Educators



# Jaffna National College of Education
## Teacher Educators

| | |
|---|---|
| 1. Dr. T. Kamalanathan (President) | B.A., Dip in Ed (Merit), M.A (Education) |
| 2. Mr. S. K. Yoganathan (Adi President) | B.A. (Hon), Dip in Ed, M.A (Teacher Education) |
| 3. Mr. B. Thanabalan (V.P-Academic) | B.A., Dip in Ed (Merit), M.Phil (Education) |
| 4. Mr. S. R. Sathiyendrampillai (V,P-Adm) | B.A., B.Com, HNDA Dip in Ed (Merit), M.Ed. |
| 5. Mr. K. Kamalanathan (Adi V.P - Adm) | B.Sc (Spe in Maths) Dip in Ed |
| 6. Mr. K. Baskaran (V.P - Con Edu | B.Sc., Dip in Ed (Merit), M.Sc (Science Education) |
| 7. Miss. S. Suganthini | B.A. (Hons), Dip in Ed (Merit) M.Ed. |
| 8. Miss. K. Kandasamy | S.P. Trd (Phy.Ed) |
| 9. Mrs. V. Narendra | Dip in Music, Dip in Ed, Kalavithagar |
| 10. Mr. K. Ratneswaran | Sp.Trd (Art) B.A, Teacher Grade (NCFA) |
| 11. Mrs. S. Sivapatham | B.A, Dip in Ed, Sp. Trd (English) M.Ed |
| 12. Mrs. G. Suresan | B.A., Dip in Ed (Merit), M.Ed |
| 13. Mrs. G. Ganeshanathan | B.A., Dip in Dance, Dip in Ed (Merit) |
| 14. Mrs. C. Nagendran | B.Sc. (2nd Class), Dip in Ed, M.Phill in Ed |
| 15. Mrs. J. Thiahalingam | B.A (Hon), Dip in Ed (Merit), M.Phil (Ed) |
| 16. Miss. N. Nalliah | B.A (Hon), Dip in Ed (Merit), M.Phil (Ed) |
| 17. Mr. T. Mohan | B.A (Hon), Dip in Ed (Merit), Sp Ted (English) |
| 18. Mr. K. R. Kamalanathan | B.A. Sp.Trd (Primary), Kalavithagar |
| 19. Mr. M. Pirabakaran | B.A, Dip in Ed Sp Ted (English) |
| 20. Mr. K. Krishnayogan | B.Sc., Dip in Ed (Merit), M. Ed |
| 21. Miss. I. Selvanayagam | B.A. (Hon), Dip in Ed (Merit), M.Ed Sp Ted (Primary) |
| 22. Mrs. J. Uthayakumar | B.A., Dip in Ed (Merit), M.A (Culture) Sp Ted (Primary) |
| 23. Mrs. P. Velnithy | Dip in (Dance), B. Dance, Dip in Ed |
| 24. Mr. M. Anandarajah | B.A. (Hons), Dip in Ed (Dist), M.Ed |
| 25. Mrs. S. Kuganesan | Dip in Music, Dip in Ed |
| 26. Mr. S. Thivakaran | B.Sc, Dip in Edu (Merit) |
| 27. Mr. K. Sathiyabalan | Sp Trd (Phy. Ed), B.A Dip in Edu (Merit) |
| 28. Miss. V. Navaratnam | B.Sc |
| 29. Mr. K. Thilaganathan | B.A. (Hon), Dip in Ed |
| 30. Mrs. J. Patrica Greenshields | B.A.R.SA |
| 31. Mr. S. Mugunthan | B.A Dip in English |
| 32. Mr. A. Raveendran | B.A, Dip in Ed, M.Ed |
| 33. Mrs. B. Marithasan | B.Com, Dip in Ed (Merit), Sp Trd (Art), M.Ed |
| 34. Miss. S. Manikkam | Sp Trd (Home Econ), B.Ed (Primary 2nd Class) |
| 35. Mr. P. Sathiyanthan | B.A, Dip in Ed (Merit) |
| 36. Mr. T. Thevathayalan | Sp Trd (English), B.A |
| 37. Mr. T. Sivakumaran | National Dip. in. Teaching |

# Jaffna National College of Education
# Non Acadamic Staffs

### *Registrar*

Mr. V. Vaithiyakumar

### *Development Assistants*

Mrs. L. Sasirega
Mr. S. Sivananthan

### *Non Academic Staff*

Mr. S. Manivannan
Mr. A. Chandrasegaran
Mr. S. Sothiruban
Mrs. S. Nisantha
Miss. V. Chithra
Mr. T. Sivabalan
Mr. S. Vashnukumar
Mrs. T. Mercy Logambigai
Mr. A. Ratnam
Mr. M. Yasinthan
Mr. P. Veerasingam
Mr. S. Thusyanthan
Mr. S. Viyayaruban
Mr. P. Yogalingam
Mr. S. Vijavarathan
Mrs. S. Valarmathy
Mrs. A. Pushpamalar
Mr. S. Santhalingam
Mrs. V. Joseph Gnananthan
Mr. S. Jeyaram
Mr. S. Ravisangar
Mr. R. Nanthakumar
Miss. T. Lalitha
Mr. S. Selvavinayagam

## *Jaffna National College of Education*

### *Advisory Board*

Dr. Thirunavukarasu Kamalanathan - President (Chairman)
Mr. S.K. Yoganathan - Vise President
Dr. Lion. V. Thiyagarajah - Well - Wisher
Prof. Saba Jeyarajah - University of Jaffna
Prof. A. Sanmugadas - University of Jaffna
Mr. S. Thanabalan - Principal, St John's College, Jaffna
Prof. S. Sivalingarajah - University of Jaffna
Dr. K. Visakaruban - University of Jaffna
Mr. Aru. Thirumurugan - Vice - Principal, J/Skanthavarodaya College
Mr. B. Thanabalan - Vice President (Academic & Quality Assurance)
Mr. S. R. Sathiyendrampillai - Vice President (Administration & Finance)

# Our Chief Commissioner



**Mrs. K.M.Dharmalatha**

*(Chief Commissioner of Teacher Education)*

# Our Adl. President



**Mr. S.K.Yoganathan *(Adl. President)***
***B.A.(Hon), Dip.in.Ed, M.A.in.Teacher Education***



**Mr. S.R. Sathiyendrampillai (V,P - Adm, & Fin)**
**B.A, B.Com, HNDA Dip in Ed (Merit), M.Ed**



**Mr. B. Thanabalan (V.P - Academic)**
**B.A, Dip in Ed (Merit), M.Phil in Ed.**



**Mr. K. Kamalanathan (Adi V.P - Adm)**
**B.Sc (Spe in Maths) Dip in Ed.**



**Mr. K. Baskaran (V.P - Con.Edu)**
**B.Sc, Dip in Ed. (Merit), M.Sc in Science Ed**

# இதழுள் இருப்பவை.....


| | |
|---|---|
| யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அறிக்கை | 1 |
| ஆரம்பக்கல்வி மன்றம் - 2005 | 6 |
| நுண்கலைமன்றம் - 2005 | 7 |
| கலாசாரமன்றம் - 2005 | 8 |
| தமிழ் மன்ற அறிக்கை - 2005 | 9 |
| இந்து மன்றம் - 2005 | 10 |
| விசேட கல்வி மன்றம் - 2005 | 11 |
| உடற்கல்வி மன்றம் - 2005 | 12 |
| கிறிஸ்தவ மன்றம் - 2005 | 13 |
| English Literary Association -2005 | 14 |
| Science Union - 2005 | 15 |
| Maths Union - 2005 | 16 |
| Technology Union - 2005 | 17 |
| அரைத் தசாப்தத்தில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கூட்டு - குழு முகாமைத்துவ செயலாற்றுகையின் வரலாற்றுச் சாதனைகள் | 18 |
| நவீனத்துவம், பின் நவீனத்துவம் பற்றி | 25 |
| எமது மண்ணில் வாழும் சான்றோர் வரிசையில் - 4 | 31 |
| பேராயர் ஜெபநேசன் அவர்களின் வாழ்வும் பணியும் விசேட கல்வி ஆசிரியருக்குரிய இலட்சணங்கள் | 36 |
| எமது மண்ணில் சான்றோர் வரிசையில்...... 5 மாஸ்டர் சிவலிங்கத்தின் வாழ்வும் பணியும் | 42 |
| பிடித்ததும் பிடிக்காததும்.... | 46 |
| மாற்றத்திற்கான கல்வி என்ற கருத்திட்டத்தை நோக்கி ..... | 47 |
| A Salute To J.N.C.O.E | 56 |
| நல்லாசிரியர் என்பவர் யார்? | 57 |
| மாணவர் மாண்பு | 59 |
| ஆசியருக்குத் தொழில்சார் கல்வி அவசியம் | 60 |
| யார் துணிவார்.....? | 62 |
| சுனாமி...... | 62 |
| Domain in learning English as a second language | 63 |

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலைத்துறையின் "அழகெழல்" அழகியல் விழிப்புணர்வில் ஆக்கபூர்வ செயற்திட்டம் 66
இந்த நட்சத்திரம் இனியும் ஒளிரும்! 69
கற்பித்தல் தர உள்ளீடுகளின் முக்கியத்துவம்! 74
கலையும் சமூகமும் 76
தமிழ் மொழியின் சிறப்பு 77
ஞானவொளி பகர்வன நூல்களே! 80
உன்னையறிந்தால்..... சிறுகதை 82
ஆசிரியர் - மாணவர் உறவுக்கு பண்பும், பாசமும் கலந்த சமயக்கல்வி 85
கணிதம் ஒரு தொடர்பூடக மொழி 87
மாணவர்களிடத்தில் ஆக்கத் திறன்களை வளர்ப்பதில் ஆசிரியர்களின் பங்களிப்பு வகுப்பறைச் செயற்பாடுகள் 89
அறிவியலும் அழகியலும் வாழ்வின் இருகண்கள் 92
கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் நுட்ப முறைகள் 94
கை கொடுப்பது யார்? 97
ஈழத்தில் தமிழிசை வளர்ச்சி 101
சாரணியத்தின் இலக்கு 104
மதிப்பாவை 106
அழகியல் கல்வியில் நடனத்தின் பங்கு 107
காட்சியும் கவிதையும் I 109
காட்சியும் கவிதையும் II 110
இலங்கை பற்றிய சிறப்புத் தரவுகள் 111
ஓவியர் மு. கனகசபை நேர்காணல் 112
கதை முயல்களும் தவளையும் 114
கலைத்திட்டச் செல்நெறியில் உளவிலின் செல்வாக்கு 115
விசேட கல்வி நிறுவனங்கள்அறிமுகம் - 1சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை 119
விசேட கல்வி நிறுவனங்கள்அறிமுகம் - 2வாழ்வகமும் அதன் வளம் மிக்க பணிகளும் 120
Late Mrs. T. Karthikeyan An - Appreciation 121
எமக்குள் இருக்கும் எழில் மகள்! 122
Personal Memory of Mrs. Thirumagal 122
இத(ய)மார்ந்த நன்றிகள் 123

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அறிக்கை

## 12.07.2003 - 29.07.2005 வரை

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி தனது ஐந்தாவது அகவையினை மனமகிழ்வுடன் பூர்த்தி செய்து பெருமை கொள்கின்றது. இந்த ஐந்து வருடத்துள் அதன் வளர்ச்சி அளப்பரியது. தேவையான பௌதீக வளங்கள், தளபாடங்கள், மற்றும் கல்வி மேம்பாட்டுச் சாதனங்கள் அனைத்தையும் அது பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. கட்டிட வசதிகளைப் பெற்றுக் கொள்ளத்தேவையான காணியினை அன்பளிப்பாகத் தந்துதவிய திரு. தருமலிங்கம் சித்தார்த்தன் அவர்களும் அவரது சகோதரி திருமதி. சித்திரலேகா அவர்களும், கட்டிடங்கள் அமைக்க நிதியுதவியளித்த உலகவங்கியினரும், கட்டிடங்களை மிகச் சிறப்பான முறையில் நேர்த்தியாகவும் விரைவாகவும் அமைத்துத் தந்த கொழும்பு ICC நிறுவனத்தினரும் யாழ்ப்பாணம் ஈறோவில் நிறுவனத்தினரும், கட்டிடப்பொருட்களை கொழும்பிலிருந்து பெற்றுவர வரி விலக்களித்து ஊக்குவித்த கிளிநொச்சி ஆயப்பகுதியினரும் நன்றியுடன் என்றும் நினைவு கொள்ள வேண்டியவர்கள்.

இந்தக் கட்டிடங்களும் வசதிகளும் நாம் சும்மாயிருக்க கிடைத்ததொன்றல்ல கடந்த ஐந்து வருடங்களாக எமது கடும் உழைப்பினால் உருவாக்கப்பட்டதொன்று என்பதை எமது வருங்கால சமூகம் மறந்துவிடக்கூடாது.

பொதுவாக இவ்வாறான பெரிய கருமங்களுக்குப் பின்னால் பலத் பெரிய சக்திகள் நின்றே பணிமுடிக்கப்பட்டிருக்கும். அது அரசியல் சார்ந்ததாகவோ அல்லது பொருளாதாரம் சார்ந்ததாகவோ நின்று தொழிற்பட்டிருக்கும். ஆனால் எமது இப்பாரிய பணி முடிக்க எமது தன்னலமற்ற உழைப்பும் இறை சக்தியுமே துணை நின்றன.

இப்பணி முடிக்க நாம் கல்லெறிகள் சொல்லெறிகள் வாங்காதிருந்ததில்லை. அது அவரவர் சுயநலத்தால் எறியப்பட்டவை. மனதைச் சஞ்சலப் படுத்தினாலும் கொண்டகுறி தவறாது தொழிற்பட்டு வெற்றி கண்டோம்.

எமது வெற்றியில் டாக்டர் லயன். வை. தியாகராசா என்றும் எமக்குப் பக்கத்துணையாக நிற்பவர். அவர்களுக்கும் நிறையப் பங்குண்டு. அவரைக் கல்லூரிச் சமூகம் என்றும் மறக்கக்கூடாது.

அரும்பாடுபட்டுக் கிடைத்த எமது இச்சொத்தைப் பேணிப்பாதுகாக்க வேண்டியது எமது எதிர்காலச் சமூகத்தின் பொறுப்பு. இது சமூகத்தின் சொத்து தனிப்பட்ட சொத்தல்ல. ஆகவே சமூகம் இதனை மிக அவதானத்துடன் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். சுய நல நோக்கை விடுத்து பேரறிஞர் சொக்கன் அவர்கள் கூறியது போல் "வாராது வந்த இந்த மாமணியை"......... பாதுகாத்துக் கொள்ள வேண்டியதும் எதிர்கால சமூகத்தினரிடம் ஒப்படைக்க வேண்டியதும் எம் சமூகத்தினரின் பொறுப்பு.

கல்விச் செயற்பாட்டிலும் எமது கல்லூரி உயர்வாகவே மதிப்பைப் பெறுகின்றது. வேறெந்தக் கல்லூரியிலும் இல்லாதவாறு கூடுதலான

கல்வித்துறைகளும் எமது கல்லூரியிலேயுள்ள மொத்தம் 10 துறைகளில் இங்கு பயிற்சி நடைபெறுகின்றது. அவற்றுள் 4 ஆங்கில மொழி மூலமானது.

எமது சிந்தனையும் செயற்பாடுகளும் சமூக மேம்பாடு நோக்கியதே, இதை நன்குணர்ந்து கொள்ள வேண்டும்.

20.07.2003 பீடாதிபதி தலைமையில் 30 அதிபர்கள் அடங்கிய குழுவினரின் கனடாப் பயணம் தொடர்பான அனுபவங்களின் தொகுப்பு நூல் பீடாதிபதியால் தொகுக்கப்பட்டது. கண்டிமகாநாம வித்தியாலயத்தில் வெளியிடப்பட்டது.

24.07.2003 விஞ்ஞானத்துறையினரின் களப்பயிற்சி நடைபெற்றது.

30.07.2003 புதிய கட்டிடம் தொடர்பான பொறியியலாளர் குழு கல்லூரிக்கு வருகை தந்தது.

08.08.2003 தமிழ் மன்றத்தின் "புலர்வு" சஞ்சிகை வெளியீடு.

07.09.2003 ஸ்ரீ சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்விப்பட்டறை இரண்டு நாட்கள் கல்லூரியில் நடைபெற்றது.

08.09.2003 வேறு பதவியிலிருந்தும் விடுதி அத்தியட்சகராகக் கடமையாற்றிய திரு. N. தென்னக்கோன் வேறு வேலை கிடைத்தால் கல்லூரிக்கு வருவதை நிறுத்திக் கொண்டார்.

11.09.2003 கல்லூரி வளாகத்தில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் வித்தக விநாயகர் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தியும் சங்காபிஷேகமும் நடைபெற்றன.

12.09.2003 கல்லூரியின் சஞ்சிகை "கலாசுரபி" ஆரம்பக்கல்வி மன்றத்தின் "ஆரம்ப அருவி" முகிழ்நிலை ஆசிரியர் செல்வி இ. மீராவின் "தமிழ்த்தேன்" ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன.

04.10.2003 நவராத்திரி விழா நடைபெற்றது.
பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

11.10.2003 நாடகத்துறை முகிழ்நிலை ஆசிரியர்களின் நாடக ஆற்றுகையொன்று நயினாதீவு கலாச்சார விழாவில் மேடையேற்றப்பட்டது.

22.11.2003 கல்லூரியின் ஒளிவிழா நடைபெற்றது.
யா/சென்பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட்தந்தை ஜஸ்ன் ஞான பிரகாசம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

23.11.2003 கல்லூரியில் பயிற்சியை முடித்து வெளியேறும் முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான பட்ட நிறைவு விழா நடைபெற்றது. யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ் அவர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

24.11.2003 2ம் வருட மாணவர்களின் பிரிவுபசார நிகழ்ச்சி ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி விகடகவி திரு. மு. திருநாவுக்கரசு அவர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

01.12.2003 2004ம் கல்வியாண்டுக்கு முகிழ்நிலை ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான நேர்முக பரீட்சை ஆரம்பமாகிற்று.

03.01.2004 பிரதிப் பரீட்சை ஆணையாளர் திரு. போல் அன்ரனி கல்லூரிக்கு விஜயம் செய்தார்.

09.01.2004 பிரதிப் பரீட்சை ஆணையாளர் திரு. தர்மசேன கல்லூரிக்கு விஜயம் செய்தார்.

09.02.2004 2004ம் ஆண்டிற்கான முகிழ்நிலை ஆசிரியர்கள் பதிவு மேற்கொள்ளப்பட்டது.

16.02.2004 இரண்டாம் வருட முகிழ்நிலை ஆசிரியர் செயற்பாட்டால் கல்வியாளர் மத்தியில் பெரும் அதிருப்தி

19.02.2004 நிலைமை சீரானது.

24.02.2004 பெற்றோர் கூட்டம் நடைபெற்றது.

06.05.2004 VSO ஏற்பாட்டில் ஸ்கொட்லன்ட் நாட்டைச் சேர்ந்த திருமதி பற்றீசியா கிறீன்லீல்ட் ஆங்கில விரிவுரையாளராக பதவி ஏற்றார்.

31.05.2004 உலக வங்கி ஆலோசகர் திரு. அசோகா பெரேரா, திரு. றல்வ் றோலின்சன். Dr. ஹேரத் கல்லூரிக்கு விஜயம்.

20.06.2004 ABOE செயலமர்வு கல்லூரியில் நடைபெற்றது.

02.07.2004 உள்ளகப்பயிற்சி பாடசாலை அதிபர்கள் வாண்மைபடுத்துனர் ஆசிரிய மைய முகாமையாளர்கள் சேவைக்கால ஆலோசகர்களுடன் வகுப்பறைச் செயற்பாடு தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

24.07.2004 அழகெழல் போட்டிகள் ஆரம்பம் (யாழ் - கிளிநொச்சி மாவட்டம்) பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட சித்திரம், சங்கீதம், நடனம், நாடகம் போட்டிகள்.

25.07.2004 பெண்கள் சாரணியப் பயிற்சி நடைபெற்றது.

20.08.2004 வித்தகவிநாயகர் சங்காபிஷேகம்.

04.09.2004 அழகெழல் போட்டிகளுக்கான பரிசளிப்பு நடைபெற்றது. வடக்கு கிழக்கு மாகாண கல்விச் செயலர் திரு. ஆர். தியாகலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

02.10.2004 கல்விக் கல்லூரிகள் கிளையின் முன்னால் பிரதம ஆணையாளர் திரு. நிஹால் ஹெரத் கல்லூரி விஜயம்.

06.10.2004 திரு.S.முகுந்தன், திரு. A. இரவீந்திரன், திருமதி. E.B.மரியதாசன், செல்வி. S. மாணிக்கம் இணைக்கப்பட்ட விரிவுரையாளராக கல்லூரியில் சேர்ந்து கொண்டனர்.

08.10.2004 தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்து திரு.சு. சத்தியநாதன் எமது கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று வந்தார்.

| | |
|---|---|
| 30.10.2004 | பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சிநெறிக்கு நேர்முகப்பரீட்சை கல்லூரியில் நடைபெற்றது. |
| 09.11.2004 | திரு. தி. தேவதயாளன் ஆங்கில விரிவுரையாளராக இணைந்து கொண்டார். |
| 23.11.2004 | கடமை நிமித்தம் நோர்வே, பிரான்ஸ் நாட்டுக்கு பீடாதிபதி விஜயம். |
| 14.01.2005 | புதிய கட்டிடங்கள் யாவும் கட்டிமுடிக்கப்பெற்று இன்று பொங்கல் நடைபெற்றது. புதிய அலுவலகத்தில் பணிகள் ஆரம்பமாகின. |
| 28.01.2005 | திரு. S.K. யோகநாதன் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்து இடமாற்றம் பெற்று எமது கல்லூரியில் இணைந்து கொண்டார். |
| 07.03.2005 | Tsunamy Project (சுனாமி செயத்திட்டம்) சம்பந்தமாக 14 முகிழ்நிலை ஆசிரியர்களும் விரிவுரையாளர்கள் திரு. தி. தேவதயாளன், திருமதி. P. வேல்நிதி, செல்வி. இ. செல்வநாயகம் என்னுடன் யா/ஆழியவளை (CTMS, யா/உடுத்துறை ம. வி சென்று கற்பித்தல் பணிகளில் ஈடுபட்டோம் கற்றல் சாதனங்கள் குறிப்புகள் வழங்கப்பட்டன. |
| 12.03.2005 | 2005 கல்வியாண்டுக்கான புதிய முகிழ்நிலை ஆசிரியர் பதிவு நடைபெற்றது. |
| 20.03.2005 | ஆங்கில மொழிமூல கணிதம், விஞ்ஞானம் ஆகிய துறைகள் தேசிய கல்வி நிறுவக Dr. I.L. கினிகே அவர்களின் ஊக்குவிப்பினாலும் வடக்கு கிழக்கு மாகாண கல்விச்செயலர் திரு. R. தியாகலிங்கம் அவர்களின் ஆதரவோடும் முதன்முதலாகக் கல்லூரியில் ஆரம்பம். |
| 02.04.2005 | மனித உரிமைக் கருத்தரங்கு நடைபெற்றது.<br>நூல் வெளியீடு "தேச அபிவிருத்தியில் தமிழர் கல்வி" இடம்பெற்றது. |
| 06.04.2005 | இரண்டாம் வருட மாணவர்களின் கல்விச் சுற்றுலா ஆரம்பமாகியது. |
| 02.05.2005 | கல்லூரியின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நல்லூர் கந்தசாமி கோவிலில் சண்முக அர்ச்சனை நடைபெற்றது. |
| 05.05.2005 | கல்லூரியில் சுதேசிய விளையாட்டுக்கள் இடம்பெற்றன. |
| 07.05.2005 | அழகெழல் 2005 போட்டி பரிசளிப்பு விழா நடைபெற்றது வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் கல்விச் செயலர் திரு. சுந்தரம் டிவகலாவா பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார். |
| 08.05.2005 | கல்லூரியின் ஐந்தாம் ஆண்டு நிறைவு நிகழ்வையொட்டி பேராசிரியர் வித்தியானந்தன் நினைவுச் சொற்பொழிவு பேராயர் எஸ். ஜெபனேசன் அவர்களால் நிகழ்த்தப்பெற்றது. |
| 15.05.2005 | முதற் தடவையாக கல்லூரியின் பெயரால் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் 2ம் நாள் பகல் திருவிழா நடைபெற்றது. இது வருடா வருடம் தொடர ஏற்பாடு செய்யப்பட்டது. |

16.05.2005 பேராசிரியர் ப. சந்திரசேகரம் நினைவுச் சொற்பொழிவு திரு. குமாரசாமி சண்முகநாதன் அவர்களால் நடாத்தப்பெற்றது.

20.05.2005 பேராசிரியர் க. கைலாசபதி நினைவுச்சொற்பொழிவு பேராசிரியர் ந. நித்தியானந்தன் அவர்களால் ஆற்றப்பெற்றது.

25.05.2005 பேராசிரியர் அ. துரைராசா நினைவுச் சொற்பொழிவு கலாநிதி மா. வேதநாதன் அவர்களால் ஆற்றப்பெற்றது.

30.05.2005 பேரறிஞர் கலாநிதி சொக்கன் அவர்களின் நினைவுச் சொற்பொழிவு உபபீடாதிபதி திரு. பா. தனபாலன் அவர்களாலும் பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களாலும் நடாத்தப்பெற்றது.

04.06.2005 கல்லூயின் இல்ல விளையாட்டுப் போட்டி பிரதமவிருந்தினர் யாழ் அரச அதிபர் திரு. மு. கணேஷ் கலந்து கொண்டார்.

05.06.2005 கல்லூரியின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் உழைத்த வைத்திய கலாநிதி லயன். வி. தியாகராசா கருமத்திருதி பட்டமளித்துக் கௌரிக்கப்பட்டார்.

15.07.2005 அகில இலங்கை இந்து மாமன்றமும் தேசிய கல்வியியற் கல்லூரியும் இணைந்து நடாத்திய இந்து மாநாடு கல்லூரியில் கோலோகலமாக ஆரம்பமாயிற்று. தமிழ்நாடு தஞ்சாவூர் பல்கலைக்கழக பேராசிரியர் சோ. ந. கந்தசாமி அவர்கள் பேருரை ஆற்றினார். சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, அருட்கவி விநாசித்தம்பி ஐயா ஆகியோர் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டனர்.

17.07.2005 இந்து மாநாட்டுச் செயலமர்வுகள் 3 சமகால நிகழ்வாகச் சிறப்பாக நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எமது கல்லூரி விரிவுரையாளர்கள் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தனர் மாலை நிறைவு நிகழ்வு இடம்பெற்றன.

22.07.2005 முகிழ்நிலை ஆசிரியர்களது 4 நூல்களும் ஆசிரிய கல்வியானது நூலுமாக மொத்தம் 5 நூல்கள் வெளியீடு.

அபிவிருத்தி உதவியாளராக செல்வி. சசிரேகா லெட்சுமணராஜா எமது கல்லூரியில் இணைந்து கொண்டார்.

24.07.2005 முதலாம், இரண்டாம் வருடத்தினருக்கான பரீட்சை ஆரம்பித்தது

29.07.2005 கல்லூரியின் இரண்டாந்தவணை விடுமுறை ஆரம்பம்.

எமது கல்லூரியின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் பங்கு கொண்டவர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். எமது கல்லூரி இன்னும் வளரவேண்டும். எமது சமூகத்துக்கு அரிய பணிகளை ஆற்ற வேண்டும். எல்லாம் வல்ல இறைவன் இதற்கு அருள் பாலிக்க வேண்டும்.

நன்றி

**கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்**
**(பீடாதிபதி யா.தே.க.க)**

# ஆரம்பக்கல்வி மன்றம் - 2005

"எழுத்தறியத் தீரும் இழி தகைமை" என்ற முதுமொழிக்கேற்ப அனைத்துச் செயற்பாடுகளிலும் அடி நாதமாய் விளங்கி ஒளி கொடுத்துப் பிரகாசிப்பது எமது ஆரம்பக்கல்வி மன்றம். எமது கல்லூரியின் வளர்ச்சிப் படிக்கேற்ப எமது மன்றமும் பல சாதனைகளை நிலை நாட்டி வருகின்றது. இவ்வகையில் எமது மன்றத்தினால் செயற்படுத்தப்பட்ட பயன்மிகு செயற்பாடுகள் பலரது பாராட்டையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

20.03.2005 இல் எமது புதுமுக மாணவர்களை வரவேற்கும் திசைமுகப்படுத்தல் நிகழ்வில் "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்ற நாடகமும் அரங்கேற்றப்பட்டது. ஆரம்பக்கல்வி 2ம் வருட முகிழ்நிலை ஆசிரியர்களால் "ஆக்கச் செயற்பாடு" அலகுகளுக்கேற்ப தயாரித்து செயற்றிட்டம் செயற்படுத்தப்பட்டதுடன் வகுப்பறை மட்டத்தில் காட்சிப்படுத்திக் கணிப்பீடும் செய்யப்பட்டது.

எமது மன்றத்தினால் இவ்வாண்டும் சிறுவர்களுக்கான கதையாக்கப் போட்டி அபிநயப்பாடல், குழுப்பாடல், பட்டி மன்றம் போன்ற செயற்பாடுகள் செவ்வனே ஆற்றப்பட்டன. இனி வருங்காலங்களிலும் எமது மன்றம் இனிதே நடைபெற கல்லூரிச் சமூகத்தின் ஆசியையும், ஒத்துழைப்பையும், இறை ஆசியையும் வேண்டி நிற்கின்றோம்!

"எண்ணென்ப ஏனைய எழுத்தென்ப
இவ்விரண்டும் கண்ணென்ப ஆரம்பக்கல்விக்கு!"

## செயற்குழு

| | | | |
|---|---|---|---|
| ☆ | போஷகர் | :- | பீடாதிபதி |
| ☆ | காப்பாளர் | :- | திருமதி. ஜெ. உதயகுமார் |
| ☆ | தலைவர் | :- | யே. றொக்சூஷினி |
| ☆ | செயலாளர் | :- | த. யசோதா |
| ☆ | பொருளாளர் | :- | ம. சிந்துஜா |
| ☆ | பத்திராதிபர் | :- | பொ. தனுசா |
| ☆ | மன்ற உறுப்பினர்கள் | :- | ந. ஜெயரூபன் |
| | | :- | கை. ராஜினி |

# Non Academic Staff





Primary 2nd Year



Primary 1st Year

# நுண்கலைமன்றம் - 2005

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நடப்பாண்டிற்கான நுண்கலைத்துறை சித்திரம், சங்கீதம், நடனம், நாடகம், பாடநெறிகளை உள்ளடக்கிய மன்றமாக மிளிர்கின்றது.

மேற்படி துறைகளில் பல்வேறு செயற்றிட்டங்களையும் நிகழ்வுகளையும் இம்மன்றமானது நிகழ்த்தி வருகின்றது. கலைநிகழ்வுகள், நூல் வெளியீடுகள், ஓவிய ஆற்றுகைகள், கண்காட்சிகள், இறுவட்ட வெளியீடு, களச்சுற்றுலா போன்ற பல நிகழ்வுகளை நடாத்தியுள்ளது.

இம்மன்றச் செயற்பாடுகளிலே மிகவும் முக்கியத்துவம் பெறுகின்ற ஒன்று 'அழகெழல்' நிகழ்வாகும். எமது கல்லூரியையும் சமூகத்தையும், பாடசாலைகளையும் இணைக்கின்ற பாலமாக அழகெழல் நிகழ்வு அமைந்திருக்கின்றது. இவ்வாண்டு 3ம் தடவையாக இடம்பெற்ற இந்நிகழ்வானது கிளிநொச்சி மாவட்டத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டது. ஓவியம், இசை, நடனம், நாடகம் ஆகிய துறைகளில் சிறப்புறப் போட்டிகள் மார்ச் 25ம், 26ம் திகதிகளில் நடாத்தி மே 7ம் திகதி பரிசளிப்பு விழாவையும் சிறப்புற நடாத்தியுள்ளது. ஒக்டோபர் 7,8,9ஆம் திகதிகளில் பேசும் தூரிகை எனும் ஓவியக் கண்காட்சியினை நடாத்தியுள்ளது. துகிலிகை எனும் காலாண்டு சஞ்சிகையை 07-10-2005 இல் சித்திரத்துறையினரால் வெளியிடப்பட்டுள்ளது.

ஓவியர்களை வரைவதில், சிற்பங்களை ஆக்குவதில் சிறப்பிடம் பெறும் மாணவர்களுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதோடு பிரதி திங்கட்கிழமைகளில் மாலை நேரக் கலை நிகழ்வுகளையும் நடாத்தி வருகின்றது.

போஷகர் - பீடாதிபதி
மன்ற இணைப்பாளர் - திரு. க. ரட்ணேஸ்வரன்
துறைசார் பொறுப்பு விரிவுரையாளர்கள்

| | |
|---|---|
| இசை - | திருமதி வி. நரேந்திரா<br>திருமதி சி. குகநேசன் |
| நடனம் - | திருமதி ஞா. கணேசநாதன்<br>திருமதி பு. வேல்நிதி |
| நாடகம் - | திரு. க. இ. கமலநாதன்<br>திரு. க. திலகநாதன் |
| சித்திரம்- | திருமதி ப. மரியதாசன் |

## மன்றப் பிரதிநிதிகள்

தலைவர்: கோ. மதனகோபன்
செயலாளர்: தாட்சாயணி
பத்திராதிபர்: கார்த்திகா. நி
பொருளாளர்: ஸ்ரீ. ஸ்ரீதக்சன்

## செயற்குழு உறுப்பினர்கள்

கா. சுதாசினி
மா. றொசானி
பொ. தனயந்தி
ஜெ. ஜெயந்தா
க. கௌசிகா
கி. கியோஜினி
தெ. ரேணுகா
பா. சத்தியா

# கலாசாரமன்றம் - 2005

சீரழிந்து போய்க் கொண்டிருக்கும் எமது கலாசாரத்துக்கு புத்துயிர் ஊட்டும் ஒரு செயற்பாடாகவும், எதிர்காலத்தை சிருஸ்டிக்கும் சிற்பிகளாகிய, எதிர்கால சந்ததியை உருவாக்கும் ஆசிரியர்களுக்கு கலாசாரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கலாசாரமன்றமானது பீடாதிபதியினதும் மன்றக் காப்பாளரினதும் வழிகாட்டலில் இயங்கி வருகிறது கலாசார மன்றமானது நடப்பாண்டில் பல திட்டங்களை முன்னெடுத்து, நடத்தியுள்ளது. அவையாவன.

1) 6ம் அணி மாணவர்களின் திசைமுகப்படுத்தல் முதல் நாள் நிகழ்வு

2) 6ம் அணி முகிழ்நிலை ஆசிரியர்களின் வரவேற்பு விருந்துபசாரம்

3) கல்விச்சுற்றுலா ~ 2005

4) உடற்கல்வி மன்றத்துடன் இணைந்து 2005ம் ஆண்டிற்கான கலாசார விழாவையும் விளையாட்டுப் போட்டியையும் நடத்தியது.

இக் கல்விச் சுற்றுலாவானது 5 நாட்கள் நடைபெற்றன. இது ஏனைய கல்வியியற் கல்லூரிகளுடன் தொடர்பை ஏற்படுத்தும் ஒரு உறவுப்பாலமாகவும் ஆசிரியருக்கு ஒரு நேரடி அனுபவமாகவும் அமைந்தது இக் கல்விச் சுற்றுலாவில் அநுராதபுரம், சிகிரியா, பொலநறுவை, கண்டி, நுவரெலியா ஆகிய இடங்கள் பார்வையிடப்பட்டது.

எமது மன்றமானது இனிவரும் காலங்களில் சர்வதேச ஆசிரியர் தினத்தையும், 5ம் அணி மாணவர்களுக்கு பிரிவுபசார நிகழ்வையும் நடத்த திட்டமிட்டுள்ளது.

## மன்ற அங்கத்தவர்

| | | | |
|---|---|---|---|
| ★ | போஷகர் | :- | பீடாதிபதி |
| ★ | காப்பாளர் | ~ | திரு. க. இ. கமலநாதன் |
| ★ | தலைவர் | ~ | திரு. ஜெ. ஜெகரூபன் |
| ★ | உபதலைவர் | ~ | திரு. சி. கஜேந்திரன் |
| ★ | செயலாளர் | ~ | திரு. ஞா. திரோணன் |
| ★ | பொருளாளர் | ~ | திரு. த. தாசன் |
| ★ | பத்திராதிபர் | ~ | சி. ஆரபி |

## செயற்குழு உறுப்பினர்

க. பரமசிவம்
ப. ஜெகரதி
மொ. மொகமட்றியாஸ்
சி. மாலதி
செ. அரவிந்தன்
க. துசியந்தி
அ. அருந்ததி
சோ. சத்தியகலா

சி. குகதாஸ்
வே. லலிதா
ம. ஜேன்யாழினி
சோ. கோகுலன்
சி. சுதர்சினி
வை. லோகதர்க்ஷா
ச. கிருசாந்
இ. நிசாந்தன்
து. அயூரன்



Art 2nd Year



Art 1st Year



Music 2nd Year



Music 1st Year

# தமிழ் மன்ற அறிக்கை - 2005

"தேமதுரத்தமிழ் ஓசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற வாக்கிற்கிணங்க எமது தமிழ் மன்றம் தனது செயற்பாடுகளை செவ்வனே ஆற்றி வருகின்றது.

2005ம் ஆண்டிற்கான மன்றங்களின் செயற்பாடுகள் எமது தமிழ் மன்ற நிகழ்வுகளோடு ஆரம்பமானது. அந்த வகையில் எமது முதலாவது மன்றச் செயற்பாடுகள் 30.03.2005 புதன்கிழமை பி.ப. 5.00 - 6.00 மணி வரை கல்லூரியின் பிரதான அரங்கில் "இருள் அகற்றும் ஒளி" எனும் கல்விச் சமூக நாடகம் உட்பட பல கலை நிகழ்ச்சிகளை உள்ளடக்கியதாக இந்த ஆண்டிற்கான பிரதான செயற்பாடாக "புலர்வு" கையெழுத்துச் சஞ்சிகையை வெளியீடு செய்ய உத்தேசித்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

மேலும் இவ்வருடத்தில் சகல முகிழ்நிலை ஆசிரியர்களுக்குமான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளை நடாத்த தீர்மானித்துள்ளோம். வருட இறுதியில் முத்தமிழ் விழாவினையும் சிறப்பாக நடாத்த உத்தேசித்துள்ளோம்.

| | | |
|---|---|---|
| ★ போஷகர் | :- | பீடாதிபதி |
| ★ காப்பாளர் | :- | திருமதி. கௌரி சுரேசன் |
| ★ தலைவர் | :- | இ. இதயராஸ் |
| ★ செயலாளர் | :- | சி. கௌசிகன் |
| ★ பொருளாளர் | :- | செ. சியாமளா |
| ★ பத்திராதிபர் | :- | ஜானகி |
| ★ உபசெயலாளர் | :- | பா. சசீவன் |
| ★ உபபத்திராதிபர் | :- | பா. நிஷாந்தன் |

## மன்ற அங்கத்தவர்கள்

சு. அங்கேஸ்வரி
ம. குபேந்தினி
பத்மலோஜினி
சோ. ஜெயசுதன்
க. கஸ்தூரி
இ. சிறீதரன்
ம. சகிலா
N. கார்த்திகா
பு. பிரகலாதன்
சு. திலீபன்
சு. செல்வராணி
S. சிபேந்தினி
A. சிவசுதர்மினி
ஆ. பாமினி
ஆ. ஆ. சியாம்
S. கிருபானந்தி
A. தனுசியா

# இந்து மன்றம் - 2005

இன்றைய தகவல் தொழில்நுட்ப உலகிலே இறைவழிபாடும் சமய நம்பிக்கையும் மக்கள் மத்தியிலே அருகி வருவதாகவே காணப்படுகிறது. இந்நிலையானது மனிதவிழுமியங்களை கேள்விக்குறியாக்கி இன்றைய சமுதாயத்தை குறிப்பாக இளம் சமுதாயத்தை ஆன்மீக வழியில் இருந்து விலகி நடக்கவே செய்கின்றது.

அந்த வகையிலே எதிர்கால சந்ததியை செதுக்கும் சிற்பிகளை உருவாக்கும் முகிழ்நிலை ஆசிரியர்களை ஓர் ஆன்மீக ரீதியில் நெறிப்படுத்தும் நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி நடாத்திய பெருமை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் இந்து மா மன்றத்தையே சாரும்.

- அந்த ரீதியில் புதிய இந்து மா மன்றம் 11-02-2005 இல் மேற்குறிப்பிட்ட அங்கத்தவர்களை உள்வாங்கி தனது செயற்பாட்டை ஆரம்பித்தது. மன்றத்தினால் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டன. அதாவது
- உலக சைவப் பேரவையினால் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட நிதி சேகரிப்பில் வழமை போன்றே இம்முறையும் யாழ்ப்பாணத்தின் பல்வேறு ஆலயங்களில், பாடசாலைகளில் கொடிதினத்தை நடாத்தியமை.
- கல்லூரியின் ஆண்டு நிறைவு விழாவினை நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் பங்குபற்றியமை (16-05-2005)
- அகில இலங்கை இந்து மா மன்றமும் யா. தே. க. கல்லூரியும் இணைந்து நடாத்திய இந்து மாநாட்டில் இணைந்து செயற்பட்டமை.
- இந்து மா மன்றத்தின் மன்ற நிகழ்வை சிறப்பாக நடாத்தியமை
- விநாயகர் சதுர்த்தி பூஜைகள், விசேட வெள்ளிக்கிழமை வழிபாடுகள் என்பவற்றை தொடர்ச்சியாக நடாத்தி வருகின்றமை என்பவற்றை குறிப்பிடலாம்.

மேலும் நவராத்திரி பூஜையும், வாணி விழாவும், வாணி விழாப் போட்டிகளும் நடாத்துவதற்கு உத்தேசித்துள்ளோம்.

| | | |
|---|---|---|
| போஷகர் | - | பீடாதிபதி |
| காப்பாளர் | - | திருமதி. ஜெ. தியாகலிங்கம் |
| தலைவர் | - | சி. சிறீஸ்கந்தமூர்த்தி |
| உபதலைவர் | - | ச. ஜெயப்பிரகாஷ் |
| செயலாளர் | - | வ. அரவிந்தன் |
| உபசெயலாளர் | - | மு. ஜங்கரன் |
| பொருளாளர் | - | இ. அருள்வதனா |

## மன்றப்பிரதிநிதிகள்

| | |
|---|---|
| லோ. தர்சிகா | க. பரமசிவன் |
| த. பிரியதர்சினி | சி. கௌசிகள் |
| த. கஜந்தினி | தி. கமலதாசன் |
| K. ஜெயதர்சினி | மதன்ராஜ் |
| T. தயாளினி | T. தாசன் |
| S. கௌசல்யா | நா. மயூரன் |
| வி. கஜலஷ்மி | P. சசீபன் |
| தெ. வாசுகி | K. மோகனதீபன் |
| K. புஷ்பிகா | K. நிசாகரன் |
| | R. புவனசிங்கம் |

# விசேட கல்வி மன்றம் - 2005

யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியில் தமிழ்மொழி மூலம் முதன்முதலாக விசேட கல்வி கற்கை நெறி - 2004ல் ஆரம்பிக்கப்பட்டது. இது கல்வியியற் கல்லூரி வரலாற்றின் குறிப்பிடத்தக்க மைல் கல்லாகும். இக்கற்கை நெறியினை மேலும் வினைத்திறன் மிக்கதாக்கும் வகையில் 2005ம் ஆண்டு விசேட கல்வி மன்றம் ஆரம்பிக்கப்பட்டது. இம் மன்றத்தின் அங்கத்தவராக 1ம் வருட 2ம் வருட விசேடகல்வி முகிழ்நிலை ஆசிரியர்கள் உள்ளனர். இக்கற்கை நெறியினை வினைத்திறன் உள்ளதாக்கும் வகையில் பல்வேறு செயற்பாடுகளினை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வருடத்தின் செயற்பாடுகளாவன 23-03-2005ல் கோண்டாவிலில் அமைந்துள்ள மெதுவாக உளவளர்ச்சியடையும் பிள்ளைகளின் பாடசாலையான உளவர்ச்சியடையும் பிள்ளைகளின் பாடசாலையான "சிவபூமிக்கு" சென்று விசேட கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் நேரில் அவதானிக்கப்பட்டது.

19-03-2005 ல் இலங்கையில் உள்ள முக்கியமான விசேட பாடசாலைகளின் நிலையங்களினை அடையாளம் காட்டும் "இலங்கைத் தேசப்படம்" ஒன்று தயாரித்து வெளியிடப்பட்டது.

06-06-2005 தொடக்கம் 08-06-2005 வரையான நாட்களில் விசேடகல்வி தொடர்பான "விசேட செயல்முறை பயிலமர்வு" ஒன்று நடாத்தப்பட்டது.

21-03-2005 6ம் அணி மாணவர்களின் திசை முகப்படுத்தல் நிகழ்வில் மன்றத்தின் சார்பில் "கலை நிகழ்வுகள்" நடாத்தப்பட்டது.

மேலும் மூன்றாம் தவணை இறுதிக்குள் எமது மன்றமானது

விசேட கல்வி தொடர்பான விழிப்புலனிழந்த மாணவர்களிற்குரிய "வாழ்வகம்" சென்று பொருத்தமான பயிற்சிகளினை முகழ்நிலை ஆசிரியர்கள் பெறவுள்ளனர்.

விசேடகல்வி நூல் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

சைகைமொழி தொடர்பான "இறுவெட்டு" ஒன்று வெளியிடப்படவுள்ளது.

## விசேட கல்வி மன்ற உறுப்பினர்கள்

- போஷகர் :- பீடாதிபதி
- மன்றக் காப்பாளர் :- செல்வி இ. செல்வநாயகம்
- தலைவர் :- யோ. துஸ்யந்தன்
- செயலாளர் :- சி. சிவாகரன்
- பொருளாளர் :- ம. குபேந்தினி
- உபதலைவர் :- சி. பகீதரகுமார்
- செயலாளர் :- ப. பரணிதரன்
- பத்திரிகையாசிரியர் :- சி. சிவஜெயந்தி

# உடற்கல்வி மன்றம் - 2005

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முகிழ்நிலை ஆசிரியர்களின் உடல் உள விருத்தியை நோக்கமாகக் கொண்டு உடற்பயிற்சி, விளையாட்டு என்பன கல்லூரியின் நாளாந்த செயற்பாடுகளின் முக்கிய இடம் பெறுகின்றமை உடற்கல்வியின் இன்றைய தேவையை வலியுறுத்துவதாக உள்ளது. எமது மன்றம் வருடாந்த செயற்பாடுகளை திட்டமிட்டு மேற்கொண்டு வருகின்றது.

வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி 04-06-2005 அன்று பி.ப 2.00 மணிக்கு கல்லூரியின் வீரசங்கிலியன் மைதானத்தில் நடைபெற்றது. பீடாதிபதி கலாநிதி தி. கமலநாதன் அவர்களின் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட செயலர் திரு. K. கணேஸ் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. R. றொகான் இராஜசிங்கம் அவர்களும் திரு. R. பொன்குமார் அவர்களும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் திருமதி பரமேஸ்வரி கணேஸ் அவர்கள் பரிசில்கள் வழங்கி கௌரவித்தார்.

மற்றும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட நிகழ்வையொட்டி ஆசிரிய மாணவர்களுக்கிடையிலான பாரம்பரிய விளையாட்டுக்கள் நடைபெற்றன. இந்நிகழ்விற்கு யா/இந்துக்கல்லூரி அதிபர் திரு. ஸ்ரீகுமரன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். ஓலைபின்னுதல், முட்டியுடைத்தல், தேங்காய் உடைத்தல் கயிறிழுத்தல் போன்ற விளையாட்டுக்கள் நடைபெற்றன.

வருடா வருடம் எமது அணிகள் கலந்து கொள்ளும் சினேக பூர்வமான உதைபந்தாட்ட போட்டி கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை அணியுடனும் துடுப்பாட்டப் போட்டி யாழ் பிரதம தபாலக அணியுடனும் நடைபெற்றன.

17-06-2005, 18-06-2005 ஆகிய தினங்களில் நில்வள தே.க. கல்லூரியில் பதினேழு கல்லூரிகளுக்கிடையிலான உதைபந்தாட்டம், வலைபந்தாட்டம் ஆகிய போட்டிகளில் எமது கல்லூரி இரு வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுக் கொண்டது.

மேலும் 2005ம் ஆண்டுக்கான உடற்கல்வி மன்ற ஏற்பாட்டில் கல்லூரியின் பாட நெறி ரீதியிலான ஆண்கள், பெண்களுக்கான உதைபந்தாட்டம், கரப்பந்தாடம், துடுப்பாட்டம், எல்லே, வலைப்பந்து என்பன ஒழுங்கமைக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. அத்துடன் "திடம்" கையெழுத்துச் சஞ்சிகை வெளியீடுகள் தொடர்பான நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டு இருக்கின்றன.

## செயற்குழு

- போஷகர் :- பீடாதிபதி
- காப்பாளர் :- செல்வி. கி. கந்தசாமி
- தலைவர் :- செல்வி. தி. காயிஸ்திரி
- செயலாளர் :- தி. உமாகாந்தன்
- பொருளாளர் :- சி. லெனின்
- பத்திராதிபர் :- தெ. மணிவண்ணன்



Special Education 2nd Year



Special Education 1st Year



Science 1st Year



Maths 1st Year

# கிறிஸ்தவ மன்றம் - 2005

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் எமது கிறிஸ்தவ மன்றம் ஆனது 10-02-2005 திகதி புதிய நிர்வாகம் உருவாக்கப்பட்டது. எமது கல்லூரியில் எமது பிரதானமான செயற்பாடாக சிற்றாலயம் அமைக்கும் பணி சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அதற்காக எமது கிறிஸ்தவ மாணவர்கள் பல சிரமதானப் பணிகளை அங்கே நிகழ்த்தியுள்ளார்கள்.

யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியிலே கடந்த வருடம் கிறிஸ்துவின் பிறப்பினை முன்னிட்டு ஒளி விழாவினையும் விசேட திருநாள் திருப்பலியினையும், கலை நிகழ்வினையும் மிகச் சிறப்பாக எமது மன்றம் நடாத்தியது. அது போலவே இவ்வருடமும் எமது கல்லூரியில் ஒளிவிழா நிகழ்வினை நடாத்த உத்தேசித்துள்ளது.

வருடா வருடம் எமது கல்லூரி தினத்தை முன்னிட்டு அன்றைய நாளிலே அனைத்து மாணவர்களையும், விரிவுரையாளர்களையும், யாழ்ப்பாணம் புனித மரியாள் பேராலயம் அழைத்துச் சென்று விசேட திருப்பலிகளை ஒழுங்கு செய்துள்ளது. இச் செயற்பாடானது எமது கல்லூரியினுள் மாத்திரம் நில்லாது சமூகத்துடன் இணைந்த செயற்பாடாக அமைந்துள்ளது.

## செயற்குழு

| | | |
|---|---|---|
| போஷகர் | : | பீடாதிபதி |
| காப்பாளர் | : | திரு. பா. தனபாலன் |
| தலைவர் | : | அ. நிமலகாந்தன் |
| உபதலைவர் | : | ஸ். சுபிதர் பறுனாந்து |
| செயலாளர் | : | ஜே. அ. மில்ரன் குருஸ் |
| பொருளாளர் | : | சு. நிர்மலவாசன் |
| பத்திராபதிபர் | : | செ. அனுசிலா |

## பிரதிநிதிகள்

பா. ஜெனட்ராஜ்
எ.வி. புரூனோடயஸ்
அ. கொன்சேப்ரா
ச. ஜெயசீலன்
சோ. ஜெயசுதன்
ஜோ. மேரி மேகலா
கி. கிருகான்சி
அ. நிமலகாந்தன்

ஜெ. ஆர்லிசிராந்தி
க. மோகனா
அ. ஜெனாட் நிரோசன்
ரா. கலைவாணி
அனஸ்ரி பறுனாந்து
ம. கிறிஸ்னனேசினி
க. ஜெயதர்சினி
அ. டொறினா
ப. பாமா

# English Literary Association -2005

It gives mea great pleasure in submitting the Annual Report of the English Union for the year of 2004.

We have had a successful year in organizing activities for the students enable them to appreciate more English

Election of new office bearers to English union was taken place on 18.02.2005. We welcomed our 1st years through our English literary Association during the orientation programme

Now our magazine "JACOLLED spring" is in progress and in the near future it will be published by our union.

The success of the union's endeavors has been greatly due to the support and guidance given by the president, vice presidents, vice patron, and lecturers.

Finally I thank all the members and the 1st and 2nd year prospective teachers for their cooperation they gave us to make the function of our union a success

| | | |
|---|---|---|
| Patron | :- | President |
| Vice - Patron | :- | Mrs. S. Sivapatham |
| `Chairman | :- | S. Janagan |
| Vice - President | :- | S. Kajenthiran |
| Secretary | :- | A. Tharsini |
| Asst. Secretary | :- | T. Hemalogini |
| Treasurer | :- | M. Thuseeban |
| Editor | :- | K.S. Gnaneswary |
| Sub - Editor | :- | S. Douglas |



English 2nd Year



English 1st Year



Library Science 2nd Year



Library Science 1st Year

# Science Union - 2005

It is indeed with great pleasure that I submit the annual report of the "Science Union".

Since we don't have science course for 5th batch at J.N.C.O.E, Some activities have been done and some are arranged to be done in future.

Prospective teachers visited to the farm school, Juice factory and weather forecasting station we brought Grade 7 Students from Jaffna Hindu College to conduct the model class in the second term of this year.

Attempts are made to release our 'Kuviyam Mangazine' as 'FOCUS' in the $1^{st}$ term of 2006.

We are going to implement a plan for developing trip method for our prospective teachers in the first term of 2006. Science day' will be celebrated in the $2^{nd}$ term of 2006.

Finally I extend my sincere thanks to all the member who gave us co-operation and encouragement to carry-out the activities of the Union.

I Wish the Science Union all success in the years to come.

| | | |
|---|---|---|
| **Patron** | :- | **President** |
| **Voce Patron** | :- | **Mrs. C. Nagendran** |
| **President** | :- | **Mr. A.G. Niroshan** |
| **Vice President** | :- | **Miss. Y. Shobiga** |
| **Vice Secretary** | :- | **Miss. V. Kanagamanogary** |
| **Treasurer** | :- | **Miss. Y. Yosotha** |
| **Editor** | :- | **Miss. A. Rathna** |
| **Vice Editor** | :- | **Miss. V. Logathaksa** |

*Committee members*

S. Vinsana
S. Jasotha
J. Kaviyarasi
M. Thusar
S. Pakkijam
S. Vasanthy
S. Sarala
N. Subitha
K. Rajavani

# Maths Union - 2005

We are glad that the maths and Science Courses (English Medium) have been started from this year in our College of Education. As a part of Our Learning activities, Our union has been established and conducted a lot of useful activities with the guidance and valuable suggestions of our President, Vice Presidents and Teacher Educators.

Our Union has decided to conduct the following activities

1) Project on analyzing the results of G.C.E (O/L) Students in Jaffna District
2) Releasing Hand Written Magazine
3) Compact Disk of Mathematics Teaching - Leaning Activities

We hope that you would extent your co-operation to conduct valuable activities on behalf of Our Union in the future

The following office bearers were elected or 14/07/2005

## Names of office bearers

| | | |
|---|---|---|
| **Patron** | :- | **President** |
| **Nice Patron** | :- | **Mr. K. Baskaran** |
| **President** | :- | **Mr. T. Sananthanan** |
| **Secretary** | :- | **Miss. V. Meera** |
| **Editor** | :- | **Mr. S. Mayooran** |
| **Vice President** | :- | **Mr. T. Sasikaran** |
| **Vice Secretary** | :- | **Miss. P. Priatharsiny** |
| **Treasurer** | :- | **Miss. T. Lavaniya** |

## Representatices of Course

| | |
|---|---|
| **Miss. L. Jamuna** | **Mr. A. Syman** |
| **Miss. N. Thaadchajini** | **Miss. Anthony Sukirabama** |
| **Miss. K. Kalaivaani** | **Miss. S. Kavitha** |
| **Miss. S. Sujeepa** | **Miss. F. Austy** |



Drama 2nd Year



Drama 1st Year



Dance 2nd Year



Dance 1st Year

# Technology Union - 2005

Information technology has been identified as one of the fastest growing sectors in the world. So the members of Information Technology union of Jaffna National College of Education were elected on 11th of February 2005, thereafter we have done the orientation program on 18th of March 2005 through our union which has been conducting various programmes since then The new computer Lab has been arranged by our union. We have conducted the seminars of the Hindu Conference on 15th of July 2005 with the help of our Lecturer Miss. V. Navaratnam. Now our Information Technology Magazine is in progress and it will be published by our union. We hope our union will proceed its duties according to our abilities and facilities.

## Executive Committee

| | | |
|---|---|---|
| Patron | - | Dr. T. Kamalanathan |
| Vice Patron | - | K. Kamalanathan |
| Chairman | - | E. W. Bruno Dias |
| Secretary | - | P. Sujanthiny |
| Vice president | - | N. Umashankar |
| Assistance Secretary | - | T. Kalaipriya |
| Treasurer | - | S. Sumathy |
| Editor | - | S. Sivarangani |
| Sub Editor | - | R. Srithran |

### *Committee members*

R. Ithayaras
V. Chandramohan
R. Raji
R. Angesewary
K. Kowsiga
S. Nesaraja
T. Karthika
S. Arani
S. Rajamalar
T. Thadsayini
G. Wijiyabama
S. Suthakaran
K. Tharsini
K. Kokilan
A.P. Thayaparan
T. Donrologan
D. Elilveni

## அரைத் தசாப்தத்தில்
## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
## கூட்டு - குழு முகாமைத்துவ செயலாற்றுகையின்
# வரலாற்றுச் சாதனைகள்

**திரு. பாலசுப்பிரமணியம் தனபாலன்**
உபபீடாதிபதி (கல்வியும் தர மேம்பாடும்)

*மனிதன் இயற்கையாகவே சமூகப் பற்றுடையவன். ஏனையோருடன் சேர்ந்து வாழ விரும்புபவன். சில நேரங்களில் போட்டியிட்டும் சில நேரங்களில் ஒத்துழைத்தும் வாழ்கின்றான். கூடி வாழ வேண்டும் என்ற விருப்பம் அனுபவத்தினால் எழும் ஆர்வமல்ல. பெருமளவு இவ் விருப்பம் இயற்கையாகவே மனிதனிடம் அமைந்ததாகும். அவன் ஒரு சமூக விலங்காகவே செயலாற்றுகின்றான்.*

*தனி மனிதன் பிறருடன் கூட்டுச்சேரும்போது அவனது நடத்தை முறை மாற்றமடைகின்றது. மனித நடத்தையை முகாமை செய்யும் உளவியல் மனிதனது கூட்டுணர்வையும் ஆராய்கின்றது. தனிமனிதர்களின் சிந்தனை - சொல் - செயல் - உணர்ச்சிகள் ஆகியன எல்லாம் அவர்கள் கூட்டுணர்வாகச் செயற்படும் போது வெகுவாக மாற்றமடைகின்றன. தனிப்பட்டவராக இருக்கும் போது செய்யாத, செய்யத்துணியாத செயல்கள் பலவற்றை கூட்டுணர்வுடன் செயற்படும் போது சாதனைகளைச் செய்ய முடியும். இது தொடர்பான முகாமைத்துவ உளவியல் ஆய்வுகள், குழுமனவியல்* (Group Psychology) *என்ற பிரிவினூடாகப் புதிய பரிமாணங்களை எடுத்தியம்புகின்றது.*

*இக் கூட்டுக் குழுவினர்களின் மூலமே யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கடந்த ஐந்து வருடங்களில் வரலாற்றுச் சாதனையைப் படைத்திருக்கின்றது.*

*2000 ஆம் ஆண்டு கொட்டில்களில், மரநிழல்களில் நடைபெற்ற கல்விச் செயலமர்வுகள் 2005ம் ஆண்டு தனது சொந்தக் காணியின் பாரிய கட்டடத் தொகுதியில் கல்விச் செயலமர்வுகள் நடைபெறுகின்றன.*

*ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாண்மையுள்ள ஆசிரியர்கள் சமூகத்திற்குக் கையளிக்கப்பட்டனர்.*

*இலங்கையில் முதன்மைத் தேசிய கல்வியியற் கல்லூரியாகத் தெரிவு செய்யப்பட்டு* "Pilot College" *செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமை.*

*பாடசாலை நோக்கிய பரந்த அளவிலான கல்வியியல் செயற்திட்டங்கள், செயல் நிலை ஆய்வுகள், செயற்பாட்டுடன் கூடிய நவீன கற்றல் - கற்பித்தல் முறையியல்கள் பிரயோகிக்கப்பட்டமை.*

விசேட கல்வி, நாடகமும் அரங்கியலும் ஆசிரியர் கல்விப் பாடநெறிகள் தமிழ் மொழி மூலம் முதன் முறையாகத் தொடங்கப்பட்டமை.

ஆங்கில மொழிமூல, நூலக விஞ்ஞானம், ஆங்கிலம், கணிதம் பாட நெறிகள் பயிற்றுவிக்கப்படுதல்.

கல்வியியல் ஆய்வுகள், பிரச்சினைகள் தொடர்பான ஆய்விதழ்கள், ஆய்வறிக்கைகள், நூல் வெளியீடுகள் மேற்கொள்ளப்படுகின்றமை. "கல்வியியல்" ஆய்வு செயலமர்வுகளையும், மகா நாடுகளையும் மேற் கொள்ளல்.

தொடருறு ஆசிரியர் பயில்வுகளை வதிவிடத்துடனும் வார இறுதி நாட்களிலும் பிரதேச ஆசிரியர்களுக்கு வழங்குதல் என்ற வகையில் ஆசிரியத்துவத்தை மேம்படுத்தி தேச நிர்மானப்பணிகளை ஆற்றி வருகின்றது. இதற்கான அடிப்படைகள் பீடாதிபதி, உபபீடாதிபதிகள், பதிவாளர், கல்வியியலாளர்கள், கல்விசாரா ஊழியர்கள், முகிழ்நிலை ஆசிரியர்கள், குழுச் செயலாற்றுகைகளின் பெறுபேறாகவே உள்ளது. இதுவே இன்றைய நவீன மனிதவள முகாமை வாண்மைத்துவ பயில்வை வழங்கும் நிறுவனத்தின் கூட்டுணர்வினூடான குழு நடத்தையின் இயல்புகள் (Characteristics of Group behavior) அதன் உயர் சாதனைக்கு வழிகாட்டிய வரலாறாகவே யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உயர் சாதனை வரலாறு மிளிர்கின்றது.

## மனிதவள முகாமையில் குழு நடத்தை இயல்புகள்

I. பொது நோக்கம் அல்லது இலட்சியம் (Common Goals, Ideals and interests) குழுவில் உள்ளோர் அனைவரும் பொது நோக்கத்தை அடைய பாடுபடுவர், தம்மை அர்ப்பணித்து தியாகம் செய்தல்.

II. ஒத்த மனப்பான்மையுடன் செயற்படல் (Similar behavior and attitude) - தம் நிறுவன வளர்ச்சிக்காக அனைவரும் ஒருங்கிணைந்து செயற்படல்.

III. பரஸ்பர பொறுப்புணர்வு (Mutual Obligation) - உறுப்பினர் ஒருவரின் தேவையை பிற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தத்தம் தேவையைப் போன்று எண்ணிச் செயற்படல்.

IV. ஒன்றிய உணர்வு (Sense of Oneness) - கூட்டுணர்வின் அடிப்படையினூடு குழுவில் உள்ளோர் அனைவரும் ஒருவரோடு ஒருவர் நெருங்கி தொடர்பு கொண்டு ஒத்த கருத்துடன் செயற்படல்.

V. உறுப்பினர்கள் மீது குழு நடத்தையின் செல்வாக்கு - (Influence of the group Characteristics) பிழையான தவறான செயற்பாடுகள் சிதைந்து புதிய வழிகளைக் காட்டியமை.

கூட்டுணர்வினூடான குழு நடத்தை தேவைகளையும், சமூக - உளவியல் காரணிகளையும் சார்ந்துள்ளது. குழு உறுப்பினர், குழுத்தலைவர் ஆகியோரது இயல்புகள், குழுவின் பொது நோக்கங்கள், இலட்சியங்கள், குழு செயற்படும் சூழ்நிலைகள் ஆகியவற்றைப் பொறுத்தே குழுவின் அமைப்பும் அது இயங்கும் முறையும் அமைகின்றது. மேலும் குழு நடத்தையை உருவாக்குவதில் ஒத்துணர்வு அல்லது பரிவு (Sympathy) கருத்தோற்றம் (Suggestion), பார்த்துச் செய்தல் அல்லது பின்பற்றுதல் (Imitation) ஆகியவை உளவியல் ரீதியான மனிதவள முகாமைத்துவ சக்திகளாக உள்ளன.

## பரிவு

ஒரு கூட்டுணர்வான குழுவில் ஒருவன் பெற்றுள்ள மனவெழுச்சி விரைவில் மற்ற எல்லா உறுப்பினர்களிடமும் பரவி, அவர்களையும் அத்தகைய மனவெழுச்சியை அடையச் செய்கின்றது. அதாவது குழுவிலுள்ள பிறரது உணர்ச்சிகளையும் மனவெழுச்சிகளையும் நம்முடையனவாக்கிக் கொள்வது ஒத்துணர்வு அல்லது பரிவு எனப்படுகின்றது. இது உறுப்பினர்களிடையே ஒற்றுமையுணர்ச்சியை உண்டாக்குகின்றது. வலிமையையும் வழங்குகின்றது. சமூக - பாடசாலை - கல்வி நிறுவனங்களின் அறநெறி வளர்ச்சியில் பரிவின் பங்கு பின்வருமாறு உள்ளது.

- ☆ பாடசாலை - வாண்மைத்துவ நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள் தோழமை கொண்டு கூட்டுணர்வை ஏற்படுத்தல்.
- ☆ சமூகத்தில் பிறரது இன்ப - துன்பங்களில் நாம் பங்கெடுத்துக் கொண்டு உறவை விருத்தியாக்கல்.
- ☆ ஒத்துணர்வினூடாக மெய்யான ஒழுக்க நடத்தை ஏற்படல்.
- ☆ நன் நடத்தையை மகிழ்ச்சியோடு வரவேற்கும் ஆசிரியர், தவறான நடத்தையினைக் காணும் போது தமது அருவருப்பைக் காட்டுவாராயின் ஒத்துணர்வின் வழியே இம்மனவெழுச்சிகள் மாணாக்களிடையே பரவி அவர்களுக்கு நன்நடத்தையில் மகிழ்ச்சியையும், தவறான நடத்தையில் வெறுப்பும் கொண்டு செயற்படுவர்.

ஊழியர்கள், மாணவர்கள், அங்கத்தவர்கள் கூட்டுணர்வுடன் கல்வி, கலை, அழகியல், பண்பாட்டு நிகழ்வுகளுடன் இரண்டறக் கலத்தல்.

## கருத்தேற்றம் (Suggestion)

பிறருடைய கருத்துக்களை, நடத்தைகளை, எண்ணங்களை நம்மையறியாமலேயே நாம் ஏற்றுக் கொள்ளுதல் கருத்தேற்றம் என்பதாகிறது. கருத்தேற்றம் குழுவூக்கத்தின் முதன்மை அறிதற் கூறாக (Cognitive aspect) க்

கொள்ளப்படுகின்றது. கல்வியின் - வாழ்க்கையின் நோக்கங்களை உணர்வித்தல், நிறுவன நோக்கங்களை உணர்வித்தல், பிரச்சாரம் செய்தல், பிரபல்யப்படுத்துதல், கருத்தேற்றத்தின் முக்கிய விடயங்களாகவுள்ளன.

ஒருவரிடம் காணப்படும் கருத்தேற்றத்தன்மை (Suggestibility) பல ஏதுக்களைப் பொறுத்திருக்கின்றது. உபதேசம் அல்லாமல் உணர வைத்தல் இதில் முக்கியம் பெறுகின்றது. நம்முடைய கருத்தேற்கும் தன்மை கருத்துக்களின் பிறப்பிடத்தையும் பொறுத்துள்ளது. நம்மைவிட மேலான வல்லுநர் (Expert) கருத்துக்கள் பெரும்பாலும் மறுப்பின்றி ஏற்கப்படுகின்றன. முக்கிய தேவைகள், பிரச்சினைகள் உள்ள போதுள்ள சூழ்நிலைகள் கருத்தேற்றத்தில் தாக்கங்களை விளைவிக்கின்றன. அச்சம், சினம், போரபாயம், போர், வெள்ள அனர்த்தம் போன்ற நிலமைகளிலும் கருத் தேற்றம் மிகுந்து காணப்படும்.

## கல்வி முகாமைச் செயல் முறையில் கருத்தேற்றம்

கருத்தேற்றம் ஒரு நுட்பமான உளச் செயல் முறையாகும். இதனைக் கல்வியின் பால் திசை திருப்பும் போது பெரும் பயன்கள் கிடைக்கின்றன. இங்கு கல்வி என்பது சுயமான சிந்தனையை வளர்த்து திறந்த மனதுடன் சத்தியத்தை அணுகுவதற்கு உதவும் கருவியாகவுள்ளது. ஆரம்பக் கல்வி நிலையில் கல்வியானது கருத்தேற்ற முறையிலேயே பெருமளவு போதிக்கப்படுகின்றது. மேலும் செய்து காட்டல் (Demonstration) கண்டறிதல் (Heroism) போன்ற கற்றல் - கற்பித்தல் முறைமைகள் கருத் தேற்றங்களுக்கே வழிவகுக்கின்றன. ஆசிரியர்கள் சிறந்த கருத்தேற்றச் சக்தியுடையவர்கள். எனவே இன்றைய மாணவர்களுக்கு தமது வழிகாட்டலை மேலும் சிறப்பாகச் செய்ய இக்கருத்தேற்றல் நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும்.

ஆளுமையுடைய ஆசிரியராலேயே தாம் கற்பிக்கும் பாடத்தை மாணவர் மனதில் புகுத்துவது மட்டுமன்றி அப்பாடத்தை நன்கு ஆராய்ந்து தாமாகவே கற்கும் முறைகளையும் கருத்தேற்றத்தின் மூலம் ஏற்படுத்த முடியும். கற்றலுடன், பாடசாலைப்பற்று, சமூகப்பற்று, நாட்டுப்பற்று, குடும்பப்பற்று ஏற்படவும் கருத்தேற்றத்தை ஆசிரியர்கள் சிறப்பாகப் பயன்படுத்த வேண்டும்.

மேலும் வகுப்பறைக் கவின் நிலை தூய்மையாகவும், அழகாகவும், மகிழ்ச்சிகரமாகவும் இருப்பின் மாணவர்களின் கற்கும் ஆர்வம் தூண்டப்படுகின்றது. இவையே கருத்தேற்றக்கருவிகளாகின்றன. மற்றும் ஆசிரியர்கள் மாணவர்களிடம் அன்பை அடிப்படையாகக் கொண்ட தொடர்பை உறுதிப்படுத்த வேண்டும். அப்போது ஆசிரியர் கூறும் கருத்துக்கள் மாணவரிடம் கருத்தேற்றம் பெறும். ஆசிரியரை மாணவர் வெறுக்கத் தொடங்கினால் எதிர்மறைக் கருத்தேற்றமே ஏற்படும். இது அதிபர்களுக்கும் பொருத்தும். நிறுவனத் தலைவர்களுக்கும் நல்ல அனுபவங்களைக் கொடுக்கும். ஊழியர்களிடையே கருத்தேற்றத்தை நிறுவன ரீதியான பற்றுணர்வின் மூலம்

கொடுக்க நீண்ட கால நோக்கில் மனிதத்துவ அணுகு முறைகளே வெற்றி வாய்ப்புக்களை வழங்குகின்றது.

நிறுவனத் தலைவர், பாடசாலை அதிபர், ஆசிரியர்களைப் பார்த்து செயல்களில் ஈடுபடல் - பின்பற்றலும் கருத்தேற்றத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

பார்த்துச் செய்தல் (Imitation) கற்றலில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றது. பார்த்துச் செய்யும் திறனே மனிதத்துவ செல்வாக்குள்ள கற்றலின் அடிப்படையாகவுள்ளது. இத்திறனை மிகுதியாகப் பெற்றவர்களே கற்கும் - ஆக்கத்திறன் உள்ளவர்களாக மிளிர்கின்றனர். "தனித்தன்மைகளின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் முதற்படி பார்த்துச் செய்தவாகும். பார்த்துச் செய்தலுக்கு வாய்ப்புக்கள் எந்த அளவுக்குப் பெருகியுள்ளனவோ, அந்த அளவுக்குத் தனித்தன்மையின் கல்வி வளர்ச்சி பெருகும்" என உளவியலாளர் P.T Nunn குறிப்பிடுகின்றார். சமூக - இன - பண்பாட்டுப் பாரம்பரியங்களைக் கற்பதில் ஒருவனுக்குப் பின்பற்றல் மிக முக்கிய கற்றல் முறையாகவுள்ளது. கருத்தேற்றத்திற்கு இது பெரிதும் உதவுகின்றது.

## குழு இயக்கவியல் - (Group Dynamics)

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் குழு இலக்கவியல் தொடர்பான முகாமைத்துவ உளவியல் ஆய்வுகள் பெருமளவு நிகழ்ந்துள்ளன. குழு இயக்கவியல் என்பது குழுக்கள் ஒற்றுமையுடன் அமையும் விதத்தையும், அவற்றின் தன்மைகளையும், விதிமுறைகளையும், தனிமனிதர், நிறுவனக்குழுக்கள் சமூகம் ஆகியவற்றிற்கான பரஸ்பர உயிர்ப்பான தொடர்பாடல் செயன்முறை இயக்கங்களைச் சுட்டுகின்றது. கல்வி நிறுவனங்கள், பாடசாலைகளின் இயக்கங்களில் குழு இயக்கவியல் பெரும் செல்வாக்கைக் காட்டி நிற்கின்றது.

பாடசாலையில் - நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள் நாட்டின் நற்பிரசை நெறிமுறைகளைப் பின்பற்றவும், சமூகத்திறன்களை உருவாக்கவும், கற்றலில் ஈடுபடவும் குழு இயக்கவியலைச் சிறப்பாகப் பயன்படுத்தலாம். வகுப்பறையில் மாணவர்களின் தனியாள் வேறுபாடுகள் அதிகம் காணப்படுகின்றன. எனவே தனித்து இயங்கிக் கற்பதிலும் பார்க்க குழுவாக ஒற்றுமையுடன் இயங்கும் போது தேர்ச்சி அடைவுகள் அதிகரிக்கும். பாடசாலை - கல்வி நிறுவனங்களை ஓர் இலட்சிய சமுதாயமாக மாற்ற அதன் ஆசிரியர்கள், அதிபர்கள், நிறுவனங்களின் குறிக்கோள்கள், இலக்குகள், இலட்சியங்கள் பாரிய தெளிவான எண்ணங்களை மாணவர்களுக்குக் கருத்தேற்றம் செய்ய வேண்டும். தினமும் காலைப் பிரார்த்தனை, எல்லோரும் ஒத்துணர்வை ஏற்படுத்தி சிறப்பான குழு இயக்கவியல் பயன்களைப் பெறுதலுக்கான செயற்பாடுகளாகவே உள்ளன.

இவ்வாறான ஒற்றுமையுணர்வுடன் கூடிய குழு இயக்கங்களால் நிறுவனங்கள் நல்ல விளைவுகளைப் பெற முடியும். இவ் விளைவுகளால் குறித்த நிறுவன உறுப்பினர்களிடையே உயர் குழு மனப்பாங்கு (Morale) ஏற்படும். இதை ஏற்படுத்தும் ஏனைய வழிமுறைகளாகப் பின்வருவன உள்ளன.

☆ திட்டவட்டமான நிறுவனம் / பாடசாலை தொடர்பான நோக்கக் கூற்று, இலட்சியம், இலக்குகள் தொடர்பான விடையங்களைக் குழுவினர் உணர்ந்திருத்தல்.

☆ இலக்குகளை நோக்கி முன்னேறுகின்றோம். என்ற உணர்வும் நிறுவனத்தின் சாதனைகள் பற்றிய பெரிமிதமும் குழு உறுப்பினர்களிடம் எழச் செய்தல்.

☆ மதிப்பு, தன்மானம், கௌரவம் மனிதத்துவம் என்பவற்றை, விரும்பி ஏற்றலும், தனி உறுப்பினர்களின் தேவைகள் குழு நடவடிக்கைகள் மூலம் நீதியாக நிறை வேற்றச் செய்தல்.

☆ நிறுவனக் குழுவின் செயலாற்றுகைகள் அது அடைய விளையும் இலக்குகளோடு தொடர்பு கொண்டிருத்தலை உறுப்பினர்கள் உணர்தல்.

☆ உறுப்பினர்களிடையே எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்தல். ஏற்றத்தாழ்வுகள் இன்றி எல்லா உறுப்பினர்களுக்கும் சம வாய்ப்பும் மரியாதையும் அளித்தல்.

☆ குழுவின் கட்டுக் கோப்பை குலைக்கும் தீய நடவடிக்கையில் ஈடுபடும் உறுப்பினர்களை வழிபடுத்தல்.

என்ற வகையில் ஒற்றுமையுடன் குழுவுணர்களுடன் செயற்படும் நிறுவனங்கள் வெற்றிப்பாதையில் தொடர்ந்து செல்ல முடியும். பல சாதனைகளை ஏற்படுத்த முடியும். இதற்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஒரு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது. அது உருவாகி ஐந்து வருடங்களில் இந்நிறுவனம் சாதித்த சாதனைகள் தொடர்பாக பல முகாமைத்துவ ஆய்வுகளை மேற்கொண்டு புதிய முகாமைத்துவ அபிவிருத்திக் கோட்பாடுகளை உருவாக்க முடியும். ஒற்றுமையுடன் ஒன்றாகத் தொழில் செய்து பற்றுறுதியுடன், இலட்சிய பூர்வமாக இயங்கும் மனித வளத்தின் தேவை எமது மண்ணுக்கு இன்று வேண்டியதாகவுள்ளது. இதற்கான மனித வள முகாமைத்துவ புதிய பிரவேசங்கள், பயில்வுகள் தொடர்பான அமுலாக்கங்கள், செய்முறைகளை பிரயோகங்களைத் தொடர்ந்து இயங்கியல், ரீதியில் செயலாற்றுவதற்கான சக்திகள் எமக்கு மேலும் தேவை. அதற்கான வழிவகைகளுக்காக எமது சக்தியை ஒழுங்குபடுத்தி ஒட்டுணர்வாக்கிப் பிரயோகிப்போமாக.

# சவால்களுக்கு முகம் கொடுத்தல்

இன்றைய சூழலில் தமிழர்களாகிய நாம் பிரவேசிக்கப் போகின்ற எதிர்கால யுகத்தில் பல சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இதற்குத் தேவையான அனைத்துப்பலங்களையும் வழங்கும் உயர் சக்தி கல்வியிடம் உண்டு. கல்வியே ஒரு தேசத்தின் அச்சாணியாகவும், அபிவிருத்தியின் இயந்திரமாகவும் கருதப்படும். இன்றைய காலத்தில் யுத்தத்தின் கொடிய தாக்கங்கள் சுனாமிப் பேரவையின் மோசமான விளைவுகள் எம் தாயகத்தில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. இவற்றிலிருந்து விடுபட்டு நாமே எமது தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற உணர்வு அனைத்துக் கல்வியாளர்களதும், ஆசிரியர்களதும், மாணவர்களதும் குருதியில் கலந்திருக்க வேண்டும்.

காலணித்துவ - இன அடக்கு முறைகளினால் எமக்கு ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைகள், மேலும் அவை உருவாக்கிய வன்முறை மற்றும் மன அழுத்தங்கள் அடிமைத்தனங்கள் என்பவற்றிலிருந்து விடுதலை பெற ஒவ்வொரு மக்களையும் உணர்வு பூர்வமாக எழுச்சியடையச் செய்ய வேண்டியுள்ளது. இதற்குத் தேசிய விழிப்புணர்ச்சியே தேவையாகவுள்ளது.

கல்வியியலில் அர்ப்பணம் இல்லாவிடின் கூட்டுணர்வு - குழு உணர்வு இல்லாவிடின் இத் தேசிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவோ, தமிழர்களுக்கான தேசிய கல்வி முறைமை ஒன்றைப் பூரணமாக உருவாக்கவோ முடியாது. எனவே கல்வி மூலமாக, சமூகரீதியாகவும், தேசிய ரீதியாகவும் ஒரு பாரிய சிந்தனை உருமாற்றத்தை தமிழர்களிடையே தோற்றுவிக்க வேண்டிய முக்கிய காலத்தில் நாம் வாழ்கின்றோம்.

இவ்வேளை ஒரு புதிய சிந்தனைப் போக்கை, நேர்மையுடனும், கண்ணியத்துடனும், விசுவாசத்துடனும், அர்ப்பணிப்புடனும் பணிபுரியும் ஊழியர்களையும் உருவாக்க வேண்டியுள்ளது. இதனை மேற் கொள்ள பரந்த அளவிலான கல்வி - குழு - கூட்டுணர்வு செயலாற்றுகைகளை ஒழுக்க ரீதியான, தியாகரீதியான சாதனைகளினூடு ஏற்படுத்த வேண்டும். இச் சாதனைகளுக்கு ஒரு உதாரணமாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் தோற்றமும், வளர்ச்சியும் உள்ளது.

# நவீனத்துவம், பின் நவீனத்துவம் பற்றி

**பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களுடனான செவ்வி - 1**




நேர்கண்டவர்
ச. ஜெயப்பிரகாஸ்
நாடகமும் அரங்கியலும்
1ம் வருடம்


*பழந்தமிழ் இலக்கணம் இலக்கியம் போன்றவற்றில் கைதேர்ந்தவரும் நவீனத்துவம், பின்நவீனத்துவம், இலக்கியம், விமர்சனம், நாடகம், தொடர்பாடல், வரலாறு, பண்பாடு, அரசியல் ஆகிய துறைகளில் ஆழ, அகல, நுண்மையாக கால் பதித்து பல ஆய்வுகளை மேற்கொண்டு பல நூல்களை வெளியிட்டவரும் பல்கலைக்கழகங்களில் வருகைதரு பேராசிரியராகவும், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் தகைசார் பேராசிரியருமான கா.சிவத்தம்பி அவர்களை இப்பகுதியில் நேர்காண்பதில் மகிழ்கின்றோம்.*

**கேள்வி** - *பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்களில் கைதேர்ந்தவர் என்பது மட்டுமன்றி நவீன பின்நவீனத்துவக் கருத்துக்களை அறிந்தவர் என்ற வகையில் நவீனத்துவம் பின்நவீனத்துவம் பற்றி சற்று விளக்குவீர்களா?*

**பதில்** - நவீனத்துவம் என்பது The modern என்னும் கருத்தினை, தமிழிலே எடுத்துக் கூறுகின்ற ஒன்றாகும். புதியது என்ற கருத்து நவீனம் என்கின்ற சமஸ்கிருதச் சொல்லிற்குரியது. எனவே முன்னர் காணப்படாது இப்பொழுது புதிதாக காணப்படுகின்ற விடயத்தை நவீனமானவை என கூறுகின்ற மரபு தமிழில் உண்டு. The Modern என ஆங்கிலத்தில் கூறப்படுவதனுடைய தமிழாக்கமாக அது பயன்படுத்தப்படுகின்றது. நவீனத்துவம் என்ற சொற்றொடர் உண்மையில் Modern என்று கூறப்படுகின்ற விடயத்தைக் குறிக்கும். இதனை நான் விளக்குவதற்கு நவீனம், நவீனத்துவம் பற்றிய நிலையை விளங்கப்படுத்துதல் வேண்டும்.

முதலாவதாக நவீனமாகின்ற ஒரு தன்மை சமூகத்தினுள் ஏற்படல் Moedenite என்பார்கள். பழைய சமூக நிலையிலிருந்து வேறுபட்ட புதிய விடயங்கள் வந்து சேருதல் எங்களுடைய வாழ்க்கை நடைமுறைபற்றிய விடயங்களாகும். தொழில்நுட்பங்கள், அறிவு முறைகள் என்பன புதிதாக வந்து முன்னர் இருந்த நிலையிலும் பார்க்க நமது நிலையைச் சற்று உயர்த்தி வைக்கின்ற புதியன நவீனம் (Modern) என்று பார்க்கின்றோம். Modern என்பது புதிய விடயங்கள் புதிய தொழில்நுட்பங்கள், புதிய முறையான அறிவு

முறைகளை எடுத்துக் கூறுகின்ற ஒரு விடயமாகும். எமது நாட்டினைப் பொறுத்த வரையில் இந்த நவீனத்தன்மை என்பது இந்த நாட்டின் வரலாற்றினூடே கிழம்பிய ஒன்று அல்ல. உண்மையில் இது மேல்நாட்டு ஆட்சிகளின் தொடர்பு காரணமாக அவை நம்மை ஏதோ ஒரு வகையில் ஆட்சி செய்ததன் காரணமாகவும், அவற்றோடு ஏற்பட்ட தொடர்புகள் காரணமாகவும், நமக்கு வந்து சேர்ந்தன.

இந்தநிலை யப்பானிலோ அல்லது ஐரோப்பிய நாடுகளிலோ இல்லை என்றே கூறலாம். ஜேர்மனிய வரலாற்றினூடாகவே ஜேர்மனிய நவீனத்துவம் வந்தது. ஆனால் இந்தியாவிற்கோ நமக்கோ அப்படி அல்ல. பல்வேறு அன்னிய ஆட்சிகளின் காரணமாக இலங்கையிலும், இந்தியாவிலும் ஒட்டுமொத்தமாக பிரித்தானிய ஆட்சித்தன்மை வந்து சேர்ந்தன.

எனவே இந்த நவீனத்துவத்திற்குள் ஒருகாலனித்துவம் இருக்கின்றது. ஆனால் அதனைப்பற்றி நாங்கள் அழுத்திக் கூற வேண்டாவிட்டாலும் இவ்வாறு ஒன்று இருக்கின்றதென்பதை குறிப்பாக இலங்கையை, தமிழகத்தை, தென்னாசியாவைப் பொறுத்தவரையில் மனதிற் கொள்ள வேண்டும். இந்த நவீனமான தன்மையில் நமது நாட்டில் காணப்படுகின்ற தன்மை இதுவாகும். இவை நமது கண்ணோட்டங்களை மாற்றி நாம் எமது வாழ்க்கையில் எதிர்நோக்குகின்ற தன்மையை மாற்றியமைத்துள்ளது. நவீனத்தன்மைகளில் இவைதான் மிக முக்கியம். பாரம்பரிய சமூகத்தில் நிலவிய நடைமுறைகளினின்றும் வேறுபட்டவை ஆகும். இந்த நவீன தன்மையில் ஒரு சமூக சமத்துவம் பேசப்படுகின்றது. முந்திய நிலையில் நகரங்கள் வளர்ச்சியுடையனவாகவோ அல்லது வளர்ச்சிக்கான மையங்களாகவோ இருக்கவில்லை. அடுத்து கிராமங்களில் கூட பாரம்பரிய அமைப்பே மேல் நின்றதனால் இப்பொழுது கூறப்படுகின்ற முறையிலே ஒரு சம எழுச்சி இருந்ததாக கூறமுடியாது. எனவே இந்த பாரம்பரிய நிலையில் இருந்து வேறுபடுகின்ற ஒரு சமூக அமைப்பு முறைமை காரணமாக அடிப்படையான சமூக நிறுவன அமைப்புக்களில் முக்கிய மாற்றங்கள் ஏற்படுகின்றன. அந்த மாற்றங்களாவன அரசு மட்டத்தில் ஏற்படுபவை, ஒட்டு மொத்தமான சமூக மட்டத்தில் ஏற்படுபவை. இவை யாவும் ஏறத்தாழ ஒரே நேரத்தில் நடைபெறும். இதில் குடும்ப மட்டத்தில் ஏற்படுபவை மிகமிக முக்கியமானவையாகும். பெண்களின் நிலைபற்றிய கொள்கை மாற்றங்கள், விவாகம் பற்றிய கொள்கை மாற்றங்கள், எந்த இடங்களில் இருந்து விவாதங்களை மேற்கொள்ளலாம் என்பது பற்றிய கருத்து மாற்றங்கள் போன்ற விடயங்களில் குடும்ப உருவாக்கம் முதல் சமூக உருவாக்கம் வரை பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. அப்போது நவீனமாகும் தன்மை காரணமாக நாங்கள் புதிய சமூக நிலைமைகளை எதிர்நோக்குகின்றோம். இந்த புதிய சமூக நிலைமைகள் பாரம்பரியசமூகநிலையில் இருந்து வேறுபட்டவை. இதனால் முரண்பாடுகள், மோதல்கள் ஏற்படுவது இலகுவாகிவிடுகின்றன. இந்த இடத்திலே தான் Modernism என்று சொல்லப்படுகின்ற கருத்து வெளிப்படுகின்றது. இந்த

நவீனத்தன்மை வந்ததன் காரணமாக இலக்கியத்தில் ஏற்பட்ட நவீன நிலைமைப்பாடுகளைத்தான் ஆங்கிலத்தில் Modernism எனவும் தமிழில் நவீனத்துவம் என்றும் கூறுகின்றோம். உண்மையில் இது மிகச்சிக்கலான விடயம் ஆங்கிலத்தில் Modernism என்று கருதப்படுவதற்கும் தமிழில் ஒட்டுமொத்தமாக நாம் நவீனம் என்று பார்ப்பதற்கும் இடையே வித்தியாசம் உண்டு. இது உண்மையில் சில புதிய இலக்கிய வகைகளின் வருகை நவீன வடிவத்தைச் சார்ந்தது. நாவல், சிறுகதை, புதுக்கவிதை என்பவை நவீன இலக்கிய வடிவங்களாகும். ஆனால் இவற்றின் அடிப்படையாக, புதிய நிர்வாக முறைமையூடாக, அதுவும் ஒரு ஜனநாயக அடிப்படையில் வாழ்ந்ததனால் உரைநடை எல்லோராலும் பயன்படுத்தப்படுகின்றது. எங்களைப் பொறுத்தவரையில் அதாவது, தமிழகத்தை, தென்னாசியாவை, குஜராத்தி மலையாளம் போன்றவற்றை பொறுத்தவரையில், உண்மையில் புதிய விடயங்கள் வருவது, உரைநடையில் எழுதப்படுவது, புதிய கல்வி முறை வருவது ஆகியனவே நவீன முறைமை ஆகும். அப்போ இது முக்கியமான விடயம். இதற்குமேல் இந்த இலக்கியங்களுக்குள்ளே காணப்படுகின்ற விடயம். அதாவது உண்மையில் Modernism என்று சொல்லப்படுவது இன்னும் சற்று வேறுபட்டதாக அதாவது சொல்லப்படுகின்ற முறைமையிலே காணப்படுகின்ற தன்மை மிகச் சுருக்கமாகச் சொன்னால் இதுதான் நவீனத்துவத்தின் தன்மை இந்த நவீனத்தன்மையை நாங்கள் விளங்கிக்கொள்ளாமல் சமூகப்பாரம் பரியத்தில் இருந்து நாங்கள் எவ்வாறு விடுபட்டு பிரச்சினைகளை எதிர்நோக்குவோம். நமக்கும் நமது பண்பாட்டுக்கும் உள்ள உறவுகள் யாது என்பதனைப் பற்றி அறிவதற்கு இந்த நவீனத்துவம் பற்றிய பிரச்சனைகளை அறிந்து கொள்ளல் அவசியமாகிறது.

இதனைவிட்டு அடுத்து பின்நவீனத்துவம் என்ற கோட்பாடு நவீனத்துவம் என்ற கோட்பாட்டிலும் மிகச் சுவாரஸ்யமான, நான்முதலிலே சொன்னது போல தமிழை எடுத்துக் கொண்டால், தென்னாசியநாடுகளை எடுத்துக் கொண்டால் நாங்கள் நவீனமுறை காலத்தில் நவீனமயப்பாடு என்று பல்வேறு விடயங்களை பேசும்பொழுது அவை இப்பொழுது நடந்து கொண்டிருப்பதைப் பற்றி பேசுகிறோம். உண்மையில் இந்த நவீனம் என்று பேசப்படுகிற தன்மை, ஐரோப்பிய நாடுகளில் 18ம் நூற்றாண்டின் அடிப்படையாக வளரத்தொடங்கி, 19ம் நூற்றாண்டின் ஒருமுக்கிய கட்டத்தை எய்தி, 20ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் 1950 பின்னர் ஐரோப்பா ஆபிரிக்காவில் ஏற்பட்ட மாற்றங்கள் இந்த 10 ம் நூற்றாண்டு 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் மாற்றங்களில் இருந்து வேறுபட்டவையாக இருப்பதை நாம் அவதானிக்கலாம், அப்போ இங்கு நவீனத்துவம் சம்பந்தமான முழுத்தாக்கமும் வந்து அந்தத் தாக்கத்தினால் இந்த சமூகத்தில் மாற்றங்கள் ஏற்பட்டு இப்பொழுது அந்த நவீன நிலை எப்பொழுது முடிகிறது. என்பதும் பற்றிய ஒரு கேள்வியை கேட்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. விடயம் கட்டிடக் கலையிலா, ஓவியத்திலா, இலக்கியத்திலா,

நாடகத்திலேயா இவ்வாறு ஒவ்வொரு கலை வடிவத்திலும் இதனைக் காணுகிற தன்மை பற்றி நாங்கள் இலக்கியங்களில் 50க்குப் பின் உண்மையில் பேசிக்கொள்வது வழக்கம். குறிப்பாக 1960 களில் இந்த மாற்றம் ஏற்பட்டது. இரண்டாவது உலகயுத்தம் முடிந்து ஐரோப்பா அதில் இருந்து மீண்டுவந்து உலகநாடுகள் - சர்வதேச மட்டத்தில் முதலாளித்துவ நாடுகள் சோசலிச நாடுகள் எனப்பிரிந்து அந்தஅடிப்படையிலே ஒருபனிப்போரை நடாத்தி கெடுபிடிமுடிந்த காலத்தில் அதற்கு மேலாகச் சென்று உலகைச் சற்று வேறுவகையாக நோக்குகின்ற முறைமை ஒன்று காணப்பட்டது. அந்த வாதம் தான் அமைப்பியல் வாதம். அதாவது இலக்கியம் எவ்வாறு தோன்றுகிறது? கலை எவ்வாறு தோன்றுகிறது? மக்கள் எவ்வாறு நடந்து கொள்ளுகிறார்கள்? என்பதை அமைப்பியல் ரீதியாக பார்க்கின்ற தன்மை இது ஒரு மிகமுக்கியமான சிந்தனை மாற்றமாகும். தோற்றம் வளர்ச்சி என்று பார்க்கின்ற நிலைமை போய் நாங்கள் எவ்வாறு தொழிற்படுகிறோம் எவ்வாறு இயங்குகிறோம் என்பதனைப் பார்க்கின்ற ஒரு நிலைக்கு வந்தோம். இது தான் உண்மையில் அமைப்பியல் வாதம் எனப்படும், இது உண்மையில் முதலில் மொழியியலினூடாகவே வந்தது மொழியைப் படிப்பதனூடாகவே வந்தது அதாவது மொழியின் அர்த்தங்கள் எவ்வாறு தோற்றுவிக்கப்படுகின்றன என்பது அந்த மொழியின் கட்டமைப்பினூடாக வருகின்ற ஒன்று என்கின்ற விடயம் தெரிய வந்தது. அதனைப் பற்றி எண்ணுகின்ற பிரபல மொழியியல் அறிஞர் எடுத்துக் கூறினார். அப்போ இந்த மொழியியல் அடிப்படையில் வந்தது. மற்றைய மனித நடைமுறைகளுக்கு விளங்கிக் கொள்வதற்கான ஒருநடை முறையாக அதனை ஏற்றுக் கொண்டு எல்லாத்தையும் அமைப்பியல் ரீதியாகப் பார்த்தார்கள் ஆனால் அப்படிப் பார்க்கின்ற பொழுது பல குறைபாடுகள் தென்படவே அவற்றைத் திருத்துவதற்கு அவர்கள் முன்னுக்கு வந்தார்கள். குறிப்பாக இலக்கியத்துறையில் கலைத்துறையில் காணப்பட்டது. கட்டடத்துறையில் இசைத்துறையில் இலக்கியதுறையில் இதில் எல்லாம் ஏற்பட்டது இந்த மாற்றங்களை பின் அமைப்பியல் வாதம் என்று சொல்லுகிறோம். பின் அமைப்பியல் வாதம் என்பது கருத்து முறையில் அதாவது கருத்துக்களின் அடிப்படையில் செய்யப்பட்ட ஒரு வாதம் ஆனால் இது வாழ்க்கை நடைமுறையில் போய்க் கொண்டுள்ளது என்பதை அறிவதற்கு நாங்கள் வாழ்க்கைப் பண்பாட்டோடு இணைந்து அந்த வளர்ச்சிகளோடு பார்க்கின்ற தேவை வந்தது.

அப்படி வருகிற பொழுது தான் இந்த வாதம் இரண்டும் இணைந்து Post Modernism பின்நவீனத்துவம் என்ற கருத்துவந்தது இது உண்மையில் வளர்ச்சி அடைந்த ஐரோப்பிய நாடகங்களுக்கு உரிய ஒரு விடயமாகும். நவீனத்துவமே தோன்றாதா நவீன மயப்பாடு ஏற்படாத ஆபிரிக்க ஆசியநாடுகள் பல இருந்தன. இப்பொழுதுதான் படிப்படியாக நவீனமயப்பட்டு வருகின்றன. அப்போது ஐரோப்பியாவில் ஏற்பட்ட ஒன்றை இந்த நாட்டுக்கு பொருந்துவதாக கொள்ள வேண்டாம் என்று சொன்னார்கள் ஆனால் இன்றைய உலகின் தன்மை என்ன

வென்றால் ஊடக வளர்ச்சி காரணமாக ஒருநாட்டுக்கு ஒன்று பொருந்துதோ இல்லையோ என்பதல்ல முக்கியம் மற்றநாடுகளிலே ஏற்பட்ட வளர்ச்சிகள் அங்கே பேசப்படுகிற விடயங்கள் எப்படியாவது வந்து சேர்ந்துவிடும். ஊடக வளர்ச்சிகள் மூலமாக T.V. மூலமாக வானொலி மூலமாக அது கட்டாயமாக வந்து சேர்ந்துவிடும். இதனால் நாங்கள் நவீன மயமாகி விடுகின்றோம். நாங்கள் இப்பொழுதும் சாதிவித்தியாசம் பற்றி பேசுகிறோமோ இல்லையோ ஆனால் அதேவேளையில் நாங்கள் நவீனத்துவக்கு அப்பாலான விடயங்களை பற்றி பேசுகிற ஒரு நிலைமை வந்துவிடுகிறது. இதன் காரணமாக இந்த பின்னவீனத்துவம் என்கின்ற கொள்கை எல்லா இடங்களிலும் பேசப்படலாயிற்று பின்னவீனத்துவத்தை இரண்டு நிலைப்பட பார்க்கலாம்.

1) அது சிந்தனையில் ஏற்படுத்திய மாற்றங்கள் அதாவது எந்தஒரு மையவாதம் ஏதுவும் இல்லாமல் எல்லாவற்றையும் ஒருநேராகப் பார்க்காமல் பன்முகப்பட்டனவாக பார்க்கின்ற ஒருமுறைமை பின்வீனத்துவத்தினுடைய அமைப்பாகக் கொள்ளப்படுகின்ற ஒன்றாக உள்ளது. இது ஒரு முக்கியமான அம்சம் அதாவது ஒருநேர்கோடான போக்கு என்றொரு போக்கில்லை.

2) இந்த வளர்ச்சியினூடாக பெண்களின் முக்கியத்துவம் அவர்களுடைய அத்தியாவசியம் பேசப்பட்டது. பெண்ணிலை வாதம் தோன்றிற்று. அவர்களை ஒரு தனிஜீவன்களாகப் பார்த்து தங்களுடைய முழுமையை தங்களுடைய பெண்மையிலே பெறக்கூடியவர்களாக காண வேண்டிய ஒரு அத்தியாவசியம் ஏற்பட்டது. இவ்வாறு கருத்து ரீதியாக ஏற்பட்ட வளர்ச்சிகள் சில உள்ளன. அவை நாகரீகத்தினை வாழ்க்கை முறையினை பாதிக்கும். இவற்றை விட வாழ்க்கைமுறை அமைப்பிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. மிக முக்கியமான உதாரணமாக கட்டிடக்க லையிலே ஏற்பட்ட மாற்றங்கள் ஆகும். அந்தக் கட்டிடக்கலையிலே 30, 40, 50 களில் கூட புதிய நவீன கட்டிடங்கள் வந்தன. நவீனமுறைகளில் அமைந்தன. ஆனால் அதன் பின்னர் இந்த நவீன கட்டிடங்கள் என்பன வசதிகளைச் செய்து கொடுப்பனவாக இருக்கின்றனவே தவிர ஒரு மனிதன் வாழ்க்கையின் தொடர்ச்சியைக் காட்டுவதாக இல்லாமல் ஏதோ ஒரு சூனியங்களை மனதிலே ஏற்படுத்துவனவாக இருந்தன.

இந்த நிலையில் இருந்து விடுபட்டு பண்டையமரபில் இருந்து சிலமரபுகளை உள்வாங்கி அதனை இந்த நவீன தன்மைகளோடு இணைத்துக் காட்டுகின்ற ஒருகட்டிட மரபு அமெரிக்காவிலே தொடங்கிற்று. அது ஒன்று மிகமிக சாதாரணமாக எல்லா நாடுகளிலும் எல்லா நகரகங்களிலும் காணப்படுகிறது. அதே போன்று நாடகத்துறையிலே நாடகத்தில் பேச்சு, இசை என்பனவற்றுக்கு முக்கியத்துவம் கொடுப்பது என்பவற்றிலும் பார்க்க ஆற்றுகை நிலை, ஆன தன்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற தன்மை காணப்பட்டது. இலக்கியத்தில்

*ஒரு விடயத்தை எடுத்து அதுவே முக்கியமான விடயம் என்று பார்க்கின்ற விடயம் போய் ஒரு விடயத்தின் பன்முகப்பாட்டின் பல்வேறு விடயங்களோடு அவ்வாறு இணைந்துள்ள முறைமையையும் காட்ட வேண்டியதாயிற்று. இது இலக்கிய முறையில் பின்னவீனத்துவ முறை வந்துள்ள முறைமை ஆகும். அண்மையில் இப்பொழுதுதான் நமக்குப்புரிகின்றது. என்னவென்றால் பின்னவீனத்துவம் என்பது 2வது உலக மகாயுத்தத்தின் பின்னர் தோன்றிய உலக முதலாளித்து வளர்ச்சியில் புதிய கட்டங்களை எடுத்துக்காட்டுகின்ற கருத்துநிலை அம்சங்கள் ஆகும். அது இந்த புதிய முதலாளித்துவத்துக்கு வேண்டிய ஒரு நியாயப்பாட்டை வழங்கும் ஒரு கருத்தாடலாக அமைந்துள்ளது. என்பது இப்பொழுது அண்மையிலே நிறுவப்பட்டுள்ளது. எனவே நவீனத்துவம், பின்நவீனத்துவம் என்பவை இவை எல்லா நாடுகளையும் ஒன்றுசேர வைத்துப் பார்க்க கூடியனவை அல்ல. ஆனால் ஊடகங்களின் வளர்ச்சி காரணமாக இவற்றை ஒன்றாகவைத்துப் பார்க்கிறோம்.*

---

# மாணவ மன்னர்களுக்கு ஆலோசனை மந்திரிகள்.........?

எழுத்தறிவிக்கும் இறைவன் நாங்கள்
இதை எழுதிச் சொல்வோம்
ஆயிரம் தடவை.....
வகுப்பறையே எங்கள் வசந்தமண்டபம்!
நாங்கள் அகப்பை பிடிக்கும்
எட்டில் சாலையும் அதுதான்.
மாணவ செல்வங்களுக்கு மாதாவாகி
ஞானப்பால் ஊட்டும்
நம்பிரான் கூட்டம்.
புத்தகக் கடவுள் புதைந்து கிடக்கும்
முத்து மணிகள்!
எழுதுகோல் எடுத்தால் அந்த இறைவன்
எங்களை தொழுது நிற்பான்.
ஆசிரியன் என்னும் அந்தஸ்தை அணிந்துள்ளதால்
அறிவாலயங்களின் அர்ச்சகரானவர்கள்!
ஆசிரியர் ஓர் அட்சய பாத்திரம்
உலகம் போற்றும் தெய்வம்.
நமக்கு அத்திவாரம் நாமே
பாடசாலை ஆசிரியர்கள் தான்
கவிஞர் பாரதியும் பாரதிதாசனும்
நக்கீரனும் ஓர் நல்லாசிரியன்.
அவனை வெல்லமுடியாததால் தான்
ஆதிவாசன் நெற்றிக்கண்ணைத் திறந்தார்.
ஆற்றல் உள்ள ஆசிரியனிடமே
ஞானம் அடைக்கலம் தேடுகிறது.
ஞானம் எங்கள் நாடி நரம்பெல்லாம்
நர்த்தனம் செய்கிறது.
வித்தைகள் எல்லாம் எங்கள்
விரல் நுனியிலிருந்தே விழும்
வாசிப்பவனே ஆசிரியன்
இல்லையேல் அவன் வலது குறைந்தவன்!
ஆசிரியன் இல்லாத ஊர்
இறைவன் இல்லாத ஆலயம் ஆகும்.
எங்களுக்கு உள்ள விலாசம்
யாவருக்கும் இல்லை
எங்களின் ஒழுக்கம் எங்களுக்கு உயிர்.
அழுக்கைக் கழுவும் ஆறுகள் நாங்கள்
வானத்து சூரியனும் எங்களின் வம்சம்.
தேசத்தின் கண்ணில் ஆசிரியன் தெய்வம்!
ஆசிரியன் வானத்தையும் பூமிக்கு
வரவழைப்பான் அவன்
வார்த்தைக்கு உண்டு வலிமை!
கூனி நிற்பது அவன் குலத்திலேயே கிடையாது
அலை கடலுக்குள்ளும் அமுதம் காண்பான்.
மாணவ மன்னர்களுக்கு ஆலோசனை கூறும்
மந்திரிகள் நாங்கள்!

**ராஜரட்ணம் திலீபன்**
**(1ம் வருடம், நாடகமும் அரங்கியலும்)**

### எமது மண்ணில் வாழும் சான்றோர் வரிசையில் - 4

# பேராயர் ஜெபநேசன் அவர்களின் வாழ்வும் பணியும்



செவ்வி கண்டவர்
செல்வி. J. றொக்ஷினி
(ஆரம்பக்கல்வி 2ம் வருடம்)

*பேராயர் கலாநிதி ஜெபநேசன் அவர்கள் நாடறிந்த கல்விமான். தமிழை உயிர் மூச்சாகக் கொண்டு, உள்ளத்து இருளகற்றி விடும் உத்தமப்பணியாம். சமயப் பணியையும், சமூகப்பணியையும் மேற்கொண்டு வருபவர்.*

*சிறந்த பண்பாளராகிய பேராயர் கலாநிதி ஜெபநேசன் அவர்களுடன் நேரடியாக 26.06.2005 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்திற்குச் சென்றேன். அவர் தன் உள்ளத்து உணர்வுகளை என்னுடன் அன்பாகக் கலந்துரையாடினார். அதன் தொகுப்பை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றேன்.*

கேள்வி – *இன்று நீங்கள் பலரும் போற்றும் சிறந்த கல்விமானாக திகழ்வதற்கு ஆரம்ப காலத்திலேயே சிறந்த அடித்தளம் இடப்பட்டிருக்க வேண்டும். அந்த வகையில் குடும்பப் பின்னணி, பாடசாலைக் கல்வி பற்றிக் கூறுங்கள்'*

பதில் – *எனது கல்வி வளர்ச்சிக்கும், சமய ஆர்வத்திற்கும் முழுமுதற் காரணம் எனது பெற்றோர்கள் தான். எனது ஆரம்ப காலப் படிப்பை சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் கற்றேன் அங்கே எனது தாயாரின் தாயார் ஒரு காலத்தில் தலைமை ஆசிரியராக இருந்தவர். எனது பெற்றோரும் அங்கே கல்வி கற்பித்தார்கள். எனது தாயார் ஒரு ஆங்கில ஆசிரியை எனது தந்தை ஒரு தமிழ் ஆசிரியர் ஆகையால் எனக்கு தமிழும் ஆங்கிலமும் கைவந்த கலையாக இருந்தது. பின் யாழ்ப்பாணக் கல்லூரி, இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகம் என்பவற்றில் அறிவைத் தேடி பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. இதன் மூலம் எனது எழுத்தும் பணியையும், சொற்பொழிவுப் பணியையும் வளர்த்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது. இப்பொழுதும் வளர்த்துக் கொண்டே தான் இருக்கின்றேன்.*

கேள்வி – *சமயப் போதகர் என்ற நிலையிலிருந்த நீங்கள் ஆசிரியப் பணியில் அர்ப்பணித்தமைக்கு தூண்டுதலாக அமைந்தது எது?*

பதில் – *குழந்தையாக இருந்த போது நான் மிகவும் நோய் வாய்ப்பட்டிருந்தேன். என்னுடைய தாயார் நான் ஒரு மத குருவாக வரவேண்டும் என்று ஆசைப்பட்டு இறைவனிடம் கூறினார். இந்தப் பிள்ளை உயிரோடு வாழும் எனின் இப்பிள்ளையை இறை பணிக்கு அர்ப்பணிப்பேன். இதுதான் என் இறைபணியின்*

ஆரம்பம். ஆகவே நான் சமயப் பணியிலே தான் ஈடுபட வேண்டும். ஆனால் சிறிது யாழ்ப்பாணக் கல்லூரியில் அபிஷேகம் செய்யப்பட்ட குருவாகவும், ஆசிரியனாகவும் இருந்து பணியாற்றினேன். 1992 ஆம் ஆண்டு அப்பொழுது எனக்கு 52 வயது நடக்கும் போது யாழ்ப்பாணக் கல்லூரியை விட்டு யாழ்ப்பாண ஆதீனத்தின் பொறுப்பை ஏற்று தலைவனாக வரும்படி அழைப்பு விடப்பட்டது.

அதனால் அப்பதவியை ராஜினாமா செய்து விட்டு ஆதீனத்தின் பேராயராக வந்தேன். இப்பொழுது மீண்டும் ஆசிரியப் பணிக்குச் சென்று விட்டேன். மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் அதிபராக இருக்கின்றேன். ஆன்மீகப் பணி, கல்விப் பணி எனக்கு இரண்டு கண்கள். கல்விப்பணியிலே, மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதில் எனக்கு திறமை இருக்கின்றது என நான் நினைக்கின்றேன். எங்களுடைய மாணவர்களுக்கு நான் ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றேன்.

**கேள்வி** – மற்றைய கவிஞர்களை விட பாரதி மீது கூடியளவு ஆர்வம் கொண்டுள்ளீர்கள். அதுமட்டுமல்லாது யாழ்ப்பாணக் கல்லூரியின் பாரதி விழாவை ஆரம்பித்து வைத்த பெருமை உங்களையே சாரும். பாரதி மீது ஏற்பட்ட ஈர்ப்பிற்கான காரணம் என்ன என்பதனை கூறுங்கள்.

**பதில்** – பாரதியுடைய கவிதையைவிட அவருடைய வாழ்க்கை அழகானது. அவருடைய படைப்புக்கள் உயர்ந்த கருத்துக்கள் கொண்டவை அவர் தமிழ் நாட்டிலே பிறந்ததினால் அவருடைய பெருமை தமிழ் நாட்டிற்குத் தெரியாமல் போய்விட்டது. மகாகவி பாரதி மீது நான் பள்ளிப் பராயத்தில் இருந்தே மிகுந்த ஆர்வம் கொண்டவன். அவருடைய பாடல்கள், கவிதைகள் என்னை மிகவும் கவர்ந்துள்ளது. இவருடைய கவிதைகள் எல்லாப் பராயத்தினருக்கும் பொருத்தமானவையாகவும் அனைவரையும் கவரக் கூடிய நடையிலும் அமைந்திருக்கின்றன. பலரும் பல காவிய நாயகர்களைக் கையில் எடுத்து பல காவியங்களின் ஊடாக அவர்களின் புகழைப் பரப்புகின்றனர். அந்த வகையில் பாரதியின் கவிதைகள் மீது ஏற்பட்ட ஈர்ப்பினால் அவரின் பெருமையை உலகிற்குப் பரப்புவதில் பெருமை அடைகின்றேன்.

1982ம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரியில் பாரதி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடினோம் ஒவ்வொரு வருடமும் சிறப்பாக நடத்தி வருகின்றோம். மதுரைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ரா. மோகன், அவருடைய மனைவி நிர்மலா மோகன் ஆகியோர் சிறப்பான பேச்சுக்களை நடாத்தியமை பாராட்டப் படவேண்டிய விடயம்.

**கேள்வி** – எமது கலாச்சாரம் மிகவும் நலிவுற்ற நிலையில் காணப்படுகின்றது. இந்த நிலையில் இளைஞர், யுவதிகளை சரியான பாதையில் வழி நடத்த சமயக் கல்வி எந்த வலையில் உதவுகின்றது.

பதில் – சமீபத்தில் கிறிஸ்தவ இறையியல் கல்லூரி இராமநாதன் மடத்திலே ஒரு கருத்தரங்கு நடைபெற்றது அதாவது பெண்களுக்கு எதிரான வன் முறைகள் பற்றியது. அவர்களால் சொல்லப்பட்ட சுவாரசியமான கருத்து என்னவென்றால் பெண்களைக் கேலி செய்கின்ற பழக்கம் உலகத்திலேயே யாழ்ப்பாணத்தில் அதிகமாக இருக்கின்றது. பல பெண் பிள்ளைகள் ரியூட்டறிக்கு போக முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பெண்களைப் பொறுத்த வரையில் அவர்களைக் கேலி செய்வதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இதற்கு அவர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மதகுருமார்கள் எல்லோரும் அறிவுரை வழங்க வேண்டும். ஆண்களுடைய நிலையில், மனப்போக்கில் மாற்றம் ஏற்பட வேண்டும். இதற்கு இன்றைய சமுதாயத்தினர் சேர்ந்து செயற்பட்டு உழைக்க வேண்டும்.

கேள்வி – தங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம் பற்றிய குறிப்பிடுங்கள்?

பதில் – என்னுடைய வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம் என்னவென்றால் நான் பேராயராக இருந்ததினால் 1998ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பக்கிங்ஹாம் பலஸ்சிற்குச் சென்று எலிசபேத் மகா ராணியை சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

கேள்வி – இன உணர்வு சம்பந்தமான செயற்பாடுகளில் நீங்கள் ஈடுபடுவதை அறியக் கூடியதாக உள்ளது. அந்த வகையில் இன்றைய மக்களுக்கு இவற்றுடன் தொடர்புடைய எவ்வாறான கருத்துக்களைக் கூற விரும்புகின்றீர்கள்?

பதில் - கிறிஸ்தவன் எவனும் அறியா மடந்தையாக இருப்பது சரியல்ல. 1948 ம் ஆண்டு இந்தியா, பாகிஸ்தான் முடியுரிமைச் சட்டம் தொடக்கம் இன்றுவரை இலங்கை அரசுகள் அடுத்தடுத்து அநியாயங்கள் செய்து வருகின்றது. ஆகையினால் இன உணர்வு என்பதிலும் பார்க்க அநியாயத்துக்கு எதிராக குரல் கொடுத்து வருகின்றோம். இயன்றளவு குரல் கொடுப்பது அவசியம் இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழ் மக்கள் மீது திரும்பத் திரும்ப அநியாயமான காரியங்கள் நடைபெறுகின்றன. அதனை நாம் உலகத்தவருக்கு அறிவிக்க வேண்டும்.

கேள்வி – நீங்கள் சிறந்த அறிஞன் என்பது நாம் எல்லோரும் அறிந்ததே அந்த வகையில் உங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத அறிஞர்கள் பற்றி கூற முடியுமா?

பதில் – அவர்களைப் பார்ப்பது அவர்களுடன் பேசுவது மிகவும் பிடித்தமானது ஔவையார் பாடல் இருக்கின்றதல்லவா

*அதினிலும் இனிது அறிவுள்ளோரை*
*கனவிலும் நனவிலும் காண்பது தானே.....*

ஒரு அறிஞன், எங்கு பேசுகின்றாறோ ஒரு அறிஞருக்கு எங்கு வரவேற்பு இருக்கின்றதோ நான் நிச்சயமாக அங்கு நிற்பேன். அந்த வகையிலே பல அறிஞர்களை கண்டிருக்கின்றேன். சொற்பொழிவுகளை கேட்டிருக்கின்றேன். நெல்சன் மண்டேலா, பார்வதி, கிளிங்றன், பிரதம மந்திரி ரொனி பிளேயர், எலிசபெத் மகாராணி, இந்தியாவின் ஜோர்ஜ் பெர்னான்டோ மற்றும் பெரும் அறிஞர்களை இந்தியாவிலும் பல நாடுகளிலும் சந்தித்திருக்கின்றேன். அவர்களின் பேச்சுக்களை கேட்கும் போது அதிலே ஒரு பகுதி என்னுடன் இணைந்து விடுகின்றது. அவர் என்ன மாதிரி பேச்சை ஆரம்பிக்கிறார், என்ன மாதிரி முடிக்கின்றார்? என்பதைப் பார்த்து அதை என்னுடைய பேச்சிலே சேர்த்துக் கொள்கின்றேன். ஆனபடியினால் அவை எல்லாம் என்னிலே ஒரு பகுதியாகி விடுகின்றது. இந்த வகையில் கலைத்துறையில், எழுத்துத் துறையில் முன்னேறிய பல அறிஞர்களை இந்தியாவிலும் இலங்கையிலும் பார்த்திருக்கின்றேன். பழகியிருக்கின்றேன்.

**கேள்வி –** உங்கள் மானசீனக குருவாகிய வித்தியானந்தன் பற்றி சற்றுக் கூறுங்கள்?

**பதில் –** பேராசிரியர் வித்தியானந்தன் பல்கலைக் கழகத்திலே என்னுடைய ஆசிரியராக இருந்தவர் .அவருடைய பண்புகள், ஆடம்பரமற்ற வாழ்க்கை, சுவாரசியமான பேச்சு, தன்னை பரிசுத்தவான், தூயவன் என்பதைக் காட்டிக் கொள்ளாமை, எல்லோருடம் பழகுதல் அதாவது அடிமட்ட மக்களோடு பழகி, அவர்களோடு வாழ்ந்திட்ட பெருமை, அவருக்குரியது. அவர்களால் மிகவும் விரும்பப்பட்டவர். நாடகத் துறையில் செயற்பட்டவிதங்கள் அதனோடு கூட தன்னுடைய பண்புகளை மறைப்பதில்லை. எல்லோருக்கும் அவருடைய வாழ்க்கை முறை தெரியும். ஆனால் அவற்றை மறுத்து தான் பழகுபவரிகளுடன் தூயவன், புனிதன் என்று காட்டிக் கொள்வதில்லை. எல்லோருடனும் நன்றாகப் பழகுவார். வேடிக்கையாகப் பேசுவார், அதனாலேயே குறிப்பாக பத்திரிகை வெளியிட்டார். அந்த முறையின்படி வாழ, பேச அவரைப் போல எழுத, சாதாரண மக்களோடு நெருங்கிப் பழக, இவையெல்லாம் எனக்கு வந்தது அவராலே தான். அவருடைய ஆடம்பரமற்ற வாழ்க்கையே எனக்குப் பிடித்தது. அதையே நான் இன்றும் பின்பற்றுகின்றேன்.

**கேள்வி –** நீங்கள் சிறந்த நல்லாசிரியர் அந்த வகையில் ஆசிரியத்துவம் பற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள்,

**பதில் –** ஆசிரியர்கள் மாணவர்களுடைய மதிப்பைப் பெற வேண்டுமானால் முதலில் நன்றாக வகுப்பைத் தயார் செய்து மாணவர்கள் மதிக்கும் படி செய்ய

வேண்டும். எவ்வளவு தூய்மையானவராகவோ, வார்த்தை நன்றாக அமைந்திருந்தாலோ, செல்வந்தராக இருந்தாலோ இவற்றால் அவன் மதிக்கப் போவதில்லை. மாணவன் மதிப்பது ஒரு நல்ல ஆசிரியரைத்தான் தான். ஆசிரியருடைய முழுப் பலமும் அவருடைய ஆசிரியத் திறமையிலே தான் தங்கியிருக்கின்றது. மாணவனுடைய மதிப்பைப் பெற வேண்டுமானால் ஆசிரியன் நன்றாகப் பாடுபட்டுத் தன்னுடைய துறையை வளர்ப்பது மட்டுமல்ல படிப்பிக்கின்ற ஆற்றலையும் வளர்க்க வேண்டும்.

ஒரு ஆசிரியன் பிரகாசிப்பது என்றால், ஆசிரியத் தொழிலில் ஈடுபடவேண்டுமென்றால் அவன் தனது துறையில் அறிஞனாகவும், கற்பிக்கும் ஆற்றல் உடையவனாகவும் இருக்க வேண்டும். சமுதாயம் இதைத் தான் எதிர்பார்க்கின்றது. அவனிடம் வேறு குறைபாடுகள் இருந்தாலும் அதை மன்னித்து விடுகின்றனர். இன்றைய மாணவர்களுக்கு எல்லாமே தெரியும். ஆசிரியனை விட பாட விதானம் இந்த இடத்தில் எப்படிப் படிப்பிக்கின்றார்கள் என்று எல்லாம் அவர்களுக்குத் தெரியும். அவதானமாக செயற்பட வேண்டிய நிலை ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு, ஆற்றல் படிப்பு என்பன உயர்ந்த தரமான வையாக இருக்க வேண்டும்.

*இன்றைய சமுதாயத்தினருக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?*

எங்கள் நாட்டிற்குத் தேவையானது பெண் சுதந்திரம் பெண்களுக்கு சமுதாயத்தில் பாதுகாப்பு இல்லை. எமது நாட்டில் பெண்களின் சமூக அந்தஸ்து என்பது திருமணத்திலே உள்ளது என பலரும் கருதுகின்றார்கள். பெண்களின் சுதந்திரமோ கருத்துக்களோ ஆண்களில் தங்கியிருப்பதில்லை. அது முற்று முழுதாக பெண்களின் ஆற்றலிலும், ஆளுமையிலுமே தங்கியுள்ளது. இந்த வகையில் நோக்கும் போது நமது நாட்டில் பெண்கள் முன்னேற வேண்டிய நிலை இன்னும் உள்ளது. "பெண் பிள்ளைகள் பொன் பிள்ளைகள்" ஆகும் அவர்களுக்குரிய உரிமைகள் கொடுக்கப்படவேண்டும்.

## கல்லூரிப் பயிற்சி

**நேற்றிருந்த பொழுதுகள்
கழிக்கப்பட்டனவாக!
வரும் பொழுதுகளோ.....
பெருக்கப்படுவதாக!
இளம் துடிப்புக்களின்
சங்கமத்தில்
மைக்கல் ஏஞ்சலோவின்
கை வீரல்களாக**

**ஒவ்வொரு இளம்
உள்ளமும் -
புதிய சிற்பங்களைத் தேடி
கடும் தவம் இயற்றின,
நேற்றைப் போல் அல்லாமல்
புதிய சமுதாயம்
படைக்க!**

**சி. சிவஜெயந்தி
(1ம் வருடம் விசேட கல்வி)**

# விசேட கல்வி ஆசிரியருக்குரிய இலட்சணங்கள்

கல்வி அறிவியல் துரிதமாக வளர்ச்சியடைந்த துறையாகும். உலகில் பத்தாண்டுக்கொருமுறை பல்வேறு புதிய கருத்துக்களில் பரிமாணங்கள் ஏற்படுவதைக் காண்கின்றோம். இதனால் கல்வித்துறையிலும் இம் மாற்றங்கள் பெரும் தாக்கங்களைக் கொடுக்கின்றன. இந்த வரிசையில் இன்று கல்வித்துறைகளில் வளர்ச்சியடைந்து வருகின்ற நவீன துறைகளில் விட கல்வித்துறை பிரதான இடத்தைப் பெறுகிறது. மார்க்சிய சிந்தனைகள் கல்வி உளவியலில் ஏற்பட்ட முன்னேற்றகரமான ஆய்வுகள் சிறுவர் உரிமை பிரகடனங்கள் போன்றன விசேட கல்வியின் அவசியத்தையும் விசேட தேவையுடைய மாணவர்களிற்கு துணை நிற்கும் வழிவகைகளையும், நுட்புவியல்களையும் கண்டறிய துணை புரிந்துள்ளன. உடல் உள சமூக குறைபாடுகளினால் ஏற்படுகின்ற இயலாமையுடைய பிள்ளைகளுக்கும், மீத்திறன் தன்மையுடைய பிள்ளைகளுக்குமான விசேட பாடத்திட்டத்துடனான வேலைத்திட்டத்தின் கீழ் விசேட உபகரணங்களுடான விசேட சேவையின் கீழ் விசேட பயிற்சியைப் பெற்றவர்களின் உதவியுடன் இவ்வாறான பிள்ளைகளுக்கு கற்பித்தலுக்கு பயிற்சியைக் கொடுத்து அபிவிருத்தி செய்யும் முறையே விசேட கல்வி ஆகும்.

சூழலுடன் ஒன்றித்து வளரும் பிள்ளையின் கால வயதுடனான உடல் வளர்ச்சியிலும் வேறுபாடு நிறைந்திருக்கும். பிறப்பிலிருந்து படிப்படியாக வளர்ச்சியடையும் பிள்ளையிடம் மொழி விருத்தியும் சமூகமயமாக்கலும் அபிவிருத்தியடையும் இவ்வாறான வளர்ச்சி அவர்களிடம் ஏற்படாது போனால் அவர்களிடம் ஏதோ குறைபாடு உண்டு என்பதை அறிந்து கொள்ளலாம். இக் குறைபாட்டை இனங்கண்டு கொள்ளாவிட்டால் அது அவர்களின் வாழ்க்கையைப் பாதிக்கும். இவர்களின் இயலாமைக்கான காரணம் எது என இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கே விசேட கல்வி அவசியப்படுகின்றது. இவ்வாறு வகுப்பறையில் சாதாரண நிலையில் கற்றலையும், தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள முடியாத பிள்ளைகளையும் மீத்திறன் பிள்ளைகளையும் விசேட கல்வித் தேவையுள்ள பிள்ளைகள் எனக் கருதலாம்.

கல்வியானது தனியாள் விருத்திக்கும் சமூக விருத்திக்கும் அடிப்படைக் காரணியாக அமைவதால் அது தொடர்பான தேசிய சர்வதேசிய அடிப்படையில் பல நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இங்கு குவிந்த நோக்கில் தனியாள் ஒவ்வொருவரும் வாழ் நாள் முழுவதும், சமூகத்தினதும் முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அமைய வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இச் செயல்முறைக்கு முழுமை வடிவம் கொடுக்கும் முக்கிய பங்காளராக ஆசிரியர்கள் கருதப்படுகின்றனர். சிக்கலான இப்பணியை

நிறைவு செய்வதற்கு ஆசிரியர்களிடம் வாண்மை தொடர்பான உயர் நிலைத் தேர்ச்சி தேவைப்படுகின்றது. இப்பணியை நிறைவு செய்வதற்குரிய தேர்ச்சியைப் பெறும்பேறு ஆசிரியர்களால் தம்மிடம் கற்க வரும் இளம் தலைமுறையினரை உரியவாறு தயார் செய்வதோடு எதிர்காலத்தில் எழுகின்ற சவால்களை துணிச்சலோடு எதிர் கொள்ளவும் அவர்களின் கற்றலை இலக்குள்ளதாக்குவதற்கும் அவர்களின் கற்றலுக்கும் பொறுப்புடைய ஆசிரியர்களிலேயே தங்கியுள்ளது. இவ்வாறு பொதுவாக ஆசிரிய பணியானது சிக்கலானதும் முக்கியமானதாகும்.

இந்த நிலையில் நோக்கும் போது விசேட கல்வி ஆசிரியர் என்பவர் சிறப்பாக விசேட கல்வியை வழங்குவதாயின் பல்வேறுபட்ட விசேட சிறப்பம்சங்களை தனது இலட்சணங்களாக கொண்டிருத்தல் மிகவும் இன்றியமையாதது.

☆ குறைபாடு, இயலாமை, வலது குறைவு என்பனவும் அவற்றின் வரையறை பற்றி இனம் கண்டு அது பற்றி பெற்றோர் ஆசிரியர் மாணவர் சுற்றியுள்ள சூழல் என்பவற்றுக்கிடையில் நல்லதொரு விளக்கத்தை ஏற்படுத்துதல் எதிர்பார்க்கப் படுகின்றது.

**குறைபாடு** என்பது உடல் அல்லது உறுப்புக்களின் அமைப்பின் செயற்பாடுகளில் ஏதோ ஒரு வகையில் குறைவாகவோ அல்லது ாதராண முறையோ காணப்படல்.

**இயலாமை** என்பது மனித இனத்திற்கான பொதுவானது என தீர்மானிக்கப்பட்ட செயற்பாடுகளில் யாதேனுமொரு செயற்பா டானது எதிர்பார்க்கப்படும் அளவில் செயற்பட முடியாமல் போதல் அல்லது தடைப்படல்.

**வலது குறைவு** என்பது ஏதேனுமொரு வகையில் குறைபாடுள்ள இயலாமைகாரணமாக தனிநபர் ஒருவர் பொதுவாக செயற்படுவதில் ஏற்படு கின்ற தடை நிலையாகும் அல்லது மட்டுப்படுத்தலாகும் ஆகவே இப் பதங்கள் தொடர்பான பூரண விளக்கத்தைப் பெற்றிருப்பதன் ஊடாக இந்நிலைமைகளை குறைப்பதற்கும் மாற்றுவதற்கும் பொருத்தமான நடவடிக்கைகளை மேற் கொள்ளவும் இவை பற்றிய விளக்கத்தை பொருத்தமானவர்களுடன் உரையாடி கருத்து விளக்கத்தை கொடுக்க வேண்டியவராகவும் விசேட கல்வி ஆசிரியர் இருத்தல் வேண்டும்.

☆ சமத்துவம் பேணும் விசேட கல்வி ஆசிரியர் ஜனநாயக முறையில் சமத்துவம் பேணும் ஆசிரியர் ஒருவர் விசேட தேவையுடைய மாணவருக்கு சில வரையறைகளையும், சுதந்திர போக்கையும் விதிக்கும் அதே வேளையில் அவர்களது சுதந்திர போக்கையும் உற்சாகப்படுத்துவார். இவ் ஆசிரியர் சட்டதிட்டங்களுக்கும்

தீர்மாணங்களுக்கும் ஏதுவான காரணங்களை அவ் அப்போது விளக்குவார். ஒரு மாணவன் தவறும் போது உறுதியாகவும் கண்டிப்பாகவும் அதே வேளை அவதானமாக கருத்திற் கொள்ளப்பட வேண்டிய சில சந்தர்ப்பம் சூழ் நிலைகளில் மட்டுமே குறித்த ஒரு எல்லைக்கு புறம்பாக செயற்படுதல்.

தர்க்க ரீதியான விவாதங்கள் அடங்கிய வாய்மொழி தொடர்பாடல்களுக்கு வழியமைத்துக் கொடுப்பார். மாணவர் தமக்கு பொருத்தமான வினாக்களைக் கேட்கவும், கருத்துக்களை வெளிப்படுத்தவும் ஆசிரியர் இடையில் நிறுத்த முடியாது என்பதை அறிந்திருப்பர். இத்தகைய ஆழமான தொடர் பாடல் திறன்களை கற்பதற்கும் பிரயோகிப்பதற்கும் சந்தர்ப்பத்தை மாணவருக்கு வழங்குகின்றது.

சமத்துவம் பேணும் ஆசிரியருக்கு திருமதி ஸ்மித் ஓர் உதாரணமாவார். அவர் உள்ளார்ந்த முறையில் காத்திரமான மனப்பாங்குகளை முன்வைப்பதோடு மாணவருடனான நம்பகத்தன்மையுள்ள ஈடுபாட்டையும் வெளிப்படுத்துவார். அதாவது வகுப்பறையில் பாராட்டுக்களும் உற்சாகப்படுத்தல்களும் நிரம்பி இருக்கும் மாணவர் தொடர்பில் உடன்பாடான கருத்துக்களையும் வழங்குவார்.

விசேட கல்வி ஆசிரியர் என்பவர் மேலே கூறியது போன்று சமத்துவம் பேணும் ஒருவராக சிறப்பாக துலங்குபவராக இருக்க வேண்டும். விசேட கல்வி ஆசிரியர் திருமதி ஜோன்சன் போன்ற ஊதாசீனமான ஆசிரியராகவோ திரு. ஜோன்ஸ் போன்ற ஏனோ தானோ என்ற போக்குடைய ஆசிரியராகவோ அல்லது திரு. போ. என்பவர் போன்ற அதிகாரத்தோறணை உடையோராகவும் காணப்படல் கூடாது.

☆ விசேட கல்வி ஏற்பாடானது தனித்து நடத்தப்படக் கூடியதன்று பலர் கூட்டாக இணைந்து செயற்பட வேண்டிதொன்றாகும். அவ்வாறு உருவாக்கப்படும் குழுவிற்கும் விசேட கல்வி ஆசிரியரின் பங்கு அவசியமானது. கூட்டங்களை ஒழுங்கமைத்தல் குடும்பத்துடனும் ஏனைய அங்கத்தவர்களுடனும் தொடர்புகளைப் பேணல் தகவல்களைப் பரிமாறுதல், வசதிகளை உருவாக்கல் போன்றவை விசேட கல்வி ஆசிரியரின் பொறுப்புக்களாகவுள்ளன. இவ்வாறு நோக்கும் போது விசேட கல்வி ஆசிரியர் குழுத்தலைவராக இயங்க வேண்டிய பொறுப்பும் உண்டு என்பதை உணர முடிகின்றது.

☆ விசேட கல்வி ஆசிரியர் குழுத்தலைவராக செயற்படுவது மட்டுமன்றி மேலும் பல பொறுப்புக்களையும் ஆற்ற வேண்டியவராக உள்ளார். எப்போதும் பாடசாலைக்கும் பெற்றோருக்கும் இடையிலான முதன்மைத் தொடர் பாடலராகச் செயற்படல் வேண்டும். மாணவனுக்கு வேண்டிய

தனிப்பட்ட கல்வித் திட்டத்தை தயார் படுத்துதல் வேண்டும். அது சகல வாண்மையாளர்களது பொறுப்பாகும் என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும். மாற்றங்கள் ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதனுடன் தொடர்புடைய சகலருக்கும் அதுபற்றி விழிப்பூட்டி அம்மாற்றங்களை குறிப்பிடவும் வேண்டும். தனியாளனுக்கு சிறு குழுவிற்கு போதனை / ஆலோசனை வழங்கும் போது மாணவருக்கு இலக்குத் திறன்களை உயர் மட்டத்தில் வழங்குவதற்கு தேவையான சாதனங்கள் மற்றும் நுட்ப முறைகளைக் கையாள்வது தொடர்பாக மற்றைய அங்கத்தவர்க்கு எடுத்துக் காட்டுவது முக்கியமானது. மேலும் எதிர் காலத் தீர்மானங்களை மேற்கொள்வதற்குத் தேவையான தரவுகளைச் சேகரித்தல், தனியாள் கல்வித் திட்டங்களினூடாக முன்வைக்கப்படும் தரவுகளைப் பதிவு செய்தல் ஆகியனவும் முக்கியமான பணிகளாகும்.

☆ நெருக்கீடுகளிற்கு உட்பட்ட பிள்ளைகளை அதன் தாக்கத்திலிருந்து விடுவிப்பவராக இருத்தல் முக்கியமான பொறுப்பாகும்.

கல்விச் செயல்களோடு இணங்கிச் செல்ல முடியாதவிடத்து (Stress) ஏற்படுகின்றது. நெடுக்கீடு என்பது எதிர் மறையான மனவெழுச்சிகளைத் தூண்டி மனத் தாக்கங்களை ஏற்படுத்துவதால் ஒருவரது செயற்பாடுகளை எதிர் வினைப்படுத்துகின்றது. கற்றல் முறைமைகளை மாற்றியமைக்கும் பொழுதும் கற்றலில் எதிர் மறையான குறுக்கீடுகளை எதிர் கொள்ளும் பொழுதும் நெருக்கீடுகள் முளைப்படைகின்றன. சில மாணவர்களிற்கு பொது விடுமுறை முடிந்து பாடசாலை தொடங்கும் பொழுதும் பரீட்சைகள் வரும் பொழுதும் பெறு பேறுகள் வரும் பொழுதும் நெருக்கீடுகள் ஏற்படுகின்றன.

ஒவ்வொரு மாணவரும் தனிப்பட்ட முறையில் நெருக்கீடுகளை வெல்வதற்குரிய ஆற்றலையும், அறிவையும் வளர்ப்பதற்கு விசேட கல்வி ஆசிரியர் உதவுதல் வேண்டும். எதிர் மறையான மனவெழுச்சிகளை ஆசிரியர் மாற்றியமைக்க வேண்டும். தோல்விகள் மாற்றியமைக்கப்படலாம். எதிர்ப்புக்கள் மாற்றியமைக்கப்படலாம் என்ற நம்பிக்கை வெளிச்சத்தை வளர்க்கக் கூடியவராய் செயற்படுதல். மேலும் நம்பிக்கை மேலோங்கலை வளர்ப்பதற்குரிய உளவியல் உபாயங்களை நடைமுறைப்படுத்தக் கூடியதாய் இருத்தல். உடற் பயிற்சி, தியானம், பக்தி, முனைப்பு ஆக்கத் தொழிற்பாடுகள், அழகியல் தொழிற்பாடுகள் இறுகிய தசை நார்களை நெகிழ்ச்சிப்படுத்தி ஓய்வு நிலைக்கு உட்படுத்தும் செயற்பாடுகள் முதலியவற்றால் நெடுக்கீடுகளில் இருந்து விடுதலை பெறக் கூடிய வகையில் செயற்படுத்துபவராக இருத்தல்.

☆ விசேட தேவையுடைய மாணவர்களைப் பற்றி பூரண விளக்கத்தைப் பெற விசேட கல்வி ஆசிரியர் பின்வருவன பற்றி மேலதிக அறிவினையும், திறனையும் பெற்றிருத்தல் வேண்டும்.

தத்துவ ஞானம், சமூகவியல், சமூக உளவியல், அழகியல், கல்வி உளவியல், கல்வியியல், வைத்தியவியல், வழிகாட்டலும் ஆலாசனைகளையும், இத்தகைய பாடங்களின் அறிவினைப் பெற்று நடைமுறைப்படுத்தக் கூடிய திறன்களையும் பெற்றிருப்பது அவசியமாகும்.

☆ பிறழ்வு நடத்தைகளைக் காட்டும் மாணவர்களை எதிர் கொள்பவராக இருத்தல்.

சமூக நிலவரங்கள் மற்றும் குடும்ப நிலவரங்கள் ஆகியனவே மாணவரின் பிறழ்வு நடத்தைகளுக்கு அடிப்படைக் காரணிகள் ஆகின்றன. இக் காரணிகள் மாணவரை கற்றலில் முழுமையாக ஈடுபடமுடியாது தவிப்பு நிலையை ஏற்படுத்துகின்றது. ஆசிரியரது அன்பையும், ஆதரவையும் நம்பிக்கையையும் பொறுத்ததாக ஆசிரியர் மாணவர் மீது கொள்ளும் ஆதரவும் பிறழ்வுகளுக்கும் தவறான புலக் காட்சிக்கும் தவறான தகவல்களுமே காரணங்களாக இருத்தலை ஆசிரியர் உணர வேண்டும். ஆசிரியர் பயன்படுத்தும் தொடர்பாடல் முறையின் மீதும், சொற்கள் மீதும் தீவிர கவனம் செலுத்தப்படல் வேண்டியுள்ளது. எத்தகைய இயல்பு கொண்ட மாணவர்களும் கனிவான மொழிக்குள் கட்டுப்பட்டு விடுவார்கள். ஆய்வுகளின் படி சராசரிக்கு கூடுதலான ஆசிரியர்கள் சுடு சொற்களையும் எதிர் நிலைச் சொற்களையுமே பயன்படுத்துகின்றமை உற்சாகமும் ஊக்குவிப்பும் நல்ல நடத்தைகளை நோக்கி நகர்த்துவதற்கு துணையாக இருக்கும் மாணவர்களது நெஞ்சங்களில் என்றும் மறவாத பாத்திரங்களாக ஆசிரியர்கள் இருப்பார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. மற்றும் மாணவர்களின் செயற்பாடுகளை பாராட்டுதல், அவர்களது சொந்த வாழ்க்கை முன்னேற்றத்தில் அக்கறை காட்டுதல், விருப்புக் காட்டுதல் முதலியவற்றிலே கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஆகவே பிறழ்வு நடத்தைகள் கொண்ட மாணவர்களை கையாள்வதற்கு மேற்கூறப்பட்ட விசேட சிறப்பு அம்சங்களை விசேட கல்வி ஆசிரியர் கொண்டிருத்தல் வேண்டும்.

☆ மதிப்பீட்டு அறிக்கை, முன்னேற்ற அறிக்கை, உட்பட ஒழுங்கு முறையான சுயவிபரக் கோவையை ஒவ்வொரு பிள்ளை தொடர்பாகவும் பேணுதல் மிக முக்கியமான பணியாகும்.

ஒவ்வொரு பிள்ளையினதும் சமூகத்திறன்கள், நாளாந்த வாழ்க்கைத் திறன்கள், தகவல் தொடர்பு ஆற்றல் என்பவற்றை விருத்தி செய்து சமூக இடைவினைத் தொடர்புகளை விருத்தி செய்வதற்கு பொருத்தமான திட்டமிடல், சிறந்த கற்றல் உபாயங்களை பயன்படுத்துதல் சிறந்த உள்ளடக்கங்களை இனம் காணல் வகைப்படுத்தல் நிரப்படுத்தல் முதலிய தொழிற்பாடுகளை மேற் கொள்ளவும் ஒவ்வொரு தனியாளை குவியப்படுத்தும் போதனா முறைகளை மேற்கொள்ளக் கூடியவராய் இருத்தல்.

மேலும் சிறந்த செவிமடுப்பவராகவும் பொறுமை, நடுநிலைமை இடர் சிக்கிய மாணவர்களை மீட்டெடுக்கும் பொழுது சீர்மியம் என்ற பங்கினையும் ஏற்க வேண்டியுள்ளவராக உள்ளார்.

மேலே குறிப்பிட்டது போன்று விசேட கல்வி ஆசிரியர் சாதாரண ஆசியுரை விட அவரது அனைத்துச் செயற்பாட்டிலும் அவதானமாகவும் சிறப்பாகவும் செயற்பட வேண்டியுள்ளனர்.

**உசாத்துணை நூல்கள்**

1) Ainscow M (1994) Special Needs in H Classroom

2) Aiper Sandra (1995) Inclusion Sage Publication California

3) மா. சின்னத்தம்பி, சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ்ப்பாண பல்கலைக்கழகம். ஆசிரிய முகாமைத்துவம் - 2004

4) விசேட கல்வியின் அவசியம், தொலைக்கல்வித்துறை தேசிய கல்வி நிறுவனம் 12

**செல்வி. இந்திரா செல்வநாயகம்**
**(கல்வியியலாளர் – விசேட கல்வி)**

## சிந்தனைக்கு

1) எவன் ஒருவன் தன் சுயபுத்தியில்
வாழ்கிறானோ
அவன் தான் முழுமனிதன்

2) எப்போதும் கனிவோடும் இனிய நல்ல
சொற்களையுமே தேர்ந்தெடுத்துக்
கதையுங்கள்

3) உங்களை யாரேனும் குறை கூறினால் அது உண்மையாக இருந்தால் உங்களைத் திருத்திக் கொள்ளுங்கள். பொய்யாக இருந்தால் சிரித்து பொருட்படுத்தாமல் விட்டுவிடுங்கள்.

4) மற்றவர்களுக்கு உரிய மரியாதையைக் கொடுங்கள். இதமான சொற்களைப் பயன்படுத்துங்கள்.

5) கச்சிதமாகத் திட்டமிடுவது பாதி வெற்றி பெற்றதற்குச் சமம்.

**இ. சுசிகலா**
**(ஆரம்பக்கல்வி)**

எமது மண்ணில் சான்றோர் வரிசையில்...... 5

# மாஸ்டர் சிவலிங்கத்தின் வாழ்வும் பணியும்



செவ்வி. சி. நந்தகுமார்
(நாடகமும் அரங்கியலும்)

*மீன்பாடும் தேன் நாட்டின் தென்பால் மஞ்சம் தொடுவாய் கிராமத்திலே இரத்தினம், செல்லத்தங்கம் தம்பதியினருக்கு புத்திரனாக 1933.03.28 ம் திகதி சிவலிங்கம் பிறந்தார். ஆரம்பக் கல்வியை கல்லடி சிவானந்தா வித்தியாலயத்திலும் பின்னர் அரசினர் பாடசாலை (இந்துக் கல்லூரி) யிலும் பயின்றார். புலவர் மணி பெரிய தம்பிப்பிள்ளை, பண்டித வித்துவான் வி. சீ. கந்தையா ஆகியோரிடம் கற்றவர். சென்னை கலைக்கல்லூரியில் காட்டுன் சித்திரம் சிறப்புப் பயிற்சி பெற்றவர். நாடகம், இலக்கிய எழுத்தாளர், நடிகன், பத்திரிகை ஆசிரியர், இன்று கதை சொல்லும் கலைஞராக நம்மிடையே வலம் வருகின்றார்.*

*1970 களில் பண்டிதர் பூபாலப்பிள்ளையின் மகள் மங்கையக்கரசியரை மணம் முடித்தார் இருவருக்கும் விவேகாந்தன் எனும் ஓர் ஆண் குழந்தை இருந்தது. இவர் இன்று வைத்தியராக காணப்படுகின்றார்.*

| | | |
|---|---|---|
| *கிருபானந்த வாரியார்* | - | *அருட்கலைத் திலகன்* |
| *இந்து கலாசார அமைச்சு* | - | *வில்லிசைச் செல்வர்* |
| *கலாசார அமைச்சு* | - | *கலா பூஷணம்* |
| *கிழக்கு பல்கலைக்கழகம்* | - | *இலக்கிய முதுமானி* |
| London Buts *தாபனம்* | - | *கதைமாமணி* |

*இதுமட்டுமன்றி இன்னும் ஏராளமான பட்டங்களைப் பெற்று இன்னும் மட்டு மண்ணின் கதாநாயகனாக வலம் வருகிறார்.*

*"வணக்கம் மாமா - வணக்கம் மருமக்களே....."*
*என்றழைக்கும் அன்பான வார்த்தைகள் சிறியோர்களையும், பெரியோர்களையும் கவர்ந்துள்ளது என்றால் மிகையாகாது. கதை சொல்வதினூடாக மிக உயர்ந்த ஆசிரியத்துவத்தை மிளிர விட்டுள்ள அவரது ஆற்றல் போற்றுதலுக்குரியது.*

**கேள்வி** – *சிறுபராயம் பற்றிக் கூறுங்கள் மாமா*

**பதில்** – *நான் சிறுவனாக இருந்த காலத்தில் என்னுடைய பாட்டியாருடன் மிகுந்த பிரியம். அக்காலத்தில் என்னுடைய பாட்டி கதைகளைக் கூறுகையில் நான் அவற்றையெல்லாம் கேட்டு விட்டு எனது அயல்வீட்டு நண்பர்களுக்கும்,*

பாடசாலை நண்பர்களுக்கும் போய்க் கூறுவதுண்டு. வீட்டில் கதை சொல்லும் போது என் தகப்பனார். "இவன் தென்னாலி இராமனைப் போல வருவான்" என எனது தாயிடம் கூறுவதுண்டு. என்னை கதை சொல்லும் கலைஞனாக வளர்த்துக் கொள்ள காரணமானவர் எனது பாட்டி என்பதை ஒரு போதும் மறுக்க முடியாது.

**கேள்வி – தங்களை வளர்த்த பாடசாலைகள் பற்றி கூறுங்கள்**

**பதில்** – மட்டக்களப்பில் தென்பால் அமைந்துள்ள மஞ்சம் தொடுவாயே எனது கிராமம். எனது ஆரம்பக்கல்வியை மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்திலும், பின்னர் உயர் கல்வியை மட் / அரசினர் பாடசாலை (இப்போது மட்/இந்துக்கல்லூரி) யில் எனக்கு தமிழறிவு புகட்டிய பேராசான்கள் புலவர் மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை. வித்துவான் பண்டிதமணி வி. சீ. கந்தையா ஆகியோரிடம் கற்கும் வாய்ப்புக் கிடைத்தது.

நான் சிறு வயதிலேயே தந்தையை இழந்து விட்டேன் என்னை வழிப்படுத்தியவர் என தமக்கையின் கணவரே ஆவார். பின்னர் 1959ம் ஆண்டு சென்னை சந்தன கலைக் கல்லூரியில் காட்டுன் சித்திரம் சிறப்புப் பயிற்சி ஒரு வருடம் பயின்றேன்.

**கேள்வி** – Master எனும் புனைப் பெயர் வரக்காரணம் என்ன?

**பதில்** – நான் ஆசிரியன் அல்ல. எனது தகப்பனார் இரத்தினம், (ஆசிரியர்) எங்களுடைய பரம்பரையில் அனேகமான ஆசிரியர்கள் காணப்பட்டமையினால் என்னையும் கண்டவர்கள் எல்லோரும் "மாஸ்டர்" என்று அழைத்தனர். பாடசாலைகளில் படிக்கும் காலத்திலும் சக நண்பர்கள், மாணவர்கள் "மாஸ்டர்" என்றே சிறுவர்களும், பெரியவர்களும் அழைக்கின்றனர்.

**கேள்வி** – சினிமாவில் நடிக்க வாய்ப்புக் கிடைக்கவில்லையா?

**பதில்** – ஆம், நான் இந்தியாவில் இருந்த காலத்தில் சிறு பிள்ளையாகிய தெழுங்கு நடிகருடன் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இதை அறிந்த எனது கல்லூரி ஆசான் விரும்பவில்லை ஆதலால் என் தாயாரிடம் "சினிமா மோகத்தால் உன் மகன் சீரழியப் போகிறான்" என அறிவிக்க உடன் ஒரு தந்தி வந்தது. ஆகையால் சினிமாவில் நடிக்கும் வாய்ப்பு தவறப்பட்டது.

**கேள்வி** – தங்களின் தொழில் என்ன?

**பதில்** – நான் சிந்தாமணி, தினபதி ஆகிய பத்திரிகைகளில் உதவி ஆசிரயராக 17 வருடங்கள் கடமையாற்றினேன். இருப்பினும் 1983 கலவரத்தில் கொழும்பில் வசித்த காலத்தில் சகல உடமைகளையும் இழந்து மட்டக்களப்பு

*வந்தடைந்தேன். இக்காலப் பகுதியில் மட் / மாநகர சபையின் நூலகம் எனது நிலையை அறிந்து இலங்கையிலே முதல் முதல் யாருக்கும் கொடுக்காத வேலை எனக்குத் தந்தது.* Story *(கதை கூறல்) 1983 - 2002 வரை 19 வருடம் இப்பணியை பாடசாலைகள், வாசிகசாலைகள், முன்பள்ளிகள், அநாதை இல்லங்கள் போன்றவற்றில் கதை சொல்லிக் கொண்டு வருகின்றேன்.*

*இராமாயணம், பாரதம், சிறுவர் கதைகள் போன்றவற்றையும் கூறிக் கொண்டு பாடசாலைகளில் இலக்கியப் பாடங்களாகவும் கற்பித்துக் கொண்டு இருந்தேன்.*

*மேலும் ரூபவாகினியில் சிறுவர் நிகழ்ச்சி நடத்துனர், வானொலி சிறுவர் நிகழ்ச்சி தயாரிப்பாளர் போன்றவற்றிலும் பல தடவைகள் கதை சொல்லி சிறுவர்களை மகிழ வைப்பது எனது பணி பல ஆசிரியர்கள் என் கதை சொல்லும் ஆற்றலை தாம் ஒரு கற்பித்தல், முறையாக அதனைப் பிரயோகிப்பதாகத் தெரிவித்தனர். இதனால் நான் அக மகிழ்ந்தேன். கதைகளினூடாக மாணவர்களுக்கு நல்ல மனித விழுமியங்களை ஏற்படுத்தலாம்.*

**கேள்வி –** *வாழ்க்கையில் நீங்கள் புரிந்த சாதனைகள் எவை?*

**பதில் –** *நான் இந்தியாவில் படித்த காலத்தில் சென்னை தேனாம் பேட்டை பார்த்த சாரதி (பிரபல வில்லுப்பாட்டு கலைஞர்) இவருடன் தொடர்பை ஏற்படுத்தி அவரிடம் பயின்றேன். தமிழகத்தில் பயின்ற வில்லிசையை கிழக்கிலங்கையில் முதன் முதலில் 1960 இல் கல்லடி உப்போடை பிள்ளையார் ஆலயத்தில் "நமக்கு மேலே ஒருவனடா" எனும் தலைப்பில் வில்லிசை பாடி இன்று வரையும் 127 வேறுபட்ட வில்லிசை நிகழ்ச்சிகளைத் தயாரித்து மேடை ஏற்றியுள்ளேன்.*

*1997 இல் லண்டன் மாநகரில் 127 வது வில்லுப்பாட்டு "விண்ணுலகில் விபுலானந்தர்" எனும் தலைப்பில் நிகழ்த்தினேன். மற்றும் சிறுவர்களுக்கு சுவையாக ரசிக்கும் வகையில் (மிமிக்கிரி)* Mimicry *பல குரலில் கதை சொல்வதை கலையாகக் கொண்டிருந்தேன்.*

*இலக்கியமும் சமூகமும் சார்ந்த உங்கள் பணிகள் எவ்வாறு அமைந்தன?*

*மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்க ஆரம்பகால உறுப்பினராகவும், தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலை இணைப்பாளர் மண்முனை வடக்கு கலாச்சாரப் பேரவை செயற்குழு உறுப்பினராகவும் கடமையாற்றினேன். சிறுவர்களுக்கென "பயங்கர இரவு" "அன்பு தந்த பரிசு" போன்ற கதைகளை எழுதி பதிப்பித்தேன்.*

*வளர்ந்து வரும் கலைஞர்களுக்கு நீங்கள் கூறும் கருத்து? ஒரு சிறந்த கலைஞனாயில் அவனிடம் சமயோசிதப் பண்பு காணப்பட வேண்டும் எனக்கு மறக்க முடியாத சம்பவங்கள் பல இருப்பினும் ஒன்றைக் கூறுகின்றேன்.*

*பேராசிரியர் வித்தியானந்தரின் தலைமையில் பேராதனை பல்கலைக்கழக "விண்ணுலகில் விபுலானந்தர்" எனும் தலைப்பில் வில்லிசை நடைபெறும் போது விபுலானந்தர் இறக்கும் சந்தர்ப்பத்தின் போது, நீதிபதியின் நாய்* Mic *(மைக் மணந்து பார்த்ததும் என்ன செய்வதென்று தெரியாமல்*

*"தேவாதி தேவருடன் தேவேந்திரனின்*
*நாய்க் குட்டியுமல்லவோ வந்திருக்கின்றது"*

*என்று சமாளித்ததனை எல்லோரும் பாராட்டினர். இவ்வாறு பல சந்தர்ப்பங்கள் அமைந்தன. எனவே ஒரு கலைஞன் சடுதியாக சமாளிக்கும் சமயோசிதப் பண்பைக் கொண்டவர்களாகக் காணப்பட வேண்டும்.*

**கேள்வி –** *உங்களை கதை சொல்வதில் தூண்டிவர்கள் யார்?*

**பதில் –** *முதலில் எனது பாட்டிதான் வழிகாட்டி இருப்பினும் சிறுவர்கள், பெரியவர்கள், பெற்றோர்கள், போன்றோர் என் ரசிகர்களாகக் காணப்பட்டனர். அண்மையில் கூட ஒரு நண்பர் தொலைபேசி எடுத்து சேர் உங்களுக்கென்று நான்* Website *ஒன்றை ஆரம்பித்துள்ளேன் இதுதான்* File III A : 1 Master Sivalingam - Files / Misivaithm *என்றார் லண்டன் சென்றிருந்த வேளை ஈஸ்வரன் முருகன் ஆலயத்திலும், துர்க்கையம்மன் ஆலயத்திலும் சொற் பொழிவாற்ற சந்தர்ப்பம் கிடைத்தது. இன்றும் என்னைச் சுற்றி உள்ள ரசிகர் வட்டம் சிறியோர், பெரியோர், என் கதைகளை ரசிக்கும் மாணவர்களாக இருந்திருக்கின்றார்கள். இதில் உங்கள் கல்லூரி உபபீடாதிபதி திரு. பா. தனபாலனும் ஒருவர் என்பதை உம் மூலமாக அறியும் போது மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன்.*

**கேள்வி –** *யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பற்றிய உங்கள் கருத்து....*

**பதில் -** *ஆசிரியர் பணி தலை சிறந்த புனிதப்பணி, மாணவரின் உள்ளத்தில் மறைந்து கிடக்கும் ஆற்றல்களைக் கொணர்ந்து அறிவொளி ஊட்டும் ஆசான்களை வளர்ப்பதில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முதன்மை பெறுகின்றது. "எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்ற பொன் மொழி ஆசிரியப் பணியின் மகத்துவத்திற்கு சான்றாகும். வகையில் வளப்படுத்தும் பெருமையை யாழ்ப்பாண தேசியக் கல்வியியற் கல்லூரி பெறுவதற்கு மனமார்ந்த ஆசி கூறுகின்றேன். இக் கல்லூரியின் கலாசுரபி இதழுக்கு பேட்டி காண என்னைத் தெரிவு செய்தமைக்கு நன்றிகளையும் வாழ்த்துக்களையும், தெரிவித்துக் கொள்கின்றேன்.*

# பிடித்ததும் பிடிக்காததும்....

தமிழ் பிடிக்கும்
தமிழ் பிரசவிக்கும்
கவிகள் பிடிக்கும்
மழலை பிடிக்கும்
மழலை பேசும்
மொழிகள் பிடிக்கும்
காற்றுப் பிடிக்கும்
காற்றில் மிதக்கும்
கானங்கள் பிடிக்கும்
பகிடி பிடிக்கும்
பகிடி வதை பெயராலே
பயங்கர வதை பிடிக்காது....

மலர் பிடிக்கும்
மலர் பேசும்
அழகு பிடிக்கும்
அந்தி வானம் பிடிக்கும்
அந்தி வானம் சிந்தும்
வெட்கச் சிவப்பு பிடிக்கும்
காலைக் கதிரவன் பிடிக்கும்
வெப்ப கதிர்களும் பிடிக்கும்
மனிதம் பிடிக்கும்
மனிதம் மதங்கொள்ளும்
மதவெறி பிடிக்காது.....

காகம் பிடிக்கும்
காக்கையின்
கரிய நிறம் பிடிக்கும்
மேகம் பிடிக்கும்
துமிகள் பிடிக்கும்
சோகம் பிடிக்கும்
சோகம் தரும்
சுகங்கள் பிடிக்கும்
நட்பு பிடிக்கும்
நட்பின் போர்வையிலே
நய வஞ்சகம் பிடிக்காது.....

**செல்வி. இரா. பிரதீபா**
**(ஆங்கிலம் 2 ம் வருடம்)**

# மாற்றத்திற்கான கல்வி என்ற கருத்திட்டத்தை நோக்கி .....

## அறிமுகம்

*கற்றல் - கற்பித்தல் என்ற இரு செயற்பாடுகளும் மிக நுண்ணிய அருவச் செயற்பாடுகளாக விளங்குகின்றன. இந்த வகையில் இவற்றை ஒன்றில் இருந்து ஒன்று வேறு பிரித்து நோக்குவதோ, எல்லைகளை வரையறுத்துக் கொள்வதோ சாத்தியமற்றது.*

*கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் நேரடியாகப் பங்கு பற்றுபவர்கள் ஆசிரியரும், மாணவர்களுமே. கற்பித்தல் செயற்பாடு என்பது மாணவர்களை மையமாகக் கொண்டே இடம்பெற வேண்டும். ஏனெனில் இங்கு பயனாளிகளாக விளங்குபவர்கள் மாணவர்களே. கல்வியின் இலக்குகளை எதிர்காலத்தில், நடைமுறையில் தரிசனம் செய்யப் போகிறவர்களும் அவர்களே. அவ்வகையில் கற்பித்தலானது மாணவர்களைக் கருவாகக் கொண்டு செயற்படுத்தப்படல் வேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை.*


*"மாணவரை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் கற்பித்தலின் போது கருத்துக்கள், விடயங்களை மாணவர்களிடத்து வலிந்து திணிப்பவராக அன்றி, மாணவர் சுய விருப்போடு உள்வாங்குவதற்கு ஏற்ற இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதோடு அவர்களை சமூகப் பெறுமானமுடையவர்களாகத் தயார் செய்பவராகவும், உதவுபவராகவும் ஒரு ஆசிரியர் செயற்படுகின்ற நிலைமையே மாணவர் மையக் கற்பித்தல் அணுகுமுறை" எனக் கொள்ளலாம்.*


*இவ்வாறு அன்றி மாணவர்களது இயல்பு நிலைமைகளை கருத்தேற்றம் செய்து கொள்ளாது ஆசிரியர் தனது இயல்பு நிலையிலிருந்து கற்பித்தலை மேற்கொள்ளுகின்ற நிலைமையை ஆசிரியர் மைய அணுகு முறை என்று ஒருவாறு கூறிக்கொள்ளலாம்.*

*இது மாணவர் மைய அணுகு முறைக்கு முரணானது என்பதும் கருத்தில் கொள்ளலாம்.*

**"மாணவரை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் கற்பித்தலின் போது கருத்துக்கள், விடயங்களை மாணவர்களிடத்து வலிந்து திணிப்பவராக அன்றி, மாணவர் சுய விருப்போடு உள்வாங்குவதற்கு ஏற்ற இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதோடு அவர்களை சமூகப் பெறுமானமுடையவர்களாகத் தயார் செய்பவராகவும், உதவுபவராகவும் ஒரு ஆசிரியர் செயற்படுகின்ற நிலைமையே மாணவர் மையக் கற்பித்தல் அணுகுமுறை" இதனை விரிவாக விளக்குகிறார் இக்கட்டுரையாளர்**

# ஆசிரியர் மைய அணுகுமுறை, மாணவர் மைய அணுகு முறைகளை பிரதிபலிக்கும் எண்ணக்கருப் படங்கள்





பல்வகை சாதனப் பயன்பாடு
மாணவர் சுயதேவையில் கூடிய கவனம்
சிறந்த வகுப்பறை முகாமைத்துவம்
ணவர் மகிழ்வுடன் ஈடுபடுவர்
சிறந்த கவின் நிலை
பாராட்டுக்கள் வெகுமதிகள் கிடைத்தல்
மாணவர் செயற்பாடு அதிகம்
மாணவர் மைய அணுகுமுறை
அனைத்து மாணவர் மீதும் கவனம்
கருப் பொருளுக்கேற்ற கற்பித்தல் முறைகள்
மாணவர் மன மதித்தல்
ஆசிரியர் வழிகாட்டியும் வளம் செய்பவரும்
ஆசிரியரை மாணவர் விரும்புதல்
மாணவர் அனுபவித்துக் கற்க வாய்ப்பு
மாணவர் சிந்தனை செயற்பாட்டுக்க உரிய இடம்
மாணவர் ஆசிரியர் உறவு சுமுகமானது
மாணவர் வரவு திருப்தி
பாட இணைபாட , ஒழுக்கத்தில் கவனமாகவிருத்தல்
ஒப்படை வேலைகளில் ஈடுபாடு
சகபாடிகளிடையேயான உறவு சுமுகமானது
மாணவர் கலந்துரையாடுவர்

# கல்வியின் தேசிய குறிக்கோள்கள்

1. தேசிய பிணைப்பையும், தேசிய ஒருமைப்பாட்டையும் தேசிய ஐக்கியத்தையும் எய்துதல்.

2. வியாபகப் பாங்குடைய சமூக நீதியை நிலைநிறுத்துதல்.

3. நின்று நிலைக்கக்கூடிய வாழ்க்கைப் பாணியை வளர்த்தல்.

4. மேன்மையையும், திருப்தியையும், தன்னிறைவையும் தரக்கூடிய தொழில் வாய்ப்புக்களுக்கான ஆயத்தங்களைச் செய்தல்.

5. மனிதவள விருத்தியல் யாவரும் பங்கு கொள்வதற்கான பல்வேறு வாய்ப்புக்களை ஏற்படுத்துதல்.

6. ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த உறுதியான அக்கறை உணர்வைத் தொடர்ச்சியாகத் தூண்டுதல்.


7. கற்றலுக்குக் கற்றலும், மாறும் சூழ்நிலைக்குத் தம்மை இயைபாக்கம் செய்து கொள்ளலும்.

8. காப்புணர்வையும் உறுதிப்பாட்டு உணர்வையும் எய்துதலான சிக்கலார்ந்தனவும், எதிர்பாராதனவுமான நிலைமைகளைச் சமாளிக்கும் ஆற்றல்.


9. சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்கு உதவக்கூடிய தகைமைகளை விருத்தி செய்தல்.

இங்கு குறிப்பிடப்பட்ட இலக்குகள் யாவும் காத்திரமானவை. இவ் இலக்குகளை நிறைவு செய்து கொள்ளும் போதே பிள்ளை இன்றைய உலகின் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய பிரஜையாக மலர முடியும். இந்த இலக்குகளை எதிர்கால சமுதாயத்தின் சிற்பிகள் என்று கருதப்படுகின்ற மாணவர் சமுதாயம் அடைந்து கொள்வதில் பெற்றோர், சகபாடிகள், ஊடகங்கள் போன்ற புலங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றவை ஆயினும் ஆசிரியர்களது பங்கும் பணியுமே இங்கு வலுவானதாக உள்ளது. என்பதை ஆசிரியர்களாகிய நாம் ஆற்றுதலே கன்னிதயமானது. ஆசிரியர் மைய கற்பித்தலின் நலிவுகளையும், மாணவர் மையக் கற்பித்தலின் நலிவுகளையும், அறிந்து கொள்ளும் வகையில் இங்கு ஒரு சில மாதிரிகள் தரப்படுகின்றன.


## ஆசிரிய மைய அணுகு முறையைப் பிரதிபலிக்கும் மாதிரிப்படங்கள்




## மாணவர் மைய அணுகு முறையைப் பிரதிபலிக்கும் மாதிரிப்படங்கள்









## இலங்கையின் கல்வி வரலாறும், நடைமுறையும்

இலங்கையின் கல்வி வரலாற்றை நாம் புரட்டிப் பார்க்கின்ற போது பூர்வீக கால கல்வி மரபு என்று சொல்லப்படுகின்ற குருகுலக் கல்வி அமைப்பில் ஆசிரிய மைய அணுகு முறையின் பண்புகளே மிதமாகக் காணப்பட்டன.

காலணித்துவ ஆட்சிக் காலத்தில் இலங்கையின் கல்வி முறைமை, முற்று முழுதாக காலணித்துவ நாடுகளின் நலன்களைப் பேணும் வகையிலேயே திட்டமிடப்பட்டிருந்தமை யாவரும் அறிந்ததே.

பிரித்தானிய ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியில் ஆறுமுகநாவலர், அநகாரிக தர்மபால, சித்திலெவ்வை, முதலியோர்கள் கல்வியில் மறுமலர்ச்சிச் சிந்தனைகளை உதிர்த்தனர். அவை தொடர்ந்து வந்த காலங்களில், குறிப்பாக இன்றும் கூட காலத்துக்கும், நாட்டிற்கும் பொருத்தமான பல அரிய சிந்தனைகளை முகிழ்த்திருந்தாலும் கூட அவை முற்று முழுதாகச் செயல் வடிவம் கொண்டிருக்கவில்லை. என்பது கண்கூடு.

இதற்குரிய காரணங்களை ஆராய்ந்த போது பல ஆசிரியர்களால் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களாக,

1. பாடப்பரப்பு என்ற சுமை
2. பாடத்திட்டத்தை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தம்
3. நேரம் போதாமை (இடையூறுகள்)
4. மாணவர் வரவு இன்மை
5. பொருத்தமற்ற வளப்பகிர்வு
6. கணிப்பீட்டுக் கலாசாரம் தோன்றிய போதும் மதிப்பீட்டுக் கலாசாரம் இன்னும் நடைமுறையில் இருத்தல் (இதனால் பிள்ளைகள் இடர்ப்படுகின்றனர்.)
7. ஆசிரியர் வாண்மைக்கான செயலமர்வுகள் உரிய வாண்மைத்துவத்தைக் கொடுப்பதில்லை.
8. ஆசிரியருக்கு கற்றல் - கற்பித்தல் தவிர்ந்த படிவங்கள் பூரணப்படுத்துதல் முதலிய வேலைப் பழுக்கள்
9. பாட ஆசிரியருக்கு பொருத்தமற்ற பாடத்திணிப்பு
10. வகுப்பில் மாணவர் தொகை அதிகம்
11. பொருத்தமற்ற வகுப்பறை
12. பாடசாலையில் பொருத்தமற்ற நிர்வாகம் உதாரணம்:- அதிபர் உரிய வளங்களைப் பெற்றுக் கொடுப்பதில் தாமதித்தல்.

இது போன்ற பல காரணங்களை ஆசிரியர்கள் முன்வைக்கிறார்கள். இப்பேற்பட்ட காரணங்களில் உண்மை இல்லாமல் இல்லை. எங்களுடைய

குடும்ப பொருளாதார நிலைமைகள் மிகவும் இறுக்கமான நிலையில் இருந்தாலும் கூட நாங்கள் ஒவ்வொருவரும் எமது பிள்ளைகளின் எதிர்கால சுபீட்சத்தைக் கருதி இயன்றவரை பொருத்தமான சீராக்க முறைகளை உருவாக்கி பிள்ளைகளது உயர்வுக்கு உறுதுணையாகவே செயற்படுவது வழமை இது போன்று எங்களுடைய நாட்டின் நலன்களை கருத்திற் கொண்டு, ஒவ்வொரு பிள்ளைகளையும் எங்களது சொந்தப் பிள்ளைகளாக உவந்தேற்று கருமம் ஆற்ற வேண்டியது ஆசிரியர்கள் ஒவ்வொருவரதும் பொறுப்பும் கடப்பாடும் காலத்தின் தேவையும் ஆகும்.

தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளில், சமூகக்கல்விப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர் மையக் கற்பித்தல் அணுகுமுறைகளை எவ்வளவு தூரம் பின்பற்றுகிறார்கள் என்பதை உற்றுநோக்கிய போது பெறப்பட்ட முடிவுகள் கூட திருப்தியற்றதாகவே தென்பட்டது.

| ஆசிரியர் குறியீட்டு இல | மாணவர் மைய அணுகுமுறை பின்பற்றல் வீதம் |
|---|---|
| 1 | 14% |
| 2 | 21% |
| 3 | 89% |
| 4 | 46% |
| 5 | 68% |
| 6 | 95% |
| 7 | 86% |
| 8 | 36% |
| 9 | 27% |
| 10 | 20% |

இந்த நிலைமை தொடர்வது ஆரோக்கியமானதன்று. தொடர்ந்தும் பாடசாலைகளிலே காணப்படுகின்ற கட்டுப்பாடுகள், மட்டுப்பாடுகள் போன்றவற்றை ஒருபுறம் தள்ளி உள்ளவற்றைக் கொண்டு உச்சமாகக் கருமமாற்றுவதையே இன்றைய சமுதாயம் ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றது.

இதனைக் கருத்தில் கொண்டு செயற்படுவதற்கு,

1. ஆசிரியர்களுக்கு தொழில் பற்றும், சமூகப் பிரக்ஞையும் பற்றிய உணர்வு அவசியமானது.
2. இயன்றவரை அர்ப்பணிப்புச் சிந்தையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
3. ஒவ்வொரு ஆசிரியர்களிடத்தும் ஆக்கத்திறன் விருத்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நடாத்திய ஆசிரியர்களுக்கான கற்பித்தல் சாதன உருவாக்கப் போட்டியில் ஆரம்பக்கல்வி ஆசிரியர் ஒருவர் சூரிய ஒளியில் பயன்படுத்தக்கூடிய ஆ.கல்வி ஆசிரியர் ஆக்கத்திறன் போட்டியில் O.H.P தயாரித்தமை குறிப்பிடத்தக்கது.

4. நவீன அறிவியல் உலகிற்குப் பொருத்தமுடையவர்களாக ஒவ்வொரு ஆசிரியர்களும் தம்மை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.
5. இயன்றவரை பாடசாலையில் உள்ள வளங்களைக் கொண்டு உச்சமாகப் பயனடையும் வழிகளை கண்டறிந்து கொள்ளுதல் வேண்டும்.
   (EX:- வல்லவன் கையில் புல்லும் ஆயுதம் வலிமையற்றவன் கையில் ஆயுதமும் புல்லு)
6. மாணவர்களைப் பெருமளவு இணைபாடச் செயற்பாடுகளில் ஒன்றிக்கச் செய்வதில் கவனம் செலுத்த வேண்டும்.
7. கற்பித்தலுக்கான பாடத்தைத் திட்டமிடும் போது செயற்பாடுகள் தழுவியதாகத் திட்டமிடுதல்

போன்ற கருமங்களை ஒவ்வொரு ஆசிரியரும் கவனத்தில் கொண்டு செயற்படுவது அவசியமானது. இவ்வாறு தன்னை அர்ப்பணித்து ஆசிரியர்கள் செயற்படுகின்ற போதும் அவர்களுக்கு உரிய கணிப்பும் கௌரவமும் வழங்குவதில் இன்றைய சமூகம் பெரிதும் அக்கறை செலுத்துவதில்லை என்ற ஒரு குறையையும் இங்கு சுட்டிக்காட்டுவது அவசியமானது எனவே ஆசிரியர்களுக்கான உரிய சமூகப் பெறுமதியை பெற்றுக் கொடுக்கும் வகையில் உரிய தரப்புக்கள் கவனம் செலுத்தும் ஏது நிலைகளையும் தோற்றுவித்துக் கொள்வது அவசியமானதாகும்.

ஆசிரிய பணி மிகவும் உன்னததானது. இதன் முக்கியத்துவம் / மதிப்பு ஒரு போதும் குறைந்ததுமில்லை, குறைய போவதுமில்லை. விஞ்ஞானத்தின் அதீத வளர்ச்சியால் இன்று சுயகற்றலுக்கு உதவக் கூடிய எண்ணிறைந்த சாதனங்கள் தோன்றியுள்ளன, இனியும் தோன்றக் கூடும் இருந்தாலும் கூட ஆசிரியர்களுக்கான தேவை எப்பொழுதும் இருந்து கொண்டேயிருக்கும்.

ஆசிரியர்கள் அற்ற ஒரு கல்வி உலகை நாம் தரிசிப்பது என்பது சாத்தியமற்றது. அந்த வகையில் அதி உன்னதமான பணியினை மேற்கொள்கின்றவர்கள் என்ற உணர்வுடனும், பொறுப்புடனும் செயற்பட ஆசிரியர்களாகிய நாம் ஒவ்வொருவரும் முன்வரவேண்டும். மாறிவரும் உலகின் தேவைக்கு ஏற்ப எங்களை மாற்றிக் கொள்வதோடு, அந்த உலகை நோக்கி எங்கள் மாணவச் செல்வங்களையும் அழைத்துச் செல்வோமாக.

**திரு. மு. ஆனந்தராசா**
**(ஆசிரிய கல்வியியலாளர்)**

# A SALUTE TO J.N.C.O.E

It is with much gay
We celebrate our college day.

Dr. T. Kamalanathan founded this college
It is situated in Kopay village.

Our college is a miniature society
After five hard years we're here with gaiety.

President' vice presidents and teacher educators work hard
Here they really do well, their part.

In studies and sports we do our best
And with trust we leave to God the rest.

With pride and pleasure we look aback
light green is our college flag.

You produce the architects of our society
we the sixth batch have entered with Anxiety.

We Salute J.N.C.O.E the mighty king
With a high spirit we always sing.

Miss. Kugavathana P.
(Science 1st Year)

# நல்லாசிரியர் என்பவர் யார்?

ஆசிரியர் என்றால் அஞ்ஞான இருளை அகற்றி மெஞ்ஞானமாகிய ஒளியினை வழங்குவார் எனக் கூறலாம். எவ்வாறு ஆசிரியருக்கு வரைவிலக்கணப்படுத்தினாலும் நல்லாசிரியர் என்பவர் யார் என நோக்குவோமாயின் "அறிவு" பசியைத் தூண்டாத ஆசிரியர் ஆசிரியல்ல. அது வெளிச்சம் இல்லாத விளக்கு போன்றது" எனக் கூறுவதன் ஊடாக அறிவுப் பசியை தூண்டும் துலங்களாக இருக்க வேண்டும்.

"ஐக்கிய அமெரிக்க நாட்டின் எதிர்கால ஆசிரியர்கள் தொடர்பான விதப்புரையில்" நல்லதொரு ஆசிரியர் குழாம் இன்றி நல்லதொரு பாடசாலையை உருவாக்க முடியாது என விதப்புரை செய்துள்ளது. எனவே ஆசிரியர் என்பவர் பாடசாலையின் முதுகெலும்பாக இருப்பதைக் காணலாம்.

"எவனை சந்தித்த பிறகு நீ உலகை முன் போல பார்க்கவில்லையா அவனே ஆசிரியன்" என கூறுவதன் ஊடாக ஆசிரியரின் மகத்தும் கூறப்படுகிறது. ஓர் தோட்டக்காரன் எவ்வாறு நிலத்தைப் பண்படுத்தி விதையினை விதைத்து அதற்கு நீர்பாய்ச்சி அதற்குரிய வளங்களை வழங்கி பயன்தரு மரமாக வளர்க்கிறனே அதே போல மாணவர்களிடம் செம்மைப்படுத்தப்படாத அறிவினை செம்மைப்படுத்தி சமூகத்தில் ஆற்றல், ஆளுமையுள்ள நற்பிரஜையை உருவாக்குதல் நல்லாசிரியரின் கடமையாகும்.

"அமர்சனின்" கருத்துப்படி அணுவைத் துளைக்கும் ஆற்றலைவிடச் சீரான திசையில் மனித மனத்தை மாற்றுவதே உயர்ந்தது" என கூறுகிறார் எனவே மாற்று முகவராக நல்லாசிரியர் தொழிற்படவேண்டும். இதனையே "சோக்கிராட்டில்" "மனிதருக்கு மரியாதை இல்லை அறிவுக்கே மரியாதை" எனக் கூறியுள்ளார். எனவே மரியாதைக்குரிய அறிவினை நல்லாசிரியர்கள் மூலமே வழங்க முடியும். வெறுமனே அறிவை மட்டும் புகட்டுவார் நல்லாசிரியர் அல்ல எல்லா ஆற்றல்கள், ஆளுமைகள், பழக்கவழக்கங்கள், ஒழுக்கம், விழுமியக் கருத்துக்களையும் போதிப்பவராக ஆசிரியர் இருத்தல் வேண்டும்.

உயிர் உள்ள ஓவியத்தை கட்டியெழுப்புவர்களாகிய இவர்கள் ஏணியும், தோணியும் போன்றவர்கள் ஏணியில் மேலே செல்ல முடியும். தோணியில் ஏறி கடலைக் கடக்க முடியும். நல்ல சமுதாயத்தை உருவாக்க, உயர்த்த வேண்டும் என்ற குறிக்கோளை உடையவராக இருப்பவர் ஆசிரியர். அத்தோடு காலத்துக்கு ஏற்ப தேவைக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்பவராக, நடிகனாக, நண்பனாக, ஆலோசகராக, வழிகாட்டியாக, முன்மாதிரியாக மாற்றிக்கொள்ள வேண்டும். பலவடிவங்களை எடுக்க கூட்டியவராக இருப்பார்.

தராசைப் போன்று நிறைகோளாக பக்கச் சார்பற்று இருத்தல் வேண்டும். பாடத்தைத் திட்டமிட்டுப் பொருத்தமான கவர்ச்சிகரமான, மகிழ்வூட்டலாகக் கூடியவகையிலும் கற்பித்தல் முறைகளையும் சாதனங்களையும் பயன்படுத்துதல் வேண்டும்.

மாணவர்கள் தாம் கற்கின்றோம் என தெரியாமலே கற்கக் கூடியவகையில் விளையாட்டு முறை மூலம், குழுமுறைமூலம், செயற்பாட்டு முறை மூலம், களச் செயற்பாடுகள் மூலம், அவதானிப்பு முறை மூலம், செய்முறை மூலம் போன்ற பல வழிகளினூடாக கற்றலை மிக எளிமையாக சந்தோசமாக எடுத்துச் செல்லல் அவசியமானது. மாணவர்களின் உளவியல் தேவைகளை நிறைவு செய்யக் கூடிய வகையில் கற்பித்தலை மேற்கொள்பவராக இருக்க வேண்டும். மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளை அறிந்து அதற்கேற்ப அவர்களை வழிப்படுத்தி வழிகாட்டுதல், அவர்களின் பலம், பலவீனங்களை இனங்கண்டு அவர்களுக்கு பொருத்தமாக கற்பித்தலை மேற்கொள்ளுதல், வகுப்பறையை முகாமை செய்பவராகவும், தீர்மானங்களை மேற்கொள்பவராகவும், கணிப்பீடு, மதிப்பீட்டை மேற்கொள்பவராகவும், சுறுசுறுப்பானவராகவும், நன் நடத்தை உடையவராகவும் எல்லா மாணவர்களது வெற்றிக்கும் உழைப்பவராகவும் சமூகத்தில் புதுமைகளை புகுத்துவராகவும், கண்டுபிடிப்பவராகவும். நவீன தொழில் வாண்மை உத்திகளை கையாளுபவராகவும், புதிய தகவல் தொழில் நுட்பப் புரட்சி, பூகோளமயமாகுதல், சவால்கள் என்பவற்றிற்கு முகம் கொடுக்கக் கூடியவகையில் சமூக மாற்றத்தின் முக்கிய பங்காளராகவும், கல்வியின் புத்தாளர்களாகவும் இருத்தல் வேண்டும். இது மட்டுமன்றி இணைபாடவிதானச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துபவராகவும் இருத்தல் வேண்டும்.

பாடத்தை மட்டும் கற்பிப்பதோடு நின்றுவிடாது மாணவர்களை வாழ்க்கைக்குத் தயார்படுத்துதல் வேண்டும். அதாவது மாணவர் பெறும் அறிவை அடிப்படையாகக் கொண்டு எதிர்கால வாழ்வுக்கு வேண்டிய அடித்தளத்தை இடுவதற்கு வழி செய்தல் வேண்டும்.

சமூகத்தில் கருத்துக்களை பரிமாறிக் கொள்ளும் அங்கமாக விளங்குவதோடு கற்பித்தலில் ஈடுபாட்டனும் விசுவாசத்துடனும் வெறுப்பின்றிக் கற்பித்தல் வேண்டும். அத்துடன் தம்மையும் வளப்படுத்தி சமூகத்தையும் வளப்படுத்தி நிலைமாற்றத்தை ஏற்படுத்தும் பணியில் நல்லாசிரியர்கள் முனைப்புடன் செயற்பாடுவர்கள் எனக் கூறுவதில் ஐயமில்லை. மேலே கூறப்பட்டவற்றைக் கொண்டு விளங்குபவரே நல்லாசிரியர்.

நல்லாசிரியர் சீர்மியநாடியாகவும் சமூகத் தேவை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி சமூகத்திற்கும், நாட்டிற்கும் சேவை செய்பவராகவும் இருக்க வேண்டும்.

**செல்லத்துரை ஷகிலா**
**(2ம் வருடம், ஆரம்பக்கல்வி)**

# மாணவர் மாண்பு

அன்னை தந்தையை மதித்திட வேண்டும்
அன்பு காட்டி அணைத்திட வேண்டும்
அறங்களை செய்து சிறந்திட வேண்டும்
அறிவுக் குணத்தை வளர்த்திட வேண்டும்

ஆக்கங்கள் பலவகை செய்தல் வேண்டும்
ஆளுமைக் குணத்தை வளர்த்திட வேண்டும்
ஆசிரியரை போற்றி மதித்திட வேண்டும்
ஆறுதல் வழியினில் நடந்திட வேண்டும்

அறிவின் சிறந்தோரை மதித்திட வேண்டும்
அவர் சொற்படி நடந்திட வேண்டும்
கற்பதை கசடறக் கற்றிட வேண்டும்
கற்றதன்படி நடந்திட வேண்டும்

தீமையை எதிர்க்கும் குணமும் வேண்டும்
திருட்டுக் குணங்களை ஒழித்திட வேண்டும்.
இறைவனை தினமும் வணங்கிட வேண்டும்
குறைகளைக் களைந்து வாழ்ந்திட வேண்டும்

இல்லாதவருக்கு இரங்கிட வேண்டும்
இயன்றவரை அவருக்கு உதவிட வேண்டும்
நல்லோராக வாழ்ந்திட வேண்டும்
நாளைய உலகம் நமக்கென வேண்டும்.

செல்வி. மகேஸ்வரன் தட்சாயினி
(நடனத்துறை 1ம் வருடம்)

# ஆசிரியருக்குத் தொழில்சார் கல்வி அவசியம்

ஆசிரியர்கள் தமது தொழிலைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு விசேட ஆற்றல்களைப் பெற்றிருத்தல் அவசியம். அத்துடன் விசேட ஆற்றல்கள் எவை என இனங்கண்டு அவற்றை விருத்தி செய்யவும் வேண்டும். அத்துடன் பாடசாலைகளிலே மாணவர்களுக்கு எழும் பிரச்சினைகளையும் இனங்கண்டு தீர்த்துவைக்க வேண்டும். இதற்கு எல்லாம் தொழில்சார் கல்வி அவசியமாகிறது. இது பற்றி நோக்குகையில்,

ஏதாவது ஒரு சேவையை ஒரு தொழிலாக ஏற்றுக் கொள்வதாயின் அதற்கு ஐந்து பண்புகள் இருக்க வேண்டும் என ஐக்கிய அமெரிக்க நாட்டைச் சேர்ந்த கல்வியியலாளரான "கலாநிதி சிட்னி றொஸ்க்" என்பவர் தனது "கற்பித்தல் என்பது ஒரு தொழிலாகும்" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பண்புகளாக ஒரு தொழிலில் ஈடுபட்டவர்கள் தங்களது அபிலாசைகளைக் கருத்திற் கொள்ளாது பொது மக்களின் நலனுக்காக சேவை செய்ய வேண்டும் என்றும், தொழிலுக்கான அங்கீகரிக்கப்பட்ட நியமங்களைக் காணல், தொழிலே சில கடமைகளை நடைமுறைப்படுத்தும் போது சுயமான சரியான தீர்மானங்களை எடுக்கும் திறன் பெற்றிருத்தல், முறையாக அமைக்கப்பட்ட நிறுவனமொன்றில் செயற்பாடுடைய அங்கத்துவராக இருத்தல் வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலே கூறியுள்ள பண்புகளுடனான கருத்துக்களை பிரித்தானியாவைச் சேர்ந்த கல்வியியலாளராகிய "சேர் றொனால்ட் குட்" என்பவரும் கூறியுள்ளார் இந்தவகையில் ஆசிரியத் தொழிலானது மிக முக்கியமான ஒரு தொழிலாகக் காணப்படுகின்றது. இதனை ஒரு தொழில் என்று கூறுவதைவிட ஒரு சேவை என்றே கூறலாம். எந்தத் தொழிலைச் செய்வதற்கும் ஒரு தொழில்சார் பயிற்சி அவசியமாகக் காணப்படுகின்றது. அந்த வகையில் ஆசிரியத் தொழிலுக்கும் தொழிற்பயிற்சி அவசியமாகும். இதன்படி சேவை முன் பயிற்சி, சேவைக் காலப் பயிற்சி என்ற அடிப்படையில் வழங்கப்படுகின்றது.

ஆசிரியத் தொழிலுக்கு உடற் சிரமத்திலும் பார்க்க உளத்தையும், நுண்ணறிவையும் பயன்படுத்த வேண்டும். எனவே, ஆசிரியர் பரந்தளவில் உயர் மட்டத்திலான பொதுக்கல்வியைப் பெற்றவராக இருக்க வேண்டும். இது ஆசிரியர்களுக்கான தொழில்சார் கல்வியில் மிக முக்கிய ஒரு பங்காகக் கருதப்படும்.

ஏனைய தொழில்களைப் போலவே ஆசிரியத் தொழிலுக்கும் நிச்சயமான தகைமைத்துவம் உண்டு ஆசிரியர்களுக்கான தொழில்சார் கல்வியின் அடுத்த முக்கிய அம்சம் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றில் தேவையானவற்றை

அவர்களுக்கு வழங்குதலாகும். முழுமையாக நோக்கும் போது மாணவரைப் புரிந்து கொள்ளுதல், வகுப்பறை ஒழுங்கமைப்பு, வகுப்பறை நிருவாகம், கற்பித்தல் தொழில் நுட்பங்கள் என்பவற்றை ஆசிரியத் தகைமைத்துவம் உள்ளடக்கும். ஆசிரியர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டிய திறன்களைப் பற்றி பேராசிரியர் எப்.எஸ். என் மக்ஜாலண்ட் என்பவர் "அறிவியல் சார் கற்பித்தல்" என அறிமுகப்படுத்தியுள்ளார்.

ஆசிரியத் தொழிலில் சில இடைத் தொடர்புகள் காணப்படுகின்றது. ஆசிரியத் தொழில் மட்டுமல்லாது அது ஒரு பாரிய சேவையுமாகும். இவ் ஆசிரியர்கள் இந் நாட்டு இளம் சந்ததியினரை வழி நடத்தும் பாரிய பொறுப்பினைக் கையேற்றுள்ளனர். இதனால் ஆசிரியர் தங்களது இடைத் தொடர்பை பெற்றோரிடமும் வைத்துள்ளார்கள். இவ்வாறான இடைத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் தொழில்சார் பயிற்சி மூலமாகக் காணப்படுகின்றது.

பாடசாலை சமூகத்தின் ஒரு பகுதியாகும். இதனைத் தனிப்பட்ட ஒரு சுயமாக இயங்கும் தாபனமாக கருத முடியாது. பாடசாலைக்கும் சமூகத்துக்குமிடையில் நெருக்கமான தொடர்புகள் காணப்பட வேண்டும். ஒரு பாடசாலைக்கு உயிர் ஊட்டத்தைக் கொடுத்து நிலைத்திருக்கச் செய்வது சமூகமாகும். சமூகமும் பாடசாலையும் ஒன்றுடன் ஒன்று பிரிக்க முடியாதளவுக்கும் பின்னிப் பிணைந்துள்ளது. எனவே தான் தற்போதைய ஆசிரியர்கள் சமூகத்துடன் தமது தொடர்புகளை விருத்தி செய்து கொள்ள வேண்டும்.

எனவே தான் ஆசிரியர் சேவை ஒரு தொழிலாகும். அதற்கென சில விசேட பங்களிப்புக்கள் உள்ளன. தம் பங்களிப்பை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்ள அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை விருத்தி செய்து கொள்ள வேண்டும். தொழில்சார் கல்வி மூலம் ஆசிரியர் தன் கடமைகளைச் சரியாகவும், திறமையாகவும் செயற்படச் செய்ய வேண்டும். ஆசிரியர் தொழில்சார் கல்வியோடு உயர் மட்டத்திலான பொதுக் கல்வியையும் பெற்றிருக்க வேண்டும். ஆசிரியர் எப்பொழுதும் சுயகட்டுப்பாடுடையவராகவும், நல்லொழுக்கம் உடையவராயும் இருக்க வேண்டும். அத்துடன் அவர் தொழில்சார் ஒழுக்கமுடையவராகவும், தொழில்சார் தொடர்புகளும், சமூகத் தொடர்புகளும் வைத்திருக்க வேண்டும். ஆகவே ஒரு ஆசிரியருக்குத் தொழில்சார் கல்வியானது அவசியமான ஒன்றாகக் காணப்படுகிறது.

த. பிரியதர்சினி
(2ம் வருடம், ஆரம்பக் கல்வி)

## யார் துணிவார்.....?

கங்குலின் மடியிலே
அங்குல மங்குலமாய்
ஊர்விட்டகன்ற அந்த நாள்!
கைகளிலே ஒவ்வொன்று,
தோளிலே ஒன்று, இடுப்பிலே ஒன்று
என பிள்ளைச்சுமை தாங்கிய
சோகநாள்!
பிரிந்தவர் குரல்களும்,
பிள்ளைகள் கதறலும்,
பிணமாவோர் முனகலும் ஒன்றாய்
விண்ணைப் பிளந்திட்ட அந்தநாள்!
சாதிமத பேதமின்றி
சமயத்திற்குதவியபடி
சாலையில் நடந்த அந்த நாள்!
ஆள் தெரியா இருளிலே
வினாக்குறியுடனான முகங்கள் மட்டும்
விளங்கிய விந்தை நாள்!
இலக்கின்றிப் பயணித்த,
வாழ்க்கையைப் படித்திட்ட
முதல் நாள்!
இடர் தந்த இடப்பெயர்வின்
ஈர்ஐந்து ஆண்டுகளில்
கறைபடிந்த அந்த நாள் கரைந்தேபோனது!
எனினும் மீண்டுமோர் அந்த நாள்
பூமியில் தோன்றுமெனில்
பிணமானாலும் கூட
பெயர்வதற்கு யார் துணிவார்?

சி. கௌசிகன்
(நூலகவிஞ்ஞானம் 2ம் வருடம்)

## சுனாமி......

மறுபடி பிறந்தேன்
உடல் அலையோடு
போகையில்.....
எனது இறுதிமூச்சு
நீரோடு போயிற்று!
ஏறி நின்று
பயணித்த அலை,
என் வீடுதேடி வந்தது.
என்னோடு சேர்த்து
அனைத்தையும்
அள்ளி எடுத்திற்று!
ஒருமுறை, இருமுறை
சுழன்ற சுனாமி
என்னை ஏற்றிவிட்டிருந்தது
மரக் கொம்பொன்றில்!
ஏதோ தப்பிவிட்டேன்
துயர் சுமந்தபடி
ஆனாலும்,
மீண்டும் அலையேறி
மகிழ்வேன் கடலுடன் கரையும்
என்னுடன் இருக்கும் வரை.....

26-12-2005 சுனாமி அனுபவத்துடன்
க. பரமசிவன்
(2ம் வருடம், நாடகமும் அரங்கியலும்)

# Domain in learning English as a second language

As Behaviourist Psychology and Cognitive Psychology say about language learning, language learning is centered on the human mind and his environment. Learning takes place in different forms such as imitation, memorization, observation, intuition, inheritance and so on. But the ability to learn a language differs from one person to another in the context of second language learning. As Noam Chomsky, a cognitivist, explains the Language Acquisition Device (LAD) is the constant factor that has different spheres such as reinforcement, observation, natural inquisitiveness and imitation. For a first language learner, the innate abilities are genetically transmitted. Thereby a child as a mother tongue learner gets the ability to generalize, to hypothesize and to process the information that it hears. Chomsky believes that the innate capacity which mostly bound with the human-mind.

It is possible that we can question whether the Language Acquisition Device is the only one important factor in the language learning process. It is quite right because every one has an equal capacity to acquire the language in the first language learning. But in a context of learning a second language, the ability can be decided by various factors.

These variables seem to be the real incentives or the real obstacles in this learning process. They are generally viewed on the domain of social and Psychological perspectives. The social aspects such as age, socio-economical status, linguistic environment and gender occupy an essential part but in the psychological aspect the attitude of the learner, motivation, socio-political factors take the major role. And also the personal characteristics, the rate of acquisition and the kind of instruction seem to have strong influence on second language learning.

Considering the variables, the age of the learner at first seems to be a predominant variable in language learning. An adult learner may achieve the target easily through out the cognitive development and the maturation in the second language learning. If the second language learner is in the pre-matured position, the learner will face in understanding the linguistic manipulation. Neuro-linguistics believes that during the neuro-physiologically determined period, a second language learner feels it to learn. The embroyologists who have found out that after this determined period, it is very difficult to get the native like control of a second language. This is very true that we can observe many adult learners making errors in pronunciation in the second language learning process.

The knowledge of aptitude decides the consuming time taken to learn the second language. The normal intelligence and grasping power are helpful in learning the second language quickly and easily. If the knowledge of aptitude is low, the learner may experience delay in making the hypothesis, generalizing, finding the linguistic universals and in processing the evaluation and the grammar of the second language.

Further more, socio-economic status plays an important role in second language learning. As teachers are instructed from the reforms in Education, they have to make use of activity oriented methods of teaching. The audio-lingual methods and subsequently the video usage would be very helpful to the learner. The ability to get all such facilities would be an advantage to the second language learner. This method of learning will be an additional help to the second language learner who may suffer from a lack of linguistic environment and situation.

Accessing the media and the availability of the particular linguistic community give much language exposure to the second language learner. The continuous exposure will create constant ideas in the second language, a fruitful familiarity in structuring sentences and a natural rhythm in using language as well. The availability of the linguistic environment also has advantages in learning a second language. When a second language learner mingles with the linguistic community, he has enough opportunities to achieve the target ability in the second language linguistically. This social interaction will be very helpful to use the paralinguistic and metalinguistic features.

Besides the motivation of the second language learner is the greatest factor which abruptly stops if there is no motivation in a learner. It is expected that the learner has a 'desire' to learn a second language. These are different instructional, individual and socio-cultural factors in the role of motivation. Some special variables like intelligence, perseverance, learning style, learning strategies, self-assessment etc. are obviously underlying that motivation to induce one to learn a second language. There are three types of motivation in second language learning. They are task motivation, instrumental motivation and integrative motivation. Task motivation means that one learns a second language for the sake of learning it . Instrumental motivation means one learns the language for the purpose of getting through the examination, getting a job, etc. Integrative motivation means that one who learns the second language feels that he acquires the social identity, social prestige, respect and so on.

Another variable is personal quality of the second language learner while learning a second language, the learner may make many mistakes consciously or unconsciously. If the learner feels very conscious of their mistakes that may discourage them. If the learner doesn't experience such discouragement, he can reach the linguistic accuracy in due course. So we can understand that self-

confidence, self-esteem, self-assessment, self-assurance contribute a lot in second language learning.

Time allocation is one of the variables for second language learning. The learner is expected to devote much of his time for learning. Frequency of learning enriches his knowledge of a second language. The attitude of a learner determines the positive effects. Anxiety in learning second language makes psychologically a successful learner. Boringness, hatred, disinterest, discouragement and dissatisfaction may lessen the rate of learning.

In addition to this fact, authoritarianism is a variable in the second language learning. When authority imposes some regulations to the public and in this context, whether they like or not , people are expected to learn a second language.

Now a days, we can observe that the kind of instruction in schools. This is also a determining factor in learning second language. The learner is successful in manipulating second language in the naturalistic environment. When a learner gets more instruction on the language, he will be an absolute learner very soon. But less instruction, inappropriate usage of the second language etc. may spoil the learner of the second language. To avoid this situation and make the learner keen in learning, the syllabus, teaching methods, teaching strategies, teaching aids etc. should be seriously considered and adapted in the classroom context. The activity centered and task centered programs will be much helpful the learner to use a second language at random. This is like a communicative approach in learning second language.

We can come to a conclusion from these variables, that there are different factors which influence in second language learning process can't be taught merely within the four walls under any circumstances.

Mr. S. Muhunthan
(Teacher Educator- English)

**இலங்கையின் வரலாற்று சிறப்புப் பெற்ற இடங்கள்**

| | | | |
|---|---|---|---|
| *1.* | *தலதாமாளிகை* | - | *கண்டி* |
| *2.* | *ருவன்வெலிச* | - | *அனுராதபுரம்* |
| *3.* | *வெந்நீரூற்றுக்கள்* | - | *கின்னியா (திருகோணமலை)* |
| *4.* | *குகை ஓவியங்கள்* | - | *சிகிரியா, டம்புள்ளை* |
| *5.* | *நீர்ப்பாசன திட்டம்* | - | *கல்லோயா, உடவளவை* |

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலைத்துறையின் "அழகெழல்" அழகியல் விழிப்புணர்வில் ஆக்கபூர்வ செயற்திட்டம்

"கலையானது தன்னலமும் பழிபாவங்களும் நிறைந்த உலகை விட்டு எம்மை உன்னத உலகிற்கு அழைத்துச் செல்ல வல்லது." என்கின்றார் கலைஞானி ரவீந்திரநாத்தாகூர். மனித மனத்தில் அறிவின்மையையும், துன்பத்தையும் வேண்டாத தீயசிந்தனைகளையும் களைந்து, வேண்டிய இன்பத்தையும், ரசஞான உணர்ச்சியையும் தரவல்லது கலை.

அழகிய எண்ணங்களும், அனுதாபப் பார்வைகளும் பெறுதலனாது அழகியற் கல்வியின் மூலம் சாத்தியமாகின்றது. சமூகத்திற்கு முரணான பழிவாங்கல், பகை, குரோதம் போன்ற தீய சிந்தனைகள் மறைந்து, மனிதனை மனிதன் மதித்து ஏற்றுக் கொள்ளும் தூய மனப்பாங்குகளை வளர்த்துக் கொள்ளும் அடித்தளம் அழகியற் கல்வியின் மூலம் அடையப் பெறுகின்றது. மனிதநேயமும், நயத்தல் திறனும், ஆக்க சிந்தனைகளும் வளர்வதற்கு அடிப்படையாவது அழகியற் கல்வி.

சமநிலை ஆளுமை உள்ளவர்களை சமூகத்தில் தோற்றுவித்து தனிமனித அறிவு, ஆற்றல், உளஇயக்கம் என்பன சீரடைவதும், உயர்வதும் அழகியல் மூலம் சாத்தியமாகின்றது. ஒவ்வொரு தனிமனிதனின் வெற்றிதான் சமூக உயர்ச்சிக்கு அடித்தளமாக அமைகின்றது. அத்தகைய தனிமனிதன் ஒரு குறிக்கோளை நோக்கி முன்னேறி, ஏனையோரது திறமைகளை மதிக்கவும், விமர்சனங்களை சகித்துக் கொள்ளவும், தலைமை தாங்கவும், சிறந்த மனப்பாங்குகளை விருத்தியாக்கவும் அழகியற் கல்வி ஆதாரமாகின்றது.


இயற்கை, செயற்கை அனர்த்தங்களால் அல்லலுற்றிருக்கும் எமது சமூக உறவுகளுக்கு தேறல் தரும் ஓர் ஆற்றுப் படுத்தலாக அழகியற் கலைகள் விளங்குகின்றது. பொதுக் கடமைகளில் ஈடுபாடும், எதிர்கால தூர தரிசனமும், தொடங்கும் ஆற்றல், தொடர்பு படுத்தும் ஆற்றல், அமைக்கும் ஆற்றல் என்பனவற்றையும் ஒருங்கே விருத்தி செய்கின்ற ஒரு புலமாக அழகியல் விளங்குகின்றது.

இன்று வகுப்பறைக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட எமது கல்வி முறைகள், பரீட்சைகளை மையப் படுத்தியதாக, மாணவர்களை ஓர் இயந்திர வல்லுனர்களாக இயக்குகின்ற நிலையே கண்கூடாகின்றது. இவ்வாறான மாணவர்கள் பிற்காலத்தில் பொறிமுறை வல்லுனர்களாக சுய நல நோக்கம் கொண்ட மானுடப் பண்புகள் மரணித்த மனிதர்களாகவே மீதமாவார்கள். எனவே தான் இன்றைய இளஞ் சந்ததியினர்க்கு மொழித்துறை சார்ந்த விருத்தியோடு கலை இலக்கியம் சார்ந்த கல்விக்கூடாக உயர்ந்த சிந்தனைகளையும் புத்தாக்கத்திறன்களையும் விருத்தி செய்ய வேண்டியது அவசியமாகின்றது. உயர்ந்த மனிதப் பண்புகளையும் சீலமேம்பாட்டுடன் கூடிய உயர்ந்த விழுமியங்களையும் கலைக் கல்வி மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்பது கலை ஆய்வாளர்கள் கருத்தாகின்றது.

"கலை ஆக்கம் என்பது சூழலுக்கும் சுயத்துக்கும் இடையே நிகழும் உரையாடல் என்றும் விளக்கப்படுகின்றது. பொருண்மை கொண்ட புதியதை உருவாக்குதல் கலையாக்க செயல் முறையாக கருதப்படுகிறது. கலையாக்கம் கற்பனையை அடிபொட்டி எழுகிறது. ஆனால் கற்பனைகள் அனைத்தும்

கலையாக்கம் ஆகிவிடாது. யதார்த்த நிலையில் இருந்து கற்பனை, நிலைமாற்றம் கொண்டு திரண்டெழுகின்றது. நடப்பியல் உணர்வோடு இணைந்த கற்பனையையே கலையாக்க மூலக்கூறில் வலிமை பெறுகின்றது. கலைப்படைப்பை அனுபவிப்பதால் சுவைப்பவனது விளக்கம் மேம்படல், விருத்தி பெறல், ஒழுக்கம் நல்லாற்றுப் படல், வாழ்வுப் பயன் மேலோங்கல் என்பன பெறப்படும் விளைவுகள் ஆகும்." என்கின்றார் அழகியற் கல்வி நூலில் ஆசிரியர் கலாநிதி சபா. ஜெயராசா.

காலத்தின் தேவையை கருத்தூன்றி கல்வியோடு இணைந்து கலைப்பணி ஆற்றிவரும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி தனது செயற்திட்டப் பணியில் கலை எழுச்சி சார் "அழகெழல்" நிகழ்வினை வருடா வருடம் பாடசாலை மாணவர்களிடையேயும், ஆசிரியர்களிடையேயும் நடாத்தி வருகின்றது. ஆயிரக்கணக்கான போட்டியாளர்களின் துடிப்பான பங்குபற்றலோடு கடந்த மார்ச் மாதம் 25,26 ஆம் திகதிகளில் இவ்வாண்டிற்கான போட்டிகள் இனிதே நடாத்தி முடிக்கப்பட்டுள்ளது.


திரு. க. ரட்ணேஸ்வரன்
(இணைப்பாளர் – நுண்கலைத்துறை)

கடந்த ஆண்டுகளை விட இவ்வாண்டு யாழ் மாவட்டம் தாண்டி கிளிநொச்சியிலும் "அழகெழல்" தடம்பதித்திருக்கின்றது. மாணவர்களுக்கு மட்டுமன்றி ஆசிரியர்களிடையேயும் அழகியல் விருத்தி கருதி சிற்ப ஆக்கம், சித்திரம் ஆகிய போட்டிகளும் நடாத்தப்பட்டன. போட்டிகளிலே சித்திரம், சிற்பம், இசை, அபிநயப்பாடல், உழவர் நடனம், தனிநடனம், சிறுவர் நாடகம், தனிநடிப்பு ஆகிய போட்டிகள் தரம் 4 தொடக்கம் உயர்தரம் வரை ஒவ்வொரு பிரிவுகளாக நடாத்தப்பட்டது.

சித்திரப்போட்டி – பிரிவு I இல் – தரம் 4, 5 மாணவர்களும் பிரிவு II இல் தரம் 6,7,8 மாணவர்களும், பிரிவு III இல் தரம் 9,10,11 மாணவர்களும், பிரிவு IV இல் உயர்தர மாணவர்களும் சுமார் 1500 மாணவர்கள் இதில் கலந்து சிறப்பித்தனர்.

தனி இசையிலும், தனி நடனத்திலும் 6,7,8 மாணவர்களும் அபிநயப்பாடலிலும், உழவர் நடனத்திலும், சிறுவர் நாடகத்திலும் தரம் 4,5 ஐ சேர்ந்த சுமார் 1500 மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பணப்பரிசில்களும், கேடயங்களும், சான்றிதழ்களும், தேர்ச்சியடைந்த சகல மாணவர்களுக்கும் கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

நிகழ்வுகள் போட்டிகளாக நடாத்தப்படினும் அழகியல் கல்வியின் அவசியத்தையும் தேவையையும் உணர்த்தும் வகையிலேயே ஒழுங்கமைக்கப்பட்டதென்பது யாவருக்கும் உணர்த்தப்பட்டது. நிகழ்வில் பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக முன்னாள் கல்வி அமைச்சின் செயலாளர் திரு. சுந்தரம் டிவகலாலா பங்கேற்றார்.

இப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வுகள் 07–05–2005 சனிக்கிழமை கல்லூரியின் கமலக் கலையரங்கில் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்டத்திலும் முதன் முறையாக இவ்வருடம் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வுகள் மூலம் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நுண்கலைத்துறை கலைப்பரிமாணத்தின் மேலும் ஒரு படி நகர்ந்துள்ளமை சிறப்புக்குரியது.

### பொறுமை

பூமியின் பெருமை
பூமியின் பிள்ளைகள் – எமக்கு
இல்லாத வெறுமை – இந்தப்
பொறுமை!

### அம்மா!

ஆள் ஒன்றை அச்சிட்டு
வெளியிடும்
அன்பான வங்கி – அதனால்
தான் அவளுக்கு
விலை மதிப்பில்லையோ!

### ஆசிரியன்

எல்லோரையும் உருவாக்கும்
எவராலும் உருவாக்க முடியாதவன்
இறைவனுக்குக் கூட – இவன்
இறைமை வேண்டும்.

### சிலை

கல்லின் சிதைவு – போக
சீரான பாகம் – சிந்தியுங்கள்......
இதற்கு மட்டும் என்ன
வேதனைகள் இல்லையா?
சிற்பியின் சினம்தான்
சிலை என்று பெயர் கொண்டதோ!

### பட்டாம் பூச்சி

தீயவரெல்லாம் திருந்தினால்
ஞாலம் அழகாகும்
மயிர் கொட்டியாய் மிரட்டிய நீ
மிருதுவான இறகு வாங்கி
மிளிர்வதும் அதனால் தானோ!

### சுனாமி

சூரியன் சுட்டெரிப்பான்
பரவாயில்லை
பாதகன் பழி தீர்ப்பான்
பரவாயில்லை
ஊழியின் உருவமாகிப்
பொங்கிப் போந்து
அழிக்குள் அடங்கினாயே!
உன் இதயமெங்கே?

### யுத்தம்

உரிமையை பெற்றெடுக்க
உயிர்களின் உயிருட்டலால்
உலகைக் கெடுக்க – வந்த
தீராத நோய் நீ!

### நட்பு

நான் உயிர் நீத்த பின்பு
என் தாயிற்குச் சொல்லவென்று
காகிதத்தில் ஒளித்து வைத்த –
இரகசியம்
முதலில் நீ பார்த்த பின்பு தான் –
என்
தாயிடம் சேர வேண்டும்.
கடைசி வரி கூடக் கேட்பது –
உன்னை
உரிமை! நட்பு எனும் ஒன்றை தானே!

ஆக்கம்
**செல்வி சத்தியகலா சோமசுந்தரம்**
**(1ம் வருடம், ஆரம்பக்கல்வி)**

# இந்த நட்சத்திரம் இனியும் ஒளிரும்!

## சிறுகதை

ஆரபி சிவஞானராஜா
(2ம் வருடம், ஆங்கிலம்)

"எங்களுடைய பரிசளிப்பு விழா நிகழ்ச்சிகள் எல்லாம் நல்ல சிறப்பாக இருக்க வேண்டும். மல்லிகா ரீச்சர், கலை நிகழ்ச்சிகள் எல்லாம் பிரமாதமாக இருக்க வேணும்" அதிபர் பேசிக் கொண்டு போகின்றார். மல்லிகா ரீச்சருக்கு அவர் மேலே சொன்னது எதுவுமே கவனத்தில் இல்லை. அதிபர் சொன்ன "கலை நிகழ்ச்சிகள் எல்லாம் பிரமாதமாக இருக்க வேணும்" என்ற வார்த்தைகளே திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டிருந்தன.

கனத்த சிந்தனையுடன் மல்லிகா ரீச்சர் ஆறாம் ஆண்டு "பி" வகுப்பினுள் நுழைகின்றார். "குட்மோனிங் ரீச்சர்" காலை நேரத்துக்கேயுரிய உற்சாகத்துடன் வெளி வந்தது. பிள்ளைகளின் குரல். "குட்மோர்னிங், இருங்கோ பிள்ளையள் பள்ளிக் கூடத்தில் பரிசளிப்பு விழா வரப்போகுது. அதுக்கு குழு நடனம் ஒன்று நாங்கள் செய்யப் போறம். அதுக்கு நான் நல்லாச் செய்யக் கூடிய பிள்ளைகளைத் தான் எடுப்பேன். அடுத்த பாடம் எல்லாரும் டான்ஸ் ரூமுக்கு வாங்கோ" பாடம் முடிய மல்லிகா ரீச்சர் வகுப்பை விட்டு அகலுகின்றார்.

பாடலின் இரண்டு வரிகளுக்கு அபிநயம் பிடித்துக் காட்டிவிட்டு, பிள்ளைகளை ஆடச் சொன்னார் மல்லிகா ரீச்சர், "சரி... அர்ச்சனா, நயனி, மஞ்சு, பூர்ணிமா, நிவேதா ஐந்து பேரும் நில்லுங்கோ. மிச்சப் பிள்ளையள் வகுப்புக்குப் போங்கோ" அடுத்தடுத்த வரிகளுக்கு அபிநயம் சொல்லிக் கொடுத்து பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தார் மல்லிகா ரீச்சர்.

"ரீச்சர், உங்களை அதிபர் வந்து சந்திக்கட்டுமாம்", தகவல் வந்ததும் ரீச்சர் அதிபர் அலுவலகம் நோக்கிச் சென்றார். என்ன ரீச்சர், பரிசளிப்பு விழாவுக்கு பழக்கத் தொடங்கிட்டீங்கள் போல", "ஓம் சேர், ஐந்து பிள்ளைகளை எடுத்திட்டன். பழக்கி எடுத்தால் நிகழ்ச்சி நல்லா வரும். பிள்ளையளும் நல்லாச் செய்யினம். பிரச்சினை இல்லை...." தொடர்ந்து கொண்டு போன மல்லிகா ரீச்சரை இடைநிறுத்தினார். அதிபர். "ரீச்சர், சொன்னது நினைவிருக்கிறது தானே? நிகழ்ச்சிகள் மிக மிகச் சிறப்பாக இருக்க வேணும். பெரிய பெரிய ஆட்கள் எல்லாம் வருவினம். நிகழ்ச்சியிலே ஒரு சின்னக் குழறுபடியும் வரக் கூடாதென்பது தான் என்னுடைய விருப்பம்" அதிபர் சொன்னவற்றை மிகக் கவனமாகச் செவிமடுத்துக் கொள்கிறார் மல்லிகா ரீச்சர்.

அன்றைய தினத்திலிருந்தே ரீச்சர் நடனப் பயிற்சியை ஆரம்பித்து விட்டார். "பிள்ளையள் நீங்கள் உடுப்புகள் தைக்க வேண்டி வரும். மற்றது நகையும் வாடகைக்கு எடுக்க வேண்டி வரும். உங்களில் யாருக்காவது இது

கஷ்டம் என்றால் எனக்கு இப்பவே சொல்லிப் போடுங்கோ. நான் வேற வகுப்பில் இருந்து பிள்ளைகளை எடுக்கிறன்". ரீச்சர் சொல்லச் சொல்ல அர்ச்சனாவின் முகத்திலே துன்ப ரேகைகள் பரந்து விரிகிறது. ஆனாலும் அவள் ரீச்சரிடம் எதுவுமே சொல்லவில்லை. பயிற்சியை முடித்துக் கொண்டு, வகுப்பை நோக்கி நடக்கின்றனர் ஐவரும். இறுதியாக தளர்ந்து போன நடையுடன் அர்ச்சனா.

பள்ளிக்கூடம் விட்டு வந்ததுமே, துள்ளி ஓடி வந்து கழுத்திலே கைபோட்டு ஊஞ்சலாடும் மகள் இன்று மிக அமைதியாக புத்தகப் பையை வைத்து விட்டுப் போவதைக் கண்ட மாதவி புருவம் உயர வியப்புடன் பார்க்கிறாள். அர்ச்சனாவிடம் கேட்பதற்கிடையில் ஏணைக்குள் படுத்திருந்த சின்னவன் அழத் தொடங்க, அவனிடம் அவளது கவனம் திரும்பியது. குழந்தையைத் தூக்கிச் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தவளிடம் "அம்மா, அப்பா எப்பம்மா வருவார்?" கேட்கிறாள் அர்ச்சனா. "இன்றைக்கு அப்பா பிந்தித்தான் வருவார். இரண்டு, மூன்று சைக்கிள்கள் கழுவிப் பூட்டிக் கொடுக்க வேணுமாம். ஏன் அப்பாவைத் தேடுறாய்" என்ற மாதவியிடம், "அப்பாட்டை நான் ஒன்று கேட்க வேணும்" என்கிறாள் அர்ச்சனா. "என்னென்று அம்மாட்டை சொல்லுங்கோவன் அர்ச்சனா" மாதவி பாசத்தின் நெகிழ்வு பொங்க மகளிடம் கேட்கின்றாள். "நான் அதை அப்பாட்டை தான் சொல்லுவன்" என்று அர்ச்சனா சொல்லிக் கொண்டிருக்கும் போதே படலை திறக்கும் சத்தம் கேட்க ஓடிப் போகிறாள் அர்ச்சனா. படலையைத் திறந்து கொண்டு குமரன் வந்து கொண்டிருந்தான். "அம். மா, அ...ப்..பா வாறார்". அர்ச்சனாவின் குரலில் சந்தோஷம் பொங்கி வழிந்தது. சைக்கிளை விடுவதற்குள் ஓடி வந்து காலைக் கட்டிப் பிடித்த மகளை பரிவு பொங்கத் தூக்கிக் கொள்ளுகின்றான் குமரன். "என்ன, என்ரை செல்லம் இன்றைக்கு இவ்வளவு சந்தோஷமாய் இருக்கின்றாள். என்ன விசயம்" "அப்பா, நீங்கள் சாப்பிட்டிட்டு வாங்கோவன். நான் உங்களுக்கொரு கதை சொல்ல வேணும்" தகப்பனின் கழுத்தைக் கட்டிக் கொண்டு கொஞ்சுகிறாள் அர்ச்சனா. எதுவுமே புரியாமல் மனைவியைப் பார்த்து, விழிகளால் வினவுகின்றான் குமரன். தனக்கும் எதுவுமே தெரியாதென்று தலை அசைக்கிறாள் மாதவி. "சரி செல்லம், அப்பா சாப்பிட்டிட்டு வாறன்" என்ற படி மகளை தோளில் இருந்து இறக்குகின்றான் குமரன்.

தகப்பன் சாப்பிடும் வரை, குழந்தையுடன் விளையாடுகின்றாள் அர்ச்சனா, சாப்பிட்டு முடிந்ததும், வந்து வாசல் புறமாய் கிளைத்துப் பரவிய வேப்ப மரத்தடியில் அமர்கின்றான் குமரன். "அர்ச்சனா, அப்பாக்கு என்ன சொல்ல வேணும்" மாதவி மகளிடம் வினவுகிறாள். அர்ச்சனாவின் முகத்தில் தயக்கம் பரவுகின்றது. எச்சிலை மென்று விழுங்கிக் கொள்கிறாள். "அ..ப்..பா, எங்கட பள்ளிக் கூடத்தில் பரிசளிப்பு விழா நடக்கப் போகுது. அதில கலை நிகழ்ச்சிகள் எல்லாம் நடக்கப் போகுது. நானும் டான்ஸ் ஆடப்போறனப்பா". குமரனுக்கும், மாதவிக்கும் பெருமை பொங்கியது. "அட....நல்ல விசயம் தானே. எங்கட

செல்லம் கெட்டிக்காரி தானே..." என்று சொன்ன தகப்பனிடம்... "அதில்லை அப்பா. அதுக்குப் புது உடுப்புத் தைக்க வேணும். வாடகைக்கு நகை எடுக்க வேணும்" என்று அமர்ந்த குரலில் சொல்கிறாள் அர்ச்சனா. "ரீச்சர் இன்றைக்கு வீட்டில் கேட்டுக் கொண்டு வரச் சொன்னவா, ஏலாதென்றால், வேற பிள்ளையளை எடுக்கப் போறாவாம்." இதனை மிகுந்த வேதனையுடன் சொல்லி முடித்த மகளைப் பரிவோடு பார்த்தான் குமரன். "அர்ச்சனாவுக்கு டான்ஸ் ஆட விருப்பம் தானே? அப்ப, அப்பா எல்லாம் வேண்டித் தாறன்" அர்ச்சனாவுக்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை. "உண்மையாவா அப்பா, சத்தியமாவா அப்பா, அர்ச்சனா மேல சத்தியமாவா அப்பா" என்று கேட்டு தகப்பனைத் திணற வைத்தாள். அவளுக்குள் சந்தோஷம் முகிழ்க்கிறது. அந்த சந்தோஷத்தின் பூரிப்போடு விளையாட ஓடுகிறாள் அர்ச்சனா.

"சுகமாய் அவளுக்கு சொல்லியாச்சு. காசுக்கு என்னப்பா செய்யப் போறீங்கள்? "வேதனையோடு குமரனைக் கேட்கிறாள் மாதவி. குமரன் சிரித்தான். "எங்கட கஷ்டம் எப்பவும் இருக்கிறது தானே மாதவி. பிள்ளை இவ்வளவு சந்தோஷப்படுகிறாள். நான் கட்டாயம் அதைச் செய்து தான் கொடுக்க வேணும். நான் யாரிட்டயாவது கடன் கேட்டுப் பார்க்கிறன்" குமரன் உறுதியோடு சொன்னான்.

மிகக் கடுமையான பயிற்சியின் விளைவாய் மிக அற்புதமாக ஐவரும் ஆடப் பழகியிருந்தார்கள். "தாயே...யசோதா.. என்ற அந்தப் பாடலுக்கு இறைவன் செய்த குறும்புகள், குழப்படிகளை அர்த்த பாவத்துடன் வெளிப்படுத்திய பிள்ளைகளைப் பார்க்க மல்லிகா ரீச்சருக்குப் பெருமையாய் இருந்தது. "நல்ல வடிவாய் செய்யிறீங்கள் பிள்ளைகள். ஒன்றையும் மறந்து போகாமல், இப்படியே நாளைக்கும் ஆடினீர்கள் என்றால் சரி. மற்றது நீங்கள் இங்க ஒரு மணிக்கே வந்திடனும். அப்ப தான் ஆறுதலாய் வெளிக்கிடலாம்," என்ற படி அகல்கின்றார் மல்லிகா ரீச்சர்.

தலைக்கு கைகளை அணையாய்க் கொடுத்தபடி படுத்திருந்த தகப்பனுக்குப் பக்கத்தில் போய் அமர்கின்றாள் அர்ச்சனா. "அ.....ப்...பா, அ...ப்...போ...ய் நித்திரை...யே? "அரைகுறை நித்திரையில் இருந்த குமரன், மகளின் குரல் கேட்டு விழித்துக் கொள்கின்றான்." என்ன குஞ்சு, என்னத்துக்கு கூப்பிட்டனீங்கள்?" "நாளைக்கு நீங்களும் வருவியள் தானே" மகளைச் சீண்டிப் பார்க்கும் எண்ணத்தில் குமரன் தீவிரமாய் எதையோ யோசிப்பது போல பாவனை செய்கின்றான். "நாளைக்கு...பெரிய வேலைகள்...." அவன் முடிக்க முதலே அர்ச்சனாவின் கண்களில் நீர் நிரம்பி வழிவதற்குத் தயாரான நிலையில் இருந்தது. குமரனுக்கு சிரிப்பு வந்தது. மகளை அன்போடு அணைத்துக் கொள்கின்றான். "என்ரை தங்கம் ஆடுகிறதைப் பார்க்காமல் எனக்கு வேற என்ன வேலை. அப்பாவும், அம்மாவும், தம்பியும் நாளைக்குக் கட்டாயம் வந்து, முன் வரிசையில் இருந்து பார்ப்பம். சரியோ. எங்கை இப்ப சிரியுங்கோ. பார்ப்பம்." கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, அரிசிப்பல் தெரிய சிரிக்கிறாள் அர்ச்சனா.

ஆடுவதற்கு தயாரான நிலையில் அலங்கரிக்கப்பட்டிருந்தனர் பிள்ளைகள். அர்ச்சனாவுக்கு இன்றைக்கு கட்டாயம் சுத்திப் போடவேணும் என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டாள் மாதவி. "இன்னும் கொஞ்ச நேரத்தில் நிகழ்ச்சி தொடங்கிவிடும். இனி நீங்கள் போய் இருந்து நிகழ்ச்சிகளைப் பாருங்கோவன்" மல்லிகா ரீச்சர் சொன்னதைக் கேட்டு அம்மாமார் அகலுகின்றனர்.

"அர்ச்சனா, உம்மட மஞ்சளும் சிவப்பும் கலந்த சீலைக்கு உந்த நீலக் கல்லு வைச்ச பதக்கம் வடிவில்லை. நான் போட்டிருக்கிற சிவப்புக் கல்லு வைச்சது தான் வடிவு. நாங்கள் இரண்டு பேரும் மாத்திப் போடுவமே" மஞ்சு கேட்க, அவள் சொல்வது உண்மையோ என குனிந்து தன் கழுத்தைப் பார்க்கிறாள் அர்ச்சனா. மஞ்சு சொல்வதும் சரிதான். "சரி மஞ்சு நாங்க மாத்திப் போடுவம்" அப்போது தான் அவர் அவர்களுக்குரிய ஆடைகளோடு மாலைகள் முற்றாகப் பொருந்தியிருந்தன. பார்வையாளர் பகுதியிலிருந்த அம்மாவை வரச் சொல்லி தான் இப்போது அணிந்திருக்கும் மாலையைப் பற்றி அவள் சொல்லத் தொடங்கும் போது தான் அர்ச்சனா பளார் என்று கன்னத்தில் அறையப்பட்டாள். அறைந்த விதத்தில் மாதவிக்கே கூட கண்ணீர் வந்து விட்டது. "கஷ்டப்பட்டனியள் என்றாலும் நேர்மையாய் இருப்பியள் என்று நினைச்சன். என்ரை பிள்ளைக்கு நான் போட்ட தங்கமாலையை அம்மாவும், பிள்ளையுமாய் சேர்ந்து களவெடுத்திருக்கிறீர்கள் என்ன? கள்ளக் கூட்டம்" என்ற மஞ்சுவின் அம்மா மீண்டும் அர்ச்சனாவின் செவிகளைத் திருகினாள். மாதவி அதைப் பொறுக்க முடியாமல் அவள் கைகளை தட்டி விட்டாள். அழக் கூட முடியாமல் விக்கித்துப் போய் நின்றாள் அர்ச்சனா. மஞ்சுவுக்கே அம்மாவின் ருத்திரத்தைக் கண்டு வார்த்தை வரவில்லை. "என்ன நடந்தது அர்ச்சனா...." ஐந்து விரலும் பதிந்திருந்த மகளின் கன்னத்தை பரிவோடு வருடியபடியே கேட்டாள் மாதவி. அதற்கிடையில் அர்ச்சனாவின் கழுத்திலிருந்த நீலக் கல் மாலையைக் கழற்றிக் கொண்டு, மஞ்சு போட்டிருந்த மாலையைப் பிடுங்கி நிலத்தில் எறிகின்றாள் மஞ்சுவின் தாய். மாலையின் முத்துகளும், மணிகளும் சிதறிப் பரவுகின்றன.

"கொஞ்சம் மரியாதையோட நடவுங்கோ" அவமானம் தாங்காது மாதவி சொல்கிறாள். "நீங்க செய்த வேலைக்கு உங்களுக்கு மரியாதை தராததுதான் குறைச்சல் மேலும் ஏதேதோ இரைந்து கொண்டே போகின்றாள் மஞ்சுவின் அம்மா.

"என்ன இங்க ஒரே சத்தமாய்க் கிடக்கு" என்ற படி வந்த மல்லிகா ரீச்சரிடம் ஓடிப்போய், தான் நேரிலே எல்லாவற்றையும் பார்த்தது போல் விலாவாரியாய் விவரிக்கின்றாள் மஞ்சுவின் அம்மா. "இல்லை ரீச்சர்.... என்று அர்ச்சனா சொல்லத் தொடங்க "முதல்ல நிகழ்ச்சி முடியட்டும். பிறகு விசாரிப்பம்" என்று முற்றுப்புள்ளி வைக்கிறார் ரீச்சர். மாதவி குறுக்கிடுகிறாள். "நாங்க கஸ்ரப்பட்டனாங்கள் தான். இப்ப கூட எல்லாம் கடன் வாங்கித் தான்

செய்திருக்கிறம். ஆனால் களவெடுத்ததென்று சொல்லாதேங்கோ" குரல் கம்ம சொல்கிறாள்.

நிகழ்ச்சி அறிவிக்கப்பட பிள்ளைகள் மேடைக்கு ஏறுகின்றனர். மனம் நிறைந்த குழப்பத்தோடு மேடையில் ஏறுகிறாள் அர்ச்சனா. அவளுக்கு நீல மாலையும், சிவப்புக் கல் மாலையும் மஞ்சுவின் அம்மாவும் தான் நினைவில் இருந்தது. ஆடவேண்டிய படிமுறைகள் ஏதும் நினைவில் இல்லை. எல்லாம் மறந்த நிலையில் இயங்கவே முடியாமல் நின்றாள் அர்ச்சனா. என்ன செய்வதென்றே ஒருவருக்கும் தெரியவில்லை. மற்றப் பிள்ளைகளும் தடுமாறத் தொடங்கினர். மிகுந்த குழப்பத்தோடும், தவறுகளோடும் ஆடிமுடித்துவிட்டு இறங்கினார்கள் பிள்ளைகள்.

அதிபருக்கு ஏகப்பட்ட ரென்ஷன், "என்ன ரீச்சர் இன்றைக்குப் படான் ஆகப் போட்டுது. என்ன பிழை, யார் பிழைத்தது" கேள்விக்கு அனைவரின் கைகளும் ஓரிடத்தைச் சுட்டிக் காட்டின. அங்கே அர்ச்சனா நின்றிருந்தாள் ஏகப்பட்டவாதப் பிரதிவாதங்களின் முடிவிலே, கசந்து வழிந்த மனதோடு மண்டபத்தை விட்டு அவர்கள் வெளியேறினார்கள். துவண்டு போன மகளைத் தூக்கித் தோளில் போட்டு ஆறுதல் படுத்தியபடி நடந்த குமரனைப் பின் தொடர்ந்தாள் மாதவி. பள்ளிக்கூடத்திலிருந்து பாதைக்கு இறங்கினார்கள். கடுமையான காரிருள் அப்பிக் கிடந்த அந்தப் பாதையில் அவர்கள் நடக்கத் தொடங்கினார்கள். அமாவாசை வானத்தில் நட்சத்திரங்கள் சுவாலிக்கத் தொடங்கின.

## மறக்க முடியாதே!

**கடவுள்**

**காலையும் மாலையும்**
**கைகூப்பி வணங்கும்**
**கணைக் கடலான**
**கணபதியை மறப்பேனோ.**

**பெற்றோர்**

**பள்ளிக் கனுப்பி வைத்து**
**பரீட்சையில் சித்திபெற்று**
**கல்வியில் உயரவைத்த**
**பெற்றோரை நான் மறப்பேனோ.**

**ஆசிரியர்**

**பாடம் தொடங்கி வைத்துப்**
**பள்ளியில் படிக்க வைத்துப்**
**பண்புகள் சொல்லித்தந்த**
**எம் ஆசானை மறப்பேனோ.**

**நண்பி**

**நாளும் உடனிருந்து**
**நட்புறவைத் தான்வளர்த்து**
**நாளும் உதவி செய்த**
**நண்பியை நான் மறப்பேனோ.**

ந. ரோகிதா
(1ம் வருடம், ஆரம்பக்கல்வி)

# கற்பித்தல் தர உள்ளீடுகளின் முக்கியத்துவம்!

ஒரு குழந்தை தாயின் கருவறையில் இருக்கும் போதே கற்கத் தொடங்குகிறது. தனது அகச்சூழல், புறச்சூழல் என்பவற்றிற்கு ஏற்ப தனது அசைவுகளை மாற்றிக் கொள்கிறது. கருவறையில் இருக்கும் 280 நாட்களில் அக்குழந்தை பெற்றுக் கொண்ட புதிய புதிய அனுபவங்கள் பிள்ளையின் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகிறது. நல்ல அழகியலுணர்வுடைய சூழலில் வளரும் பிள்ளை ஆளுமை, நுண்ணறிவு, ஆக்கச்சிந்தனை, அழகியல் உணர்வுடையவர்களாக மிளிர, குழப்பங்கள் நிறைந்த சூழலில் பிறக்கும் குழந்தை சூழலுக்கு ஏற்காத வகையில் பிறழ்வான நடத்தைகளை கொண்டவனாக உருவாகின்றான்.

தாயின் கருவறையில் இருந்து பூலோகத்திற்குப் பிரவேசிக்கும் குழந்தை புதிய சூழலுக்கு ஏற்ப தன்னை இயைவாக்கப்படுத்திக் கொள்கிறது. குழந்தை சூழலுடன் இடைவினை கொள்ளும் போது புதிய அனுபவங்களைப் பெற்றுக் கொள்கிறது. எவ்வாறெனில் கண், காது, மூக்கு, நாக்கு, சருமம் எனும் ஐம்பொறிகளினூடாக கற்றல் அனுபவங்களைப் பெறுகின்றது. அதுமட்டுமல்லாது மேற்படி புலன்களைத் தனித்தனியாகப் பயன்படுத்திப் பெறும் கற்றல் அனுபவங்களிலும் பார்க்க ஒரு சில புலன்களின் ஒன்றிணைப்பினால் கூட பயனுள்ளதும் பிழையற்றதும் நிலையானதுமான அனுபவங்களைப் பெறலாம் என ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இதன் மூலம் கற்றற் சாதனங்களின் தேவை அதிகமாக உணரப்படுகிறது.

ஒரு பிள்ளை பிறந்ததிலிருந்து இறப்பு வரை கற்றுக் கொண்டேயிருக்கிறது என உளவியலாளர்கள் கூறுகின்றனர். கற்றல் நிகழ்ந்துள்ளது என்பதனை பிள்ளையின் நடத்தையில் ஏற்படுகின்ற மாற்றங்களின் அடிப்படையில் உணரலாம். இதனையே திருவள்ளுவர்

"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

எனக் கூறியுள்ளார். இவ்வாறாக நாம் கற்றதன் வழி ஒழுகுவதன் மூலமே சிறந்த நடத்தைகளை உருவாக்க முடியும்.

## <u>கற்றல் தர உள்ளீடு</u>

கற்றற் சாதனம் எனும் போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவரொருவருக்கும் யாதாயினும் ஒரு பொருள் கற்பதற்கு உதவுமாயின் அது கற்றற் சாதனம் ஆகும். ஆகவே இயற்கைப் பொருட்கள் பலவும் ஒருவனுக்கு கற்பதற்கு உதவினால் அது கற்றற்சாதனமாகும். இதன் பிரகாரம் அகிலத்திலுள்ள சகல பொருட்களையும் கற்றற் துணைச் சாதனங்களாகக் கொள்ள முடியும்.

இரு காதுகளாலும் இரு கண்களாலும் அறிந்து கொள்வதற்கான உபகரணங்கள் கட்புல செவிப்புல உபகரணங்களாகும். இவை கட்புல செவிப்புல

ஆதாரங்கள், போதனை ஊடகமும் வளமும் போதனைச் சாதனங்கள் கற்பித்தலுக்கான துணைச் சாதனங்கள், தரஉள்ளீடு எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது.

தற்போது பெரும்பாலான நாடுகளில் கல்வி போதிப்பதற்காக பயன்படுத்தப்படும் கற்றற் சாதனங்களின் பயன்பாடு மிக வேகமாக அதிகரித்துச் சென்றுள்ளது. நோர்வே, சுவீடன், யப்பான், அமெரிக்கா, கனடா போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கற்றற் சாதனங்கள் ஊடாக பிள்ளைகள் கற்கின்றனர். ஆசிரியர் அதற்கு ஆற்றுப்படுத்துபவராகக் காணப்படுகின்றார். இத்தகைய நாடுகளில் கற்பித்தற் சாதனம் தயாரித்தல் என்பது புதியதொரு துறையாக வளர்ச்சி கண்டுள்ளது.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளான இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் கற்பித்தல் சாதனங்களின் பயன்பாடு மிக அரிதாகவே காணப்படுகின்றது. வகுப்பறைக் கற்பித்தலில் நவீன சாதனங்கள் பயன்படுத்தப்படாது Chalk and Talk முறையிலே கற்பித்தல் நடைபெறுகிறது.

பயனுள்ள கற்பித்தல் முதல்தர அல்லது காட்சிப் பொருள் அனுபவங்களின் ஆரம்பமாக மிகக் கருத்துப் பொருள் அனுபவமாக விருத்தியடையும். அதனால் சிறந்த கற்றற் சாதனங்களால் துலங்கல் பெறும் மாணவர்கள் வாய்மொழி மூலமாக மட்டும் கற்பித்தலுக்குப் பழக்கப்பட்ட மாணவர்களை விட பயனுள்ள முறையில் விருப்போடு கற்பார்கள்.

தொன்றுதொட்டு பேணப்பட்டு வரும் குருகுலக் கல்விமுறை பெரும்பாலும் விரிவுரைப் பாங்கினை ஒத்ததாகக் காணப்படுகிறது. இது பெரும்பாலும் கருத்துப் பொருள் சார்ந்தது ஆகும். அவற்றின் ஊடாக உண்மை நிலைகள் அல்லது சரியான உண்மை நிலைமைக்கு கிட்டிய அனுபவத்தை ஏற்படுத்துவது கடினம். ஆனால் கற்றற் சாதனம் மூலம் வாய் மொழி மூலம் உள்ள விளக்கங்களில் உள்ள குறைபாடுகளை நீக்கிக் கொள்ளவும், மாணவரின் அனுபவத்தை மேலும் உண்மைப்படுத்தவும் வழி ஏற்படுகின்றது.

கண்களால் பார்த்துப் பெறுகின்ற கற்றல் அனுபவமூடாக மாணவன் கற்றலில் விழிப்புணர்வடைவதோடு தூண்டுதலைப் பெறுகின்றான். காட்சி மூலம் கிடைக்கும் அனுபவம் பல கற்றல் சந்தர்ப்பங்களை உருவாக்குகின்றன.

"இதனையே நூறு பேச்சுக்களை விட ஒரு காட்சி மேலானது" என்ற சீனப்பழிமொழி உணர்த்தி நிற்கின்றது. எனவே வாய்மொழி மூலம் கிடைக்கும் அனுபவத்திலும் பார்க்க காட்சி மூலம் கிடைக்கும் அனுபவம் மிகச் செறிவானதாகக் காணப்படும்.

**த. சிவகுமார்**
**கல்வியியலாளர்**



# கலையும் சமூகமும்

சமூகம் என்பது ஏதோ ஒரு பொதுமைப்பாட்டின் அடிப்படையில் இணைந்திக்கும் ஓர் குடும்பம் ஆகும். இந்த ஒன்றிணைப்பு மொழி ரீதியாகவோ பிரதேச ரீதியாகவோ அமையலாம். கலைஞர்கள் தனி நபர்களே ஆயினும் அவர்கள் தமது சமூகத்தின் அங்கங்களே.

கலைப்படைப்பு என்பது கலைஞனின் திறன் வெளிப்பாடாகும். ஆயினும் அவன் சமூகத்தின் ஓர் அங்கம் என்ற வகையில் கலையை ஓர் சமூகத்தின் படைப்பாகவும் பார்க்கமுடியும் எனவே ஓர் கலைப்படைப்பினுள் இரண்டு சாராரை எதிர்கொள்ளுகின்றோம்.

1) கலைஞன் உருவாக்கிய சமூகம்
2) கலைஞன்

கலைப்படைப்பில் இவ் இரண்டும் பதியப்பட்டு இருப்பதை கண்டுகொள்ளலாம். உதாரணமாக ரவீந்திரநாத்தாகூரின் கீதாஞ்சலியில் இந்திய சமூகத்தையும் சந்திக்கலாம். அதே வேளை தாகூர் என்ற மனிதனையும் சந்திக்கலாம். அதாவது குறிப்பிட்ட சமூகத்தின் லயம் குறிப்பிட்ட கலைப் படைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கும் சில கலைஞர்கள் சமூகத்திற்கு முரண்பாடான கருத்துக்களைக் கொண்டிருப்பதுண்டு. இதற்கு பின்வரும் இரண்டு காரணங்களைக் குறிப்பிடலாம்.

1) சமூகத்தின் போலியான விடயங்களை தனது கலைப்படைப்பில் எடுத்துக் காட்டுவதனால்

2) கலைஞனிடம் காணப்படும் தீர்க்கதரிசனத் தன்மை.

இவ்வாறு சில முரண்பாடுகள் காணப்பட்டாலும் கலையென்பது சமூகத்தின் ஆக்கச் சுட்டிதான். எல்லாக் கலைப்படைப்பும் தாம் எழுந்த சமூகத்தின் பிரதிநிதிகளாகவே உள்ளன. அவை சமூகத்தின் பண்பாட்டை எடுத்து விளங்கும் உயிர்ப்பு மையங்களாக இருக்கும். குறிப்பிட்ட சமூகத்தின் நம்பிக்கை, பிளவுகள், அழகியல் என்பவற்றையெல்லாம் பரிமாற்றும் ஊடகமாக கலை அமையும். இதனால் தான் ஒரு சமூகம் பற்றிய ஆய்விற்கு அதன் கலைப்படைப்பு இன்றியமையாததாகும் சிலப்பதிகாரம் வணிக உடமை காலத்தை வெளிப்படுத்துவது போல் ரவிவர்மனின் ஓவியங்கள் காலணித்துவகால இந்தியாவின் பண்பாட்டை பிரதிபலிக்கிறது. கோயிற் சிற்பங்கள் பல்லவர்கால இந்தியாவையும் அதன் பக்திநெறியையும் எடுத்துக் காட்டுகிறது. இதே போல் கலை சமூகத்தை எடுத்துக் காட்டும். இவ் எடுத்துக் காட்டல் முறை உருவரீதியாகவோ அல்லது உள்ளடக்க ரீதியாகவோ அமையலாம்.

"அனித்த சங்கர்ரோய்" எனும் அழகியல் வாதி கலையென்பது ஒருவகைக் காட்சியென்று கூறினார். எவ்வாறாயினும் ஓர் சமூகத்தின் கலையினது வளர்ச்சியென்பது அந்தச் சமூகத்தின் வளர்ச்சியோடு ஒட்டியதாகவே காணப்படுகின்றது.

கோ. மதனகோபன்
(2ம் வருடம், நாடகமும் அரங்கியலும்)

# தமிழ் மொழியின் சிறப்பு

"சொல்லின் உயர்வு தமிழ்ச் சொல்லே அதை தொழுது படித்திடடி பாப்பா"

என்ற புரட்சிக் கவியின் இக் கருத்து தமிழ் மொழியின் சிறப்பை வானுயரக் கொண்டு சென்றுவிட்டது. இதனால் போலும் பாரதி பாடினான்

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்"

என்றான் பாரதி அதுசீர் இளமை குன்றிப் போகாமல் இருக்க வேண்டுமாயின் உயிர்ப் பண்போடு விளங்க வேண்டுமாயின் உலக செம்மொழிகளில் ஒன்றாக உயர்ந்தோங்கி இருக்க வேண்டுமாயின் ஒப்பியல்த் தமிழ் சரி நிகராக இருக்க வேண்டுமாயின் ஒப்பியற் தமிழ் நோக்கு இடம் பிடிக்க வேண்டுமாயின்

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்.

என்று உயர்ச்சியோடு பாடிப்போந்தான்.

இத்தமிழ் மொழியை பழந்தமிழ் நற்றமிழ், இன்தமிழ் வண்டமிழ், செந்தமிழ், என்ற பல வண்ணச் செயற்பாடுகளால் இலக்கிய மரபு குறிக்கின்றது. இவற்றுக்கு வேறு எம்மொழிகளுக்கும் இல்லாத தனி மரபும் தனிச்சிறப்பும், உயிர்ப்பண்பும் சிகரம் போல அமைந்துள்ளமை தமிழ் மொழியின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது.

ஒவ்வொரு மொழிக்கும் ஒருதனிப் பண்பு உண்டு ஜேர்மன்மொழி, ஆங்கில மொழி, இத்தாலி சமஸ்கிருதம், பாரசீகம், பிரஞ்சு, கன்னடம், தெலுங்கு மலையாளம், ஆகியவை உலகில் இருந்தாலும் அவை தமிழ் மொழியின் சிறப்புமிக்கு ஒவ்வாதவை வனப்பு இழந்து மொழிமரபு இழந்து கிடப்பவை ஆனால் எங்கள் தமிழோ.

"கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துருவும்
உன்னுதரத் தெழுத்தே ஒன்று பரிவாயிடினும்
ஆரியம் போல் உலக வழக்கு அழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறன் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே?

எனத் தமிழின் தனிச் சிறப்பை கவிப் பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரனார் எடுத்துக் காட்டுகின்றார்.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான் புகழ் கொண்ட தமிழ் நாடு"

என்று பாடினான் பாரதி அன்று. வள்ளுவனின் தனிச் சிறப்பை தமிழின் உயர் தனிச்சிறப்பை தமிழ் அறிந்த உலகினுக்கு எடுத்துக் காட்டினான்

"மாசில் வீணையும் மாலை மதியமும்.....
என்ற தேவாரம் தமிழின் தனித்தன்மையையும்

தண்டலை மயில்கள் ஆடத்
தாமரை விளக் கங் காண்க"

என்ற கவிச்சக்கரவர்த்தியின் இயற்கை வளத்தினையும் கவிரசம் ததும்பும் சென்றடையும் தமிழின் தனித் தன்மையை எடுத்துக் காட்டுகிறது.

தமிழ் உயர்தனிச் செம்மொழிகளும் ஒன்றாக நின்று தனித்தமிழ் வளத்தால், சொல் வளத்தால் செம் மொழியாக சீர்குன்றாக் கன்னித் தமிழாக வியந்து உயர்ந்து நிற்கின்றது அல்லவா? ஏனைய மொழிகள் உயிர்ப்பண்பை இழந்து நிற்க தமிழோ தமிழாகி, தமிழ் நெஞ்சமெல்லாம் தனித்துவத்தோடு விளங்குகின்றது.

பாரதிதாசனின் கவிதைப் புனலில் ஒரு முறை நீந்திப் பாருங்கள் அப்போது தெரியும் தமிழின் இனிமை, செழுமை, சிங்காரம் வட இந்திய மொழிகளை ஈன்றுவிட்ட சமஸ்கிருத மொழி இன்னும் அழகு மொழியாய் அற்புதக் கன்னி மொழியாய் கவிப்பேரரசுகளின் காவியத்தாயாய் விளங்கிக் கொண்டிருக்கிறது.

"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடினேன்"

என்றார் வள்ளலார். வள்ளலாரைத் தந்தது, வள்ளலாரின் அன்பு மொழியைத் தந்தது, தமிழ் ஆகும்.

"நெற்றிக் கண்ணைத் திறக்கிலும்
குற்றம் குற்றமே"

என்றான் தலைமைப் புலவன் நக்கீரன் பொருட் குற்றம் கண்டான் நக்கீரன் புதுமைப் புலவன் பொங்கி எழுந்தான் தமிழும் தமிழும் முட்டி மோதின தனித்தமிழின்சிறப்பு ஓங்கி நிற்கின்றது அங்கே "வட வேங்கடம் தெண்மரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்"

என்ற மனம் பாரனாரின் எல்லைக் கோட்டைத்தாண்டி இன்று தமிழ் ஓடுகளிலும் பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களிலும் ஆய்வுகளிலும், ஒப்பியல்

நோக்கிலும் சிந்தைகொண்டுசிறப்புற்று வாழ்வதை வரலாறுகளும், வாழ்ந்து கொண்டிருக்கும் அகப்புறச் சான்றுகளும் நயப்பார்க்கும், பயப்பார்க்கும் நல்விருந்தாகி நிற்கின்றது.

பொதிகையில் பிறந்து சங்கத் தொட்டிகளில் கிடந்து, தாய் மடியில் தவழ்ந்து புலவர் நாவிலும் அறிஞர் நாவிலும் பூத்துக் குலுங்கும் புதுமைப் பெண்ணாக தமிழ் விளங்குகின்றது மட்டுமன்றி, பாரதி, பாரதிதாசன், கம்பதாசன், கவிஞர் மேத்தா, கவிஞர் ரகுமான் போன்ற கவிஞர்களின் கவிதைகளில் தவழ்ந்து, மறைமலையடிகள் சேதுப்பிள்ளை நாவலர் பேராசிரியர் சுந்தரனார் வேதநாயகம்பிள்ளை போன்ற உரை நாவிலும் உயிர்த்துடிப்போடும் உள்ளக் களிப்போடும் களி நடனம் புரிகின்றது எம் தமிழ்.

ஆகவே தமிழ் உயிர்ப்பாகங்களை, உயிர்த்துடிப்பான ஒப்பியல் நோக்கான, சீரிளமை குன்றாத செந்தமிழ்ப்புலவர்களின் தெய்வத்தாயாக ஏனைய செம்மொழிகளோடு சரிசமனாக உயர் தனிச் செம்மொழியாக நிற்கவல்ல மொழியாகவும் மூத்த மொழியாகவும் நிற்க, வல்லதென்றால் அதன் தனிச்சிறப்பே காரணம் ஆகும்.

**V. சுவர்ணா**
**(2ம் வருடம், ஆரம்பக்கல்வி)**

## எனது கிராமம்

மலையகத் தாயின் மடியிலொளிரும்
மாநகர் கண்டிக்கு அண்மையில்
போற்றும் எங்கள் மடவனை
பொலிவுடன் திகழும் கிராமமே

இயற்கை அன்னையின் கோலங்களும்
எழிலிசை பாடும் குன்றுகளும்
நயக்கும் விபத்தில் அமைந்தவற்றின்
நடுவே ஒளிர்வதே மடவனை!

சுற்றிவர சிங்களக் கிராமங்கள்
செறிந்தே இருந்த போதிலும்
தோழமை பூண்டே ஒன்றாகத்
துலங்கும் கிராமம் மடவனை!

நாட்டின் நலனுக்காய் என்றும்
நல்லதைச் செய்து மகிழ்வதிலே
நாட்டம் கொண்டே இயங்குகின்ற
நலமுறு கிராமம் மடவனை.

**தர்ஷினி – காராளசிங்கம்**
**(ஆரம்பக்கல்வி)**

## பிரதான வைத்தியசாலைகளும் ஆராய்ச்சி நிலையங்களும்

1. புற்று நோய் வைத்திசாலை - மகரகம
2. தொழுநோய் வைத்தியாசாலை - மாந்தீவு
3. காசநோய் ஆஸ்பத்திரி - காங்கேசன்துறை, வெலிசறை
4. ஆயுள்வேத ஆராய்ச்சி நிலையம் - நாவன்ன
5. மேல் நாட்டு வைத்திய ஆராய்ச்சி நிலையம் - கொழும்பு

# ஞானவொளி பகர்வன நூல்களே!

"கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" என பைந்தமிழ் மூதாட்டியான ஔவைப்பிராட்டி அழகு தமிழிலே அரிதாக உவந்தளித்திருக்கிறார். இத்தகைய சிறப்புடன் மிளிர்வதற்கு அடிஅத்திவாரமாக, அடிநாதமாக விளங்குபவை நூல்களே என்றால் அதையாராலும் மறைக்கவோ மறுக்கவோ முடியா. அத்துணை சிறப்புடையன, அறிவெனும் பெரு நிதியத்தை அள்ளி வழங்குகின்ற நூல்களாகும். பொய்யா மொழிப்புலவராகிய வள்ளுவர் தனது குறளிலே கூறுகின்றபோது.

"கண்ணுடையவர் என்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையோர் கல்லாதவர்"

என விஞ்சுதமிழிலே அருமருந்தெனும் அற்புதக் கருக்களால் நர்த்தனமாடிப் பாடியுள்ளார். அதாவது ஊனக்கண்ணினும் ஞானக்கண்ணோ சிறந்தது என்பதனை இது தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. அப்பாற்பட்ட எதனையும் காணல்அரிது. ஆயின் அறிவுக் கண்ணோ எதனாலும் தடைப்படாது, கண்காணாத் தேசங்களிலே நிகழ்வனவற்றையும் எதிர்காலத்திலே நிகழுவனவற்றையும் காணும் ஆற்றல் பெற்றது. அதனாலேயே கல்விகற்று அறிவுபடடைத்தோர் கண்ணுடையவர் எனச் சிறப்பிக்கப்படுகின்றனர். கல்லாதவர்கள் அறிவிலாராய் ஊனக் கண்ணினாலும் பார்க்க முடியாதவர்களாய் முகத்திரண்டு புண்ணுடையவர் என இழிக்கப்படுகின்றனர்.

இத்தகைய மேன்மை பொருந்திய கல்வியைப் பெற்று பயன் கொள்வதற்கு இன்றுள்ள நவீன உலகிலே ஏராளம் சாதனங்கள் பரிணமித்துள்ளன. அவற்றுள் நூல்கள் மிகமிக இன்றியமையாதன. கல்வி எனும் தீபம் உலகிலே ஏற்றப்பட்ட காலம் தொட்டு இன்றுவரை அதனை அணையவிடாது ஒளிபெறச் செய்த பெருமை, நூல்களுக்கே உண்டு. கல்வியைப் பரப்புவதற்கமைந்த கருவிகள் அனைத்திற்கும் தாயாக விளங்குவது நூலேயாகும். இத்தகைய நூல்களானவை படித்தவர் முதல் பாமரர் வரை பயன் கொள்ளத்தக்க வகையிலே உள்ளன. கல்வித்துறைகள் அனைத்தையும் திறம்பட அறிவிக்கவல்லன. எனவே அழியாப் பெருஞ்செல்வமாகிய கல்விச் செல்வத்தை, இல்லையென்னாது அள்ளி வழங்கும் வல்லமை நூல்களுக்கன்றி பிறிதொன்றிற்கும் இல்லை. நூல்களால் மக்கள் காலம் காலமாக அளப்பரிய நற்பயன்கள் பெற்று இருந்தமை கண்கூடாக நாம் காணமுடிகின்றது. மனிதன் முழுமையான வாழ்வு வாழ்வதற்கு அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய புருடார்த்தங்கள் நல்வழிப்படுகின்றன. நாற்ப்பொருட்களில் ஒவ்வொன்றையும் மனம் கொள்ளத்தக்க வகையிலே விரிவாக பலபல முறைகளினால் நூல்கள் அறிவுறுத்துகின்றன. "அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே" என்ற சூத்திரம் நூல்களின் பயன்களை கூறுவதிலிருந்து இவ்வுண்மை தெட்டத் தெளிவாகின்றது. ஆகவே இகவாழ்விற்கும் பரவாழ்விற்கும் துணைபுரியும் வகையிலே பூரணவாழ்விற்கு வழிகாட்டியாய் அமைவதே நூல்களின் பெரும் பணியாகும்.

நல்ல நண்பர்களிலும் பார்க்க ஒருவனுக்கு உறுதுணையாக நூல்கள் விளங்குகின்றன. ஒருவன் முறைதவறி தீயவழியிலே நகருகின்ற போது அதனைப்பிழையென எடுத்துக் காட்ட நல்ல நண்பர்கள் வாய்க்கப் பெறுதல் அரிது. பல நற்பண்புகள் உடையோராய் அமைதல் அதனிலும் அரிது. அத்தகைய நண்பர்களின் உதவிகள் அனைத்தினையும் நல்ல நூல்கள் செய்கின்றன. இவை பண்பாடுள்ள சான்றோர்களால் ஆக்கப்பட்டமையால் மிகைபடக் கூறல் குன்றக் கூறல் முதலிய குற்றங்கள் இன்றி சுருங்கக் கூறல் விளங்க வைத்தல் முதலிய பத்தழகும் பெற்று பொலிவன. பற்பல நேரங்களிலே பலபல இடங்களிலே எழுந்த நூல்களாயினும் அவை ஒருவன் விரும்பியபோது அவனிடம் பழகும் இயல்புடையன. இதற்கு எடுத்துக் காட்டாக பின்வரும் குறட்பாக்கள் சுட்டிக் காட்டுவது விருப்பத்தக்கது.

"நவில் தொறும் நூனயம் போலும் பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்பு"

என்ற வள்ளுவர் வாய்மொழியை ஊன்றியுணரும் போது இவ்வுண்மை புலனாகும்.

ஓய்வு நேரத்தை இன்பமாகவும் பயன்படத்தக்க வகையில் நுகர்வதற்கும் தீயவழிகளினால் பெறப்படுகின்ற பண்பையும் பணத்தையும் எரித்து விடுவதற்காகவே நூல்கள் திக்கற்றனவாய்ச் சுகஞ்செய்கின்றன. நாளடைவில் வாழ்வில் அத்தியாவசியமாக வாசித்தல் பழக்கம் செறிய கற்கும் மனநிலையும் ஆர்வமும் பொங்குகின்றன. அறிவு பயத்தற்கேற்ற நூல்களையும் படிக்கும் பண்பு பதிந்து வாழ்வினைச் செம்மைப்படுத்துகின்றது.

மனித வாழ்வுக்கு மிக இன்றியமையாத கல்வியென்னுஞ் செழுஞ்சுடரை உலகின் மூலை முடுக்கெல்லாம் பரவச் செய்யும் ஒப்பற்ற கருவிகளாக நூல்கள் போற்றப்படுகின்றன. அவை மனிதன் பூரண வாழ்வு வாழ்வதற்கு பொக்கிசங்களாகவும் வழிகாட்டியாகவும் துணைபுரிகின்றன. அறிவெனும் பெரு நிதியத்தை விரும்பியவர்கள் விரும்பிய வேளையில் விரும்பிய அளவில் அனுபவித்து நுகர்ந்து இன்புறுதற்கமைந்த களஞ்சியங்களாய் அவை விளங்குகின்றன. நல்ல நண்பர்களிலும் பார்க்க பேருதவி புரிகின்றன. ஒரு கணப் பொழுதாகிய அவப் பொழுதையுந் தவப்பொழுதாய் பருகுவதற்கேற்ற அருமருந்தான கருவிகளாய் நூல்கள் மிளிர்கின்றன. இன்றுள்ள நிலையில் நூல்கள் ஆருயிர் போன்று மிக அருமையாகப் போற்றிப் பயன்படத்தக்க ஞானவொளியினை தருகின்றன. உலகிலே பலபாகங்களிலும் நிகரற்றதாய் செயற்பட வைக்கும் போதைப் பொருள்களான நூல்கள் அவைதனில் சிறந்தது என. அறிஞர், கவிஞர் சகலரினதும் உள்ளக் கோயில்களிலே குடிகொண்டிருக்கும் இறைவனாகவும் விளங்குவது மட்டுமல்லாது தமக்கென தனியான இடத்தினைப் பெற்றிருக்கும் பெருமையும் நூல்களுக்கே உரியதாகும்.

**செல்வி வாசுகி தில்லைநாதன்**
**(2ம் வருடம், ஆரம்பக்கல்வி)**

# உன்னையறிந்தால்..... சிறுகதை

சுவரில் தொங்கவிடப்பட்டிருந்த சுவர்க்கடிகாரம் "டாண் டாண்" என எட்டு முறை அடித்து ஓய்ந்தது. "தரன் டிஸைனிங் சென்ரர்" என பெயர் பொறிக்கப்பட்டிருந்த அந்த நிறுவனத்தின் ஊழியர்கள் தேனீக்கள் போல சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர். ஏதோ விழாக்கோலம் பூண்டது போல் அலுவலகம் காணப்பட்டது. நிறுவன ஊழியர்கள் தமது வரவுகளைப் பதிந்துவிட்டு தத்தமது வேலைகளில் முனைப்பாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். பல்வேறு தேவைக்காக டிஸைன்களையும் ஓவியங்களையும் முன்கூட்டியே பதிவு செய்ய வந்தவர்கள் ஒரு புறம், முன் கூட்டியே கொடுத்தவர்கள் அதனைப் பெறுவதற்கு ஒரு புறம், என பல்வேறு தேவைகளுக்காக அலுவலகம் இயங்கிக் கொண்டிருந்ததை தனது நிர்வாக அறையினுள்ளிருந்தபடி பெருமையுடன் அவதானித்துக் கொண்டிருந்தான் கலாதரன். அவ்வாறு அவதானித்துக் கொண்டிருந்தவனின் உள்ளம் கடந்த காலத்தை அசைபோடலானது.

செந்தில்நாதன், தேவி தம்பதியரின் ஏக புதல்வன் கலாதரன், திருமணமாகி பல வருடங்களின் பின் எத்தனையோ எதிர்ப்புகள் மத்தியில் தவமிருந்து பெற்றெடுத்த தவப்புதல்வன். இரு கைகளிலும் விரல்கள் அற்ற நிலையில் புவியில் உதித்தான். இதைக் கண்ட பெற்றோர் மனங் கலங்கினர். செய்வதறியாது திகைத்து நின்றனர். இருப்பினும் மனதைத் தேற்றிக் கொண்டு குழந்தையை கண்ணுங் கருத்துமாக வளர்த்த போதும் அவனது எதிர்காலத்தைப் பற்றியே சதா சிந்தித்த வண்ணம் இருந்தனர். பிள்ளையின் ஒவ்வொரு சிறு செயற்பாட்டையும் ஆர்வத்துடன் இரசித்தனர். காலச் சக்கரம் சுழன்று கொண்டிருந்தது. தரன் பாடசாலை செல்லும் வயதை அடைந்தான். செந்தில்நாதன் தம்பதியர் தமக்கு பிறக்கப்போகும் குழந்தையை வைத்தியர், பொறியியலாளர், ஆசிரியர் எனப் பல வழிகளில் கற்பனை செய்து வைத்திருந்த போதும் தற்போது அவனின் நிலையை எண்ணிக் கலங்கினர். இரு கைகளும் இயலாத நிலையில் அவனது ஒவ்வொரு சிறுவிடயத்தையும் பார்த்துப் பார்த்து தாம் செய்து கொண்டிருக்கும் போது அவனை எவ்வாறு பாடசாலைக்கு அனுப்புவது? அனுப்பினாலும் அவன் எவ்வாறு தனது கல்வியைத் தொடருவான், சக மாணவர்கள் அவனை எவ்வாறு நடத்துவார்கள்?, ஆசிரியர்கள் பார்த்து இரங்குவார்களா? என பல வினாக்கள் அவர்களது சிந்தையில் உதித்தன. சிந்தித்தவர்கள் எடுத்த முடிவு மகனை பாடசாலைக்கு அனுப்புவதில்லை என்பதாகும். இவ்வாறு அவர்களது சிந்தனையைச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தினர் இருவரும். ஆரம்பத்தில் அவர்களது செயற்பாடு தரனுக்கு ஆர்வத்தை அளித்தாலும் வயது பத்து, பதினொன்று எனக் கூடும் போது அவனுக்கு தன் மீதே ஒரு வெறுப்பு, கோபம். மற்றவர்களைப் போல தானும் இயல்பான ஒருவனாக மாறவேண்டும் என நினைக்கும் போதெல்லாம் தனது இயலாமையை எண்ணி வருந்தினான்.

பெரும்பாலும் தனிமையை நாடியவன் தன் எண்ணக் கருக்களை வாயில் பென்சிலை வைத்து கோடுகளாக கிறுக்கினான். நாளடைவில் இதுவே அவனுக்கு வழக்கமாயிற்று. இதை அவதானித்த பெற்றோர் மனம் வெதும்பினர். அவர்களது கவலைக்கு மருந்தாகவும் தரனுக்கு ஒளியாகவும் வந்து சேர்ந்தார். செந்தில் நாதனின் நண்பர் மனோகரன் பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் கிட்டத்தட்ட அவரது வயது நாற்பத்தைந்தை எட்டியிருக்கும். மிகவும் அன்பானவர். ஒருநாள் நண்பரைச் சந்திக்க வந்தவர் எதேச்சையாக தரனின் செயற்பாடுகளை அவதானிக்கலானார். அவனுடன் சிறிது நேரம் உரையாடியவர் அவனது மன நிலையைப் புரிந்து கொண்டவராக தனது நண்பரிடம் அவனை தான் கல்வி கற்பிக்கும் பாடசாலையில் சேர்த்து விடுமாறு கூறினார். முதலில் செந்தில்நாதன் மறுத்து தனது வினாக்களை எழுப்பினார். சிரித்த மனோகரன் தனது நண்பரின் சந்தேகங்களைத் தீர்த்து வைத்தார்.

அங்கு தரனைச் சேர்ப்பித்தனர். அங்கு தரனைப் போன்ற மாணவர்களின் திறமையை அறிந்து அதற்கேற்ற வழியில் அவர்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் இருந்தனர். தரன் அங்கிருந்த மாணவர்களுடன் சகஜமாக பழகினான். அவனுடைய கனவுகள் அங்கே நனவாகிக் கொண்டிருந்தன. அதற்கு மனோகரன் பெரிதும் உதவி செய்தார்.

அவனுடன் ஒவ்வொரு நாளும் சிலமணி நேரமாவது பேசுவார். அவனுக்கு அவனைப் பற்றியே உணரவைக்க முயன்றார். அவனது வரையும் ஆற்றலை அதிகரிக்க பல்வேறு வழிகளை நாடினார். அவர் அவனைச் சந்திக்கும் போதெல்லாம் கூறும் ஒரே வாக்கியம் "உன்னையறிந்தால் நீ உன்னையறிந்தால் உலகத்தில் போராடலாம். உயர்ந்தாலும், தாழ்ந்தாலும் தலை வணங்காமல் நீ வாழலாம்", திரும்பத்திரும்ப கேட்டுக் கேட்டு தரனுக்கு இதுவே வேதவாக்காக அமைந்தது. நாளாக நாளாக அவனது உள்ளம் தாக்கப்படும் போது, அவன் சோர்வுற்று காணப்படும் போது மனோகரன் அவனுக்கு பக்கபலமாக இருந்தார். அவனை அதிலிருந்து மீட்டு அவனது செயற்பாடுகளுக்கு வழி சமைத்துக் கொடுத்தார்.

செந்தில்நாதன் தம்பதியருக்கு காலம் உருண்டோடியது தெரியவில்லை. தரன் பாடசாலையை முடித்து வெளியேறும் காலம் விரைவில் வரும் என்பதை நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. பாடசாலையிலிருந்து வெளியேறியதும் அவன் என்ன செய்ய வேண்டும் என்பதையும் மனோகரன் அறிவுறுத்தினார். பாடசாலைக் காலங்களில் அவன் வரைந்த ஓவியங்களை ஒன்றன் பின் ஒன்றாக பத்திரிகைகளுக்கு அனுப்பினார் மனோகரன். அவனுடைய ஓவியங்களை அவனது அனுமதியுடன் பல்வேறு தேவைகளுக்கு ஊடகங்கள் பயன்படுத்தின. அவனது ஓவியங்களால் கவரப்பட்டவர்கள் நாளடைவில் அவனது ஓவியங்களைப் பெறுவதற்கு நாடிவரத் தொடங்கினர். இவ்வாறு வளர்ந்தவன் இன்று ஒரு நிறுவனத்திற்கே சொந்தக் காரனாகி விட்டான். இவ்வளவு சிறுவயதில் இத்தனை

பேரை வைத்து நிர்வாகம் செய்யுமளவிற்கு தமது மகன் வளர்ந்ததைக் கண்டு பெருமிதத்தில் பெற்றோர் வாயடைத்து நின்றனர்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்

சான்றோன் எனக் கேட்ட தாய்" என்பதை தேவி அனுபவத்தில் உணர்ந்தாள். இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருந்தவனின் உள்ளம் கனத்தது. படத்தை உற்று நோக்கினான். தான் அங்கு நான்கு சட்டங்களின் நடுவே புன்னகை பூத்துக் கொண்டிருந்தார் மனோகரன். அவரது திருவுருப் படத்தின் கீழ் தோற்றம், மறைவு என்பதுடன் "உன்னையறிந்தால் நீ உன்னையறிந்தால் உலகத்தில் போராடலாம் உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் தலை வணங்காமல் நீ வாழலாம்" எனும் வாசகமும் பொறிக்கப்பட்டிருந்தது. கன்னங்களினூடே வழிந்த கண்ணீரை விரல்களற்ற கைகளால் துடைத்து விட்ட படி மீண்டும் ஒருமுறை அந்த வாசகங்களை உள்வாங்கிக் கொண்டு மானசீகமாக நன்றி கூறினான் கலாதரன்.

செல்வி. ரத்னா அருந்தவராஜா
(விஞ்ஞானம் 1ம் வருடம்)

# உன் வாழ்வில் கல்வி

உலகின் பிறப்பு,
உயிர்வாய் வாழ
உலாவித் திரியும் உன்னத வாழ்வு - கல்வி!
கல்வியாளன் ஆழி முதல் அணுகுண்டுவரை,
கருமுதல் கல்லறைவரை - ஏன்
கணனிமுதல் காவியம் வரை
அணு அசைந்தாலும் ஆயிரம் விளக்கம் கூறுகிறான்.
அவன் கல்வியை வளர்க்க வென்று மலர்ந்தான்!
ஆனால் நீ
அறிவுக் காற்றை அறுத்துவிட்டு
அநாகரிக வாழ்வுக்காய் - உன்
அறிவை அடியோடு அழிக்கின்றாய்.
இனியாவது உன் வாழ்வு - இனிக்க.
கல்விக்கு அடிபணிந்து - ஆசானின்
அறிவுரைகேட்டு மெழுகாக - உனை
உருக்கி மென்மையான கல்வியினை - மேன்மையுடன்
கண்ணியமாய் இவ்வுலகில் கற்றவனாய் வாழ்ந்துவிட்டால்
உன்பிறப்பு உன்னதமானது.

இ. அருள்வதனா
(2ம் வருடம், நடனத்துறை)

# ஆசிரியர் - மாணவர் உறவுக்கு பண்பும், பாசமும் கலந்த சமயக்கல்வி

உலகத்தின் சிந்தனைகளும் போக்குகளும் மாற்றமடைந்து கொண்டே செல்கின்றன. பலர் இன்று உலகத்திற்கு நன்மை செய்வதாகக் கூறிக் கொண்டு தங்களை அறியாமலே நன்மை அல்லாதவற்றை செய்கிறார்கள். தாம் கடைப்பிடிக்க முடியாதவற்றை மற்றவர்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்று எண்ணுகின்றார்கள். அவர் செய்கின்றார். இவர் செய்கின்றார் நானும் செய்தால் என்ன என்கின்ற நிலை இன்று அனேகமானவர்களிடம் காணப்படுகின்றது. சரியானவற்றை புரிந்து செயற்படும் நிலை குறைந்து கொண்டே செல்கின்றன. சமுதாயத்திற்கு முரண்பட்ட பண்பாடுகள் இவையெல்லாம் எதனை எடுத்துக் காட்டுகின்றன என்றால் களஞ்சியப் படுத்தியுள்ள உள்ளீட்டின் தரத்தையே ஆகும். இதனை வேதநூலானது "குயவனின் கலன்களை சரனை சோதிக்கின்றது. உரையாடல் மனிதனை சோதிக்கின்றது. கனி மரத்தின் கண்காணிப்பை காட்டுகின்றது. சொல் மனிதனின் உளப் பண்பாட்டை காட்டுகின்றது" என கூறுகின்றது.

குரு சீடர் பக்தியும் இன்றும் குரூரப்பட்டுக் காணப்படுகின்றது. இதற்கு காரணம் கல்வியை புகட்டி நிலையான பண்பாடும் அன்புறவும் நல்லுறவுமற்ற அறிவுப் படைப்புக்கள் பெருகக் காரணமாகி விடுகின்றன. இதனால் கல்வியின் சமநிலை பேணப்படாமையும் மனித வளர்ச்சியில் முழுமைத்துவம் அடையாமையும் காணப்படுகிறது. இந்நிலை தொடருமானால் நம்மை நாமே பாழ்படுத்திக் கொள்கின்றவர்களாக மாறி விடுவோம். இதற்கு ஓர் எடுத்துக் காட்டாக "குருடன் குருடனுக்கு வழிகாட்ட முடியுமா? இருவரும் குழியில் விழமாட்டார்களா? சீடர் குருவை விட மேலானவர் அல்ல. ஆனால் தேர்ச்சி பெற்ற எவரும் தன் குருவைப் போல இருப்பார்" என தத்துவ நூல்களில் குறிப்பிடப்படுகின்றது. எனவே கல்வியினால் மனிதப் பண்பாட்டினை வளர்க்க வேண்டும் மனிதரை மனிதத்தன்மைகளுடான மனிதர்களாக்குவது கல்வி. நாமெல்லாம் எம்முடைய குறைகளைக் களைந்து மற்றவர்களுடைய பிழைகளைச் சுட்டிக் காட்டிக் கொள்கின்றோம்.

நிலத்தின் தன்மையைக் கால் காட்டுவது போல மரத்தின் தன்மையாக கனி காட்டும் இது இயற்கையின் நியதி நாம் பழைய துணியில் உள்ள ஓட்டைகளை புதிய துணியால் ஒட்டுப் போடுகின்றோம். எனவே புதியன படைப்பதாக எண்ணிக் கொண்டு பொருத்தமற்றவற்றை வலிந்து திணிக்கின்றோம்.

"ஒரு தலைவனின் முதற்பணி பிறரிடம் நம்பிக்கை நிலைபெறச் செய்வதே" என்று ஜோன் கார்ட்னா என்ற அறிஞர் கூறுகின்றார். சமுதாயத்திற்கு

வழிகாட்டுகின்ற ஒவ்வொருவரும் தலைவர்களே முக்கியமாக ஆன்மீக வழிகாட்டிகளும் அறிவு வழிகாட்டிகளும் சமுதாயத்தின் ஏணிப்படிகளாக காணப்படுகின்றார்கள். இவர்களினாலேயே சமுதாயத்திற்கு மதிப்பும் மரியாதையும் கிடைக்கின்றது.

நீதி என்பது தாமரை இலைத் தண்ணீர் போன்றது. பேசுவதற்கு ஒரு நீதி செயற்பாட்டிற்கு ஒரு நீதி என்ற நிலை காணப்படுகின்றது. காலத்தின் நடைமுறைகள் அதற்கு கட்டியம் கூறிக் கொண்டிருப்பது கண்கூடாகும்.

இதற்கு சில சான்றுகளை எமது முன்னோர்கள் கூறியுள்ளார்கள். அந்த வகையில் "நல்லவர் தம் உள்ளமாகிய கருவூலத்தில் நின்று நல்லதையே எடுத்துக் கொடுப்பர். தீயவர் தீயதில் நின்று தீயதையே எடுத்து கொடுப்பர்" எனக் கூறப்படுகிறது. எனவே நாம் நல்லவரா தீயவரா என்பது நாளடைவில் தெரிந்து விடும். பிறரன்பில் நிலைப்பவன் பாவத்தினின்று தொலைவில் நிற்கின்றான். எனவே, நமது முன்னோரிடமும் இருந்து பெற்றுக் கொண்ட புண்ணியங்களை இளையோருக்கு பகிர்ந்திடுவோம் பண்பும், பாசமும், நேசமும் நிலைத்த நல்ல நாற்று மேடைகளில் சமுதாய மலர்களை வளர்த்தெடுக்க பாடுபடுவோம்.

R. தயாளினி
(2ம் வருடம் ஆரம்பக்கல்வி)

# மௌனம்

*சிரிக்கும் விலங்கென்றும் சிந்திக்கும் பதரென்றும்*
*சீ..... சீ..... பேசும் கொடுங்கோலரை*
*மனிதரென்று படைத்துவிட்டான்!*
*குத்திக் குதறுவது கூராயுதம் என்றால்*
*கூடாத பொய்யும் அது ஒன்று தான்*


*கொல்லுவதெல்லாம் கொடும் ஆயுதம் என்றால்*
*சுள்ளென்ற வார்த்தைகளை என்ன சொல்ல?*
*முகத்துக்கு நேரே முகமன்*
*முதுகுக்கு பின்னே முறுகல்!*

*மற்றவரை நோகடிக்காது*
*மனதிற்கு மட்டும் புரியக்கூடிய*
*மாசற்ற பேசா மொழி.....*


*இந்த மௌனம்*
*பேசிவிடும் ஆயிரம் வார்த்தைகளை.....*

செல்வி. க. ஜெயதர்ஷினி
(ஆங்கிலம் 1ம் வருடம்)

# OUR NEW BUILDINGS - 2005



# OUR NEW BUILDINGS - 2005



# கணிதம் ஒரு தொடர்பூடக மொழி

மொழி என்பது ஒருவரோடு ஒருவர் தமது எண்ணங்களையும் கருத்துக்களையும் பரிமாற்றிக் கொள்ளும் ஒரு ஊடகம் ஆகும். அந்தவகையில் கணிதபாடம் ஒரு தொடர்பூடகமாக விளங்குகின்றது. இக்கணித அறிவானது ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியமானதொன்றாகும். கணித அறிவு இல்லையெனில் அவனால் எந்தவிதமான செயற்பாடுகளையும் அல்லது அறிவினையும் பெற்றுக் கொள்ள முடியாது.

ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கு கணிதம் முக்கியமாகக் காணப்படுகின்றது. அதாவது ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையில் பணத்துடனும் கணக்கு வைத்திருப்பதற்கும் பழகிக் கொள்கிறார்கள். அதாவது ஒரு மாணவன் கடைக்குச் சென்று பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் அதற்கேற்ப பெறுமதியை கணித்து பணத்தினைக் கொடுப்பதற்கும் கணிதமே ஊடகமாகச் செயற்படுகின்றது. மேலும் வங்கிப்பழக்க வழக்கங்கள். அன்றாட பணக் கொடுக்கல் வாங்கல்கள். ஏனைய வியாபார நிறுவனங்களுடான கொடுக்கல் வாங்கல் தொடர்பான நடவடிக்கைகள் என்பனவற்றை மேற்கொள்வதற்கு கணிதமே ஊடகமாக அதாவது ஒரு மொழியாகத் தொழிற்படுகின்றது.

மேலும் கணிதபாடமானது அனைத்துப் பாடவிடயங்களுடனும் தொடர்புபட்டு நிற்கின்றது. தமிழ், விஞ்ஞானம், பொருளியல், வர்த்தகம், சமூகக்கல்வி போன்ற அனைத்துப் பாடங்களுடனும் தொடர்பு பட்டு நிற்கின்றது. எடுத்துக் காட்டாக பொருளியல் பாடத்தை நோக்கும் போது, அங்கே நாட்டின் உற்பத்திப் பொருட்களின் அளவுகள், அவற்றின் மூலம் நாட்டிற்கு கிடைக்கும் மொத்த தேசிய வருமானம், தேய்மானங்கள், தலாதேசிய உற்பத்தி பொருளாதார வளர்ச்சி வீதம் போன்ற யாவும் கணித பாடத்தினை மையமாகக் கொண்டே காணப்படுகின்றது. இதனால் பெறப்படும் முடிவுகள் யாவும் நிச்சயத்தன்மை வாய்ந்தனவாகவும் இருக்கும். ஏனெனில், கணிதம் எப்போதும் உண்மையான விடயங்களை எடுத்துக் கூறுவதாகும். உதாரணமாக:- $8 + 5 = 13 > 13 - 8 = 5$ எனின் அது உண்மையான விடயமாகும். எட்டுடன் ஐந்தினைக் கூட்டினால் கிடைப்பது 13 என்பதில் ஐயமில்லை. அதுபோல் பதின்மூன்றிலிருந்து எட்டைக் கழித்தால் பெறப்படுவது ஐந்து என்ற நிச்சயத்தன்மையிலும் எதுவித மாற்றமும் இல்லை.

மொழியானது எவ்வாறு எமக்குப் பல கருத்துக்களை பல சந்தர்ப்பங்களில் தெளிவாகத் தருகின்றதோ, அதேபோல் கணிதபாடமும் பல வெளிப்படை உண்மைகளை எடுத்துக் கூறுகின்றது. உதாரணமாக முக்கோணி

ஒன்றின் அகக் கோணங்களின் கூட்டுத்தொகை 180° என்பதனைக் குறிப்பிடலாம். இவை தவிர இரண்டு நேர்கோடுகள் ஒன்றையொன்று வெட்டும் போது ஏற்படும் குத்தெதிர்க் கோணங்கள் பருமனிற் சமனாகும் என்பவற்றையும் குறிப்பிடலாம்.

மேலும் ஆரம்பக்கல்வி மாணவர்கட்கும் கணித அடிப்படை அறிவு மிகவும் முக்கியமான ஒன்றாகும். பொதுவான ஆரம்பக்கல்வி மாணவர்களுடன் உரையாடுவதற்கும் கணித அறிவு அவசியமானதொன்றாக காணப்படுகின்றது. அதாவது உங்கள் வகுப்பில் எத்தனைபேர் உள்ளனர்? உங்கள் வீட்டில் எத்தனை அங்கத்தவர்கள் உள்ளனர்? போன்ற விடயங்களிற்கு விடையளிக்கவும் கணிதபாடம் முக்கியமானதொன்றாகக் காணப்படுகின்றது.

மேலும், நடைமுறையில் தொடர்பு சாதனங்களின் கருத்துக்கள் வெளிப்படுத்தவும் கருத்துக்களை புரிந்து கொள்வதற்கும் கணிதம் என்ற மொழியை அறிந்திருத்தல் அவசியமானதொன்றாகும். அதாவது நாட்டின் சனத்தொகை வளர்ச்சி, - வீழ்ச்சி ஏனைய புள்ளி விபரங்கள் போன்றன யாவும் வரைபுகள், வீதங்கள் போன்றன கணித மொழியில் தொடர்பு சாதனங்களில் காட்டப்படுகின்றது. இவற்றினை விளங்கிக் கொள்ள கணித அறிவு அவசியமாம். எடுத்துக்காட்டாக கிரிக்கட் விளையாட்டில் இரு அணிகளின் துடுப்பாட்ட வேகத்தை அதாவது ஓட்டங்கள் ஒவ்வொருவரிலும் எடுக்கப்படுகின்ற அளவினை வீதமாகவும், இரு அணிகளுக்கிடையிலான ஓட்ட நிலையினை வரைபுகள் மூலமாகவும் கணிதபாடமானது ரசிகர்கட்கும் புலப்படுத்துகின்றது.

எனவே, இவ்வாறு பொதுவாக நோக்கும் போது ஆரம்பத்தில் இருந்து இற்றைவரை கணிதமானது ஒரு தொடர்பூடகமாக அதாவது மொழியாக வளர்ச்சியடைந்து உள்ளது.

T. யசோதா
(2ம் வருடம், ஆரம்பக்கல்வி)



# மாணவர்களிடத்தில் ஆக்கத் திறன்களை வளர்ப்பதில் ஆசிரியர்களின் பங்களிப்பு

## வகுப்பறைச் செயற்பாடுகள்

*மாணவர்களில் ஆக்கத்திறனை விருத்தி செய்யக் கூடிய வகுப்பறைச் செயற்பாடுகளை நாம் நோக்குவோம். வகுப்பறையைக்குள்ள வினாக்களைக் கேட்கத் தூண்டுவது அவசியம். இதன் மூலம் மாணவர்கள் ஆசிரியரிடமிருந்து தகவல்களைப் பெற்று தமது அறிவினை விருத்தி செய்ய முடியும். அது மட்டுமன்றி மாணவர்கள் புதிய கருத்துக்களை முன்வைக்கும் போது அவற்றைக் கலந்துரையாடி அதற்குப் பெறுமதியுண்டெனக் காட்டுதல் மூலம் மாணவர்களின் ஆக்கத்திறனை வளர்க்க முடியும். வழமையான பாட விடயங்களை விடப் பாடங்களுக்கு மேலதிகமான விடயங்களைக் கலந்துரையாடுதல் மூலமும் இதனை வளர்க்க முடியும். செயற்றிட்ட வேலைகள், சுயகற்றல் செயற்பாடுகள், வாசிக்க ஊக்கம் கொடுத்தல், சிந்தனா சக்திகளைத் தூண்டுதல் போன்றனவும் ஆக்கத்திறனை வளர்க்க உதவுகின்றது.*

*இதுமட்டுமன்றி வகுப்பறைக்குள்ளே மாணவர்களை ஒட்டுச் சித்திரத்தினை ஒட்டுதல் செயற்பாட்டில் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்துந் தேர்ச்சியும், ஆக்கத்திறனும் வளர்க்கப்படுகின்றது. இதே ஆக்கச் செய்தல் மூலமும் திறன்களை வளர்க்கலாம்.*

*வகுப்பிற்கு வெளியே சூழலிலுள்ள பொருட்களைக் கொண்டு ஆக்கத்தை ஆக்கச் செய்யமுடியும். அதே போன்று சூழலிலுள்வற்றைப் படம் வரைதல், கதை எழுதுதல், பாடல் எழுதுதல், அபிநயத்துக்குக் காட்டல் போன்ற பல்வேறு திறன்களை வளர்ப்பதற்கு ஆசிரியர் வழிகாட்ட வேண்டும்.*

*ஒவ்வொரு மாணவனிடத்தும் காணப்படும் திறன்களை இனங்கண்டு கொள்ளுதல் அவசியம். இவ்வாறு இனங்கண்டு கொண்டு மாணவர்களின் ஆக்கத்திறனை வளர்க்க முடியும். வகுப்பிலுள்ள மீத்திறன் மாணவருக்கு மேலதிக செயற்பாடுகளை வழங்கி, அவர்களால் வகுப்புக் குழம்பமால் வைத்திருக்க இவ் ஆக்கத்திறன் செயற்பாடுகள் உதவுகின்றன. இதற்கு மேலதிக வாசிப்பு நூல்களை வாசிக்கவிடல், கதை எழுத விடல், புதிருக்கு விடையளிக்க விடல், ஒட்டு வேலைகளை வழங்தல், படம் வரையவிடுதல் போன்ற ஆக்கச் செயற்பாடுகளை வழங்கி, அவர்களது ஆக்கத்திறன்களை வளர்க்க ஆசிரியரால் பங்காற்ற முடியும்.*

*ஆசிரியர் ஆக்கத்திறனை வளர்ப்பதிற் பல பங்குகளை ஆற்ற முடியும். பாடத்திட்டம் பூர்த்தியாகின்ற போது மாணவர்களைப் புதியதொன்றை உருவாக்கும் மனப்பாங்கை உருவாக்குதல், புதிய கண்டுபிடிப்புக்களின்*

அவசியம் ஏன் என்பதை ஆராய்ந்து அதற்காக ஆரம்பப் பருவத்திலிருந்தே தயாராகுதல், ஆகத்திறன்களை வளர்ப்பதற்கான வழிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், இலங்கைப் புத்தாக்குனர், ஆணைக்குழு, வளப்பகிர்வாளர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பவற்றின் மூலம் புத்தாக்கத்திற்கான வசதிகளை ஆசிரியர் மாணவருக்குப் பெற்றுக் கொடுத்தல், ஆசிரியர், மூத்தோர் போன்றவர்கள் மாணவருக்குத் தைரியமளித்தல், பிற்போக்கான சிந்தனைகளைத் தடுத்தல் போன்றவற்றிற் கவனஞ் செலுத்தி ஆக்கத்திறனை வளர்ப்பதில் ஆசிரியர் பங்காற்றமுடியும்.

இலங்கையில் மாணவர்கள் புதிய படைப்புக்களில் ஈடுபடுகையிற் பல இடர்ப்பாடுகளை எதிர்நோக்குகின்றனர். நெகிழ்ச்சியற்ற நேர அட்டவணை, தடையற்ற வகுப்பேற்றம், இரட்டிப்பு வகுப்பேற்றமின்மை, பரீட்சைப் பெறு பேற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தல், பொதுவான மைய பாட ஏற்பாடு, ஒருமைப்பாடு பற்றிய ஆசிரியர் மனப்பாங்கு, புத்தாக்கங்களை உருவாக்குவதன் பெறுமதியை உணராமை, ஆக்கங்களை உருவாக்குவதற்கான வசதிகள் போதாமை, மூத்தவர்களும் ஆசிரியர்களும் தைரியமூட்டாமை, புதிய ஆக்கங்களை உருவாக்க நேரத்தை ஒதுக்காமை, பொறுமையும், சுயநம்பிக்கையும் இன்மை, பயந்த சுபாவம், உடனடிப் பெறுபேறுகளை எதிர்பார்த்தல் போன்றன ஆக்கங்களை உருவாக்குவதற்குத் தடையாக உள்ள காரணிகள் எனலாம்.

மாணவர்களில் ஆக்கத்திறனை வளர்ப்பதற்குரிய அடிப்படை வழிமுறையாக விரி சிந்தனை முக்கிய இடம் பெறுகின்றது. ஆற்றல்களை விருத்தி செய்யும் கருத்துக்களை ஆக்குவதில் புதுமை புனைதல், தடையற்ற சிந்தனை, சிந்தனை நெகிழ்ச்சி என்பன நிலவுவது அவசியமாகின்றது.

"பாடசாலையில் ஆக்கத்திறனுடைய பிள்ளைகளை இனங்காணுத லென்பது அவசியம். எனவே ஆசிரியர் மாணவர்களை அவதானித்தல், நுண்ணறிவுச் சோதனைகள், பாடசாலை அடைவுச் சோதனை, பெற்றோரின் அவதானம், பாடப்புறச் செயல்களில் மாணவர்கள் பங்குபற்றுதல் என்பவை மூலம் இனங்காண முடியும். ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் நன்கு செயற்படுவர்களாகவும், தமது சுற்றாடலில் எப்பொழுதும் ஈடுபடுபவர்களாகவும், நல்ல ஞாபக சக்தியுடையவர்களாகவும், சொற்களஞ்சியத்தை விரைவாகப் பெற்றுக் கொள்பவர்களாகவும், கவிதைகளை ஞாபகத்தில் வைத்திருப்பவர் களாகவும், மற்றவர்களால் ஒரு தடவை வாசிக்கப்படும் தொடர்புடைய கதைகளையும், வாசகங்களையும் தெரிந்து கொள்பவர்களாகவும், பொருட்களை ஆராயவும், கையாளவும் விரும்புபவர்களாகவும், விடயங்களை விரைவில் விளங்கிக் கொள்பவர்களாகவும் இருப்பதன் மூலம் பிள்ளைகளை இனங்காணமுடியும்.

இவ்வாறாக மாணவர்களிடத்தில் ஆக்கத் திறன்களை வளர்ப்பதில் ஆசிரியர்களின் பங்களிப்பு ஆக்கத் திறனின் இன்றைய நிலை, ஆக்கத்திறன் செயற்பாடுகளை வளர்க்க மேற்கொள்ளக் கூடிய வழிகாட்டற் செயற்பாடுகள்,

*ஆக்கத்திறனை வளர்ப்பதன் அவசியம், இன்றைய வகுப்பறைச் செயற்பாட்டில் ஆக்கத்திறன், பாடசாலையில் ஆக்கத்திறனை வளர்ப்பதில் ஆசிரியர் பங்களிப்புப் பற்றி இங்கு அறியலாம் ஆகவே நல்ல மொழித்திறன், ஆக்கத்திறனுடைய பிள்ளைகளை உருவாக்குவது இன்றைய கால கட்டத்தின் கட்டாய தேவை.*

**உசாத்துணை – உளவியல் – GTZ வெளியீடுபாகம் 2**
**விளக்கு – புத்தகங்கள்**

**தி. வாசுகி**
**(2ம் வருடம், ஆரம்பக்கல்வி)**

# கண்ணீர்

பூவுக்குப் பெருமை தேன் என்பர்
வானத்தின் பெருந் தன்மை மழை என்பர்
யாருக்குத் தெரியும் அதன் தார்ப்பரியங்கள்
கல்லுக்கும் உண்டு கண்ணீர் கசியாத ஈரமாக

சொல்லொணாத் துயரங்களின் சொட்டுநீர்
வராத வார்த்தைகளின் வழியும் துளி
கண்ணெனும் காவலனின் தண்ணீர்த் தோழன்
இதயப் பாரத்தை இறக்கி வைக்கும் ஈரப்புனல்

இது நல்லதல்ல என யார் சொல்வார்
மனதைக் கழுவிக் கொள்ள மார்க்கமாகிறது
மரித்தபின் அளிக்கப்படும் மனிதரின் காணிக்கை

தென்னை தேக்கி வைக்கிறது
மேகம் தெளித்தே விடுகிறது
கன்னத்து வழியோடும் இந்தக் காட்டாற்றுக்கு
காரணம் கற்பிக்க யார் உள்ளார்

போதும் பொல்லாத கண்ணீர்
இல்லாத சொல்லின் மொழி!
இது முடிவற்ற முதலாக முடியும்
முக்கியமான சந்தர்ப்பங்களில் மட்டும்

**V. சுபாஷினி**

# அறிவியலும் அழகியலும் வாழ்வின் இருகண்கள்

தொடக்கமும் முடிவும் இல்லாது அநாதியாய் அகன்று விரிந்திருக்கின்ற பிரபஞ்சம் - அதில் தன்னுணர்வில்லாத சிற்றுயிர்கள் முதல் தன்னை உணரத் துடிக்கின்ற மனிதன் வரையாகக் கணக்கில்லாத உயிர்கள் கணந்தோறும் உயிர்க்கின்றது. இத்தகைய மனிதனிடத்துள்ள மாபெரும் சக்தியாகச் சிந்தனை ஆற்றல் என்பது விளங்குகின்றது. அதனால் அவன் விலங்கு நிலையினின்றும் உயர்ந்து நாகரிகமடைந்தான். அன்றுள்ள மனிதனுக்கும், இன்றுள்ள மனிதனுக்குமிடையே மாற்றங்கள் பல நிகழ்ந்துள்ளன. பன்னூற்றாண்டு காலமாக நிகழ்ந்து வந்த இம் மாற்றங்களே மனிதன் வளர்ச்சியடைந்துள்ளான் என்ற உண்மையைச் சுட்டி நிற்கின்றது. சிந்தனையாற்றல் இல்லையாயின் மனிதன் இன்னும் காடுகளிலும், குகைகளிலும் வாழ்ந்திருப்பான். அவனுக்கு அகிலமெல்லாம் கட்டியாளவும் இயற்கையை வெல்லவும், அண்டவெளிக்குச் செல்வதற்கும் எண்ணம் தோன்றியிராது

அன்று குகைகளைத் தனது உறையுளாகச் கொண்ட அவன் சிந்தனைத் திறனால் வீடு கட்டி வாழத் தொடங்கினான். அம் முயற்சியின் விரிவுபட்ட தன்மை கணிதமாகி முளைவிடத் தொடங்கியது. பச்சையிறைச்சி உண்டு வாழ்ந்த அவன் நெருப்பைக் கண்டறிந்து உணவைப் பக்குவப்படுத்தத் தொடங்கினான். அம் முயற்சியில் விஞ்ஞானம் வேர்விடத் தொடங்கியது. இவை இரண்டும் காலகதியிலே பலகிளைவிட்டு வளர்ந்தன. இவையிரண்டும் இன்று அறிவியலெனும் பெருந்தருவாய் வளர்ந்து காட்சியளிக்கின்றன. உணவுண்டு பசிக்கொடுமைமாய்ந்த பின்னர் ஆதி மனிதன் கூட்டம் கூட்டமாய்ச் சேர்ந்து ஆடியும் பாடியும் களித்தான். அவர்கள் பாடலிலே இசை, இலக்கியம் அரும்பத் தொடங்கின. அவர்களது ஆடலிலே நாட்டியமரபு தொடங்கியது. காலப் போக்கிலே சிந்தனையாற்றலின் தொழிற்பாட்டால் இவ்வழகியற் கலைகள் ஒன்று பரவலாய்க் கிளைத்து வளர்ந்தன. வள்ளுவப் பெருந்தகையின்

> *"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்*
> *கண்ணென்ப வாழுமுயிர்க்கு"*

என்ற கூற்றினைக் கூர்ந்து நோக்கும் போது எழுத்தை அழகியலெனவும் கருதுவது சாலவும் பொருத்தமுடையதே அதனால் அவை கண் எனச் சிறப்பிக்கப்படுகின்றன. கண் போன்ற அறிவியலும் அழகியலுமே உலக அறிவுத் திரனினை அறிதற்கேற்ற சிறந்த கருவிகள் என்பதை உணரலாம். இவையிரண்டினதும் மொத்த விளைவே கல்வி என்னும் பெருநிதியம். கல்வி, மனிதன் பூரண வளர்ச்சியடைந்ததற்குப் பெருந்துறையாக விளங்குவது. அதனாலேயே அது தேடற்கரிய செல்வமெனவும், ஒப்புயர்வற்ற நண்பனெனவும் போற்றப்படுகிறது. மனிதன் உலகியலை அறிதற்கும், இயற்கை ஆற்றலை அடக்கியாண்டு, தனக்கும் பிறர்க்கும் பயனளிக்கும் வகையை அறிதற்கும் அறிவு வளர்ச்சி பெற்றவனாதல் வேண்டும்.

"அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்து சால்பு ஊன்றிய தூண்"

என்பதற்கமைய மேற்கூறப்பட்ட குணங்கள் குடியிருக்கும் மனம் பெற்று, உலகத்தோடொட்ட ஒழுகுவதற்கும். ஆன்மா ஈடேற்றம் பெறுவதற்கும் மனவளர்ச்சி உடையனாகுதல் வேண்டும். அறிவு, மனம் என்னும் இரண்டினதும் ஒருமித்த வளர்ச்சியே மனிதனது பூரண வளர்ச்சி. மனிதனது அறிவு வளர்ச்சிக்கு அறிவியல் சம்பந்தமான கல்வி துணை புரிகின்றது. பல திறப்பட்ட கணித முறைகளும், இரசாயனம், பௌதீகம், உயிரியல் முதலியனவையும் அறிவியலுள் அடங்கும். மனிதனது புறவாழ்வு சிறப்புப் பெறுவதற்கு இவை பெருந் துணை புரிகின்றன. தத்துவம், இலக்கியம், இசை, நாடகம், ஓவியம், சிற்பம் முதலிய அழகியல்கள் மனவளர்ச்சிக்குரியன.

இவைகள் கவின்கலைகள் என அழைக்கப்படுகின்றன. மனிதனது அகவாழ்வு சிறப்படைவதற்குத் துணைபுரிகின்றன. எனவே அறிவியல், அழகியல் என்னும் இரண்டினாலும் மனிதன் பூரண வளர்ச்சி பெற முடிகின்றது.

கோயில்களை மையமாகக் கொண்டே பண்டுதொட்டுத் தமிழ் நாட்டில் அழகியற் கலைகள் பலவும் வளர்ந்துள்ளன. வானுற நிமிர்ந்து நிற்கும் கோயிற் கோபுரங்கள், சிற்பக்கலையின் உயர்ச்சிக்குச் சான்றுபகர்கின்றன. கோயிற் சுவர்களும், விதானங்களும், வண்ண வண்ண இசையும், நாட்டியமும் இணைபிரியாது கோயிலிலே வளர்ந்தன. இங்ஙனம் கவின்கலைகள் யாவும் சங்கமிக்கும் இடமாகக் கோயில்கள் மதிக்கப்பட்டன. அக் கவின்கலைகள் அனைத்தினூடாகவும் பக்திப் பேரொளி சுடர் விட்டுப் பிரகாசித்தது. இப்பேரொளி ஆன்ம ஞானமாக மலர்ந்தது. இவையனைத்தும் அழகியல் என்னும் பிரிவிலடங்கி மனிதனது அகவளர்ச்சிக்குப் பெருந்துணை புரிகின்றது.

உலகம் ஒரு குலமாதல் வேண்டும் என்னும் குறிக்கோளாக அறிவியலாலும், அழகியலாலும் சாதிக்கப்பட வேண்டியது. ஒருரார் மற்றோர் ஊராரையும், ஒரு நாட்டார் மற்றொரு நாட்டாரையும் எதிர்த்துப் போராடி வாழ்ந்த கதையைச் சரித்திரம் பேசுகிறது. ஆயின், இன்று அறிவியல், அழகியல் என்பவற்றின் வளர்ச்சியாலே தேசத்தலைவர்கள் பேதங்களை மறந்து ஓர் அரங்கிற் சந்தித்துப் பேசும் நிலை உருவாகியுள்ளது. அறிவியலும் அழகியலும் பேரறிஞர் பலர் கண்ட ஒருவகைக் கனவை நனவாக்க வழியமைத்திருக்கின்றன.

"யாதாயினும் நாடாமல் ஊராமல் என்னொருவன்
சாந்துணையும் நல்லாதவாறு"

என்ற வள்ளுவர் கருத்தை, அழகியலும் அறிவியலும் பிணைந்த கல்வி சிந்திக்கச் செய்கிறது.

M. வனஜா
(2ம் வருடம் ஆரம்பக்கல்வி)

# கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் நுட்ப முறைகள்

கற்றல் - கற்பித்தல் என்பது இன்றைய கலைத்திட்டத்தின் படி ஓர் இலகுவான செயலன்று. பரந்து விரிந்த நுட்பமான ஓர் செயல் ஒழுங்காகக் கற்றல் - கற்பித்தல் இன்று சுடர்விட்டுப் பிரகாசிப்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து அறிந்த விடயமாகும்.

கற்றல் என்னும் போது ஒருவரின் நடத்தையில் நிலையான மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதான விளைவே என வரையறை செய்யலாம். சில திறன்களையோ, ஆற்றல்களையோ, மனப்பாங்குகளையோ, நயப்பையோ ஒருவரிடத்தில் ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளும் முயற்சியையே கற்பித்தல் எனக் கூறப்படுகிறது.

கற்பித்தல் உத்திகளும், நுட்ப முறைகளும் கற்றல் - கற்பித்தல் துறைகளுக்கு முக்கியமாகத் தேவைப்படும் காரணிகளாகக் கொள்ளலாம். பல்வேறு கற்பித்தல் முறைகளை தேவைக்கு ஏற்ப, ஏற்ற இடங்களில் ஆசிரியர் தன் அனுபவங்களின் மூலம் வழங்கி கற்றல் - கற்பித்தலை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது இன்றியமையாததாகும்.

மனிதன் ஆரம்ப காலத்தில் கையாண்ட கற்பித்தல் முறை பின்பற்றிச் செல்ல வகை செய்யும் முறையாகும். அதாவது, ஒரு பிள்ளை தனக்கு மூத்தோர் தாய், தந்தை செய்வதைப் பார்த்து அதன் படி தானும் பின்பற்றிச் செல்வதாக இருந்தமை வரலாற்று உண்மை. பின் ஏற்பட்ட சனத்தொகை அதிகரிப்பு, அறிவு, நுண்ணறிவு விருத்தி காரணமாக இன்று பல கற்றல் - கற்பித்தல் நுட்ப முறைகள் கல்வியை இலகுபடுத்திச் சென்றுள்ளமையைக் காண முடிகிறது.

அவ்வப் பயன்பாட்டிற்கு ஏற்ப கற்றல் - கற்பித்தல் நுட்ப முறைகள் பாகுபடுத்தப்பட்டுள்ளன. அவை வருமாறு,

*1)* I. செய்து காட்டல் (Demonstration)
II. கலந்துரையாடல் (Discussing)
III. வினாவுதல் (Questioning)
IV. சிந்தனையைக் கிளறும் முறை (Brain Storming)
V. நடிப்பு / பாவனை செய்தல் முறை (Dramatation)
VI. நுண் முறைக் கற்பித்தல் (Micro Teaching)

*2)* குழுவாகக் கற்பிக்கும் முறைகள்:

I. அணி முறைக் கற்பித்தல் (Team teaching)

3) *தனியாள் கற்கும் முறைகள்:*

I. *கண்டு பிடித்துக் கற்றல்* (Discovery Learning)
II. *பிரச்சினை தீர்த்தல் முறை* (Problem Solving)
III. *போல அமைத்து கற்றல்* (Simulation)

4) *கூட்டாகக் கற்கும் முறைகள்*

I. *குழுவாக கற்றல்* (Group Learning)
II. *பிரச்சினை தீர்த்தல்*
III. *செய்திட்டமுறை* (Project method)
IV. *கண்டு பிடித்துக் கற்றல்*

*இந்நுட்ப முறைகளை விட இன்று வேறும்பல நுட்ப முறைகளான கள ஆய்வு, சுற்றுலாக் கற்றல், ஆய்வு முறை, அவதானிப்பு முறை, சகபாடி முறை.... எனப் பல நுட்ப முறைகள் கையாளப்படுகின்றன.*

I. *செய்து காட்டல் முறை:*

*இம்முறை முன்பிருந்து வரும் கற்றல் கற்பித்தல் நுட்ப முறையென்றே கூறலாம். இந்நுட்பத்தைப் பயன்படுத்தும் போது காட்டுதல், கூறுதல், விளக்குதல், அவதானித்தல், காணுதல், போலச் செய்தல் போன்ற செயற்பாடுகள் ஒரே தடவையில் உபயோகிக்கப்படுகின்றது. இது மாணவரை நன்கு தூண்டுதலளித்து வினைதிறன் மிக்க கற்பித்தலை இடம் பெறச் செய்வதாக அமைகிறது.*

II. *கலந்துரையாடல் முறை:*

*இடைநிலை வகுப்புக்களில் பயனுறுதி வாய்ந்த ஒரு முறையாக இதனைக் கையாளலாம். இதனுள் குறித்த ஒரு ஆய்வுப் பொருளுடன் அன்றி பிரச்சினை ஒன்றுடன் தொடர்பான விடயங்களை ஒப்பிடல் மதிப்பிடல் உசாவுதல், முடிவுக்கு வருதல் என்பன அடங்கும். மாணவர்களை கலந்துரையாடலின் போது அவர்களது கருத்துக்களுக்கு மதிப்பளித்து ஒழுங்கமைக்க வேண்டியது அவசியமாகும். இக் கலந்துரையாடலின் போது தலைமைத்துவத்தை ஏற்கும் ஆற்றலை மாணவரிடத்தே விதைத்தல் அவசியமானது.*

III. *வினாவுதல் முறை:*

*இம்முறை சோக்கிரட்டீஸ், பிளேட்டோ போன்ற தத்துவ ஞானிகளால் கல்விச் செயற்பாட்டுக்காக பயன்படுத்தப்பட்டது. பல்வேறு கல்வி நோக்கங்களை நிறைவேற்ற இம்முறை பெரிதும் உதவுகின்றது. இதன் மூலம் மாணவனின் பகுத்தாய்வுத்திறன், தர்க்க ரீதியான சிந்தனை, ஆக்கத்திறன் என்பன விருத்தியுறும்.*

IV. *சிந்தனைக் கிளறல் கற்றல் முறை:*

ஒரு பிரச்சினை தொடர்பாக மாணவர் அளிக்கக் கூடிய சகல துலங்கல்களையும் முன்வைக்க சந்தர்ப்பம் வழங்கல் மூலம் சிந்தனையைக் கிளறல் இடம்பெறும். இதன் மூலம் மாணவர்கள் விரிவான சிந்தனையின் பால் நெறிப்படுத்தப்படுவதுடன் அவர்களது ஆக்கத்திறன்கள் வெளிப்பட வடிகாலாகவும் அமையும்.

V. *குழு முறை*

இம்முறை ஆரம்பப் பாடசாலைகளுக்கு மிகப் பயன்தரக் கூடிய முறையாக திகழ்கிறது. இதன் மூலம் மாணவரிடத்தே ஒற்றுமையாகச் செயற்படல் விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, வெற்றி - தோல்விகளைச் சமமாக மதித்தல், பிறர் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், தலைமைத்துவப் பண்பு போன்ற இன்னோரன்ன நற்பண்புகள் வெளிப்படக் காலாக அமைகிறது.

VI. *நுண்முறைக் கற்பித்தல்:*

மிகக் குறுகிய நேரத்தில் ஒரு திறனை வழங்கச் செயற்படுத்தும் ஒரு முறையே இதுவாகும். இம் முறை மூலம் கற்கும் போது அம்மாணவர் பெறும் அறிவு நெடுங்காலம் நிலைத்து நிற்கக் கூடிய உறுதியான அறிவாக அமையும்.

VII. *போல அமைத்துக் கற்றல்:*

கற்றல் அனுபவங்களை மாணவனுக்கு வழங்க ஏற்ற சிறந்த பயனுள்ள ஓர் முறையாக இது அமைகிறது. ஊக்கலும், உற்சாகமும் மிக்க கற்றல் சந்தர்ப்பத்தை இது வழங்குகிறது. குறிப்பாக, குறித்த ஓர் மிருகத்தைப் போன்று பாவனை செய்து கற்பிக்கும் போது அது மாணவனின் மனதில் திடமாக பதியப்படும்.

VIII. *செய்திட்ட முறை:*

ய.யு.கீல் பட்றிக்ஸ் என்பவரால் முன்வைக்கப்பட்டு 1920 ம் ஆண்டில் ஸ்டீவன்சால் திருத்தியமைக்கப்பட்ட இம்முறை பிரச்சினைகளுக்கு தீர்வுகளைத் தேடிப் பெறுவதன் மூலம் கற்க அடிப்படையாக அமைகிறது.

இவ்வாறாக பலவாறான கற்றல் - கற்பித்தல் நுட்ப முறைகள் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை இலகுபடுத்தியுள்ளதுடன் ஆழமான மனப்பதிவுகளையும் சிந்தனை விருத்திக்கும் வழிபடச் செல்வதாக அமைந்துள்ளமையை நாம் அனுபவங்கள் மூலம் அறிய முடிகின்றது.

நாம் கற்பித்தல் நுட்ப முறைகளைத் தெரிவு செய்து அதில் சிறந்த உயர் பயனைப் பெற பாடத்தின் தன்மை, பாடத்தின் நோக்கம், மாணவர்கள் தன்மை, வகுப்பு மட்டங்கள், வளங்கள், சூழற் காரணிகள் தன்மை, என்பவற்றை அறிந்து கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்வது அவசியமானதொன்றாகும்.

P. **தனுஷா**
**(ஆரம்பக்கல்வி 2ம் வருடம்)**

# கை கொடுப்பது யார்?

உலகையே தன் கைக்குள் அடக்கிவிட்ட விந்தை கண்ட மனிதனுக்கு இயற்கை கடந்த ஆண்டின் இறுதிநாட்களில் கதி கலங்க அடிகொடுத்து முடித்துவிட்ட, அந்தப் பேரழிவு நிகழ்வானது வரலாற்றுப் பதிவேடுகளில் பதிந்து கொண்டிருக்கும் நேரமிது. இழப்புக்கள் எண்ணப்பட்டு, அளப்பரிய வேதனைகளுக்கு ஒத்தடம் கொடுக்கும் தருணம் இது.

மின்னாமல் முழங்காமல் இந்த வரலாற்று சோகம் நடந்து 6 மாதங்கள் கடந்துவிட்டது. இன்னமும் மயானத்தை விட மோசமாக சிதலமடைந்து போன அந்தப் பூமியிலே எந்த மாற்றமும் நடைபெறவில்லை. பல ஆயிரம் மக்களின் உயிர்களையும் சொத்துக்களையும் தன் அலைக்கரத்தால் உள்வாங்கி ஏப்பமிட்ட கடல் வழமைபோல அலை அடித்து ஆர்ப்பரித்தபடி உள்ளது. மக்களின் மனங்களிலேயும் அதே அலை ஓசை கேட்டுக் கொண்டே உள்ளது.

மண்ணுலகை தீவதஞ் செய்துவிட்ட களிப்பில் நெருப்புப் பழமாய் வதனம் தகதகிக்க மேல் திசையில் களைப்பாற காணாமல் போக தயாராகும் கதிரவனின் அழகையும், இன்றைய தீவதஞ் செய்தவின் செய்திகள் திரட்டவும் நாளைய தாக்குதலுக்கு உளவு பார்க்கவுமாக எதிர்வீட்டுக் காதலியைப் போல் இரகசியமாய் தலை நீட்டி வெண்ணொளி பொழியத் தொடங்கும் மழலை நிலாவின் ஏழிலையும், புதுமனைவியின் தொடுதல்கள் போல் காதுமடல்களையும் உச்சியையும் தடவிச் சென்று மயக்கம் தரும் இளமாலைத் தென்றலின் சுகத்தையும், ஏலேலோ பாடி அம்மா சொல்லி வாக்குவாய் தூசனம் சொல்லி மடி நிறைய மீன் அள்ளி வரும் தம் உறவுகளையும், சொத்துக்களையும், குந்தி இருந்து கூழ் குடித்த மனைகளையும், உடல்களைப்பு போக்க தன் நண்பர்களுடன் கள் குடித்த பனைமர தோப்புக்களையும் "சரக்" "சரக்" என சத்தம் எழுப்ப மணலில் கால் புதைய நடந்த கடல்கரையையும் சுனாமியில் இழந்து ஆற்றாவடுவுடன் உள்ள மக்களின் மனங்களுக்கு ஒத்தடம் தேவைப்படுகின்றது. இந்த ஒத்தடத்தை கொடுக்க வல்லவர்கள் யார்?

கடலுடன் தமது வாழ்வை சங்கமாக்கிய கரையோர மக்களால் கடலைவிட்டு எங்கையும் போகஇயலாது கரையோர மக்களில் 2 இலட்சத்து 90,000 பேரை சுனாமி காவு கொண்டு போய் விட்டது. இலங்கையில் மட்டும் உயிரிழப்பு 30957 இத்தனை உறவுகளை பலிகொடுத்த மக்களுக்கு ஆறுதல் தேவை இதனை செய்யக்கூடியவர்கள் யார்?

மனந்திறந்து மக்கள் கூறுகையில்

"இந்தியாவிலிருந்து மனைவி பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு வந்து இரண்டு மாதம் இல்ல இஞ்ச நல் தொழில், கஸ்ரப்படாது வைச்சுப் பாப்பன் எண்டு இஞ்சை கொண்டு வந்து கடலுக்கு அள்ளிக் கொடுத்திட்டன்"., இது முல்லைத்தீவில் ஒரு தந்தையின் குமுறல் "நாங்கள் காட்சிப் பொருள் இல்லை தயவு செய்து எங்களைப் புதினம் பார்க்க வராதையுங்கோ" இது நலன்புரி

நிலையம் ஒன்றில் உள்ள இளைஞன் ஆதங்கம். மனது நிறைய சுமைகளை போட்டு பூட்டி வைத்திருந்து பொருமும் மக்களின் மனச் சுமைகளை இறக்கி வைக்க உதவுவது யார்?

"அம்மாவை கடல் அப்படியே உருட்டி உருட்டிக் கொண்டு போச்சுது தங்கச்சியை தூக்கி கொண்டு வரப்போன அப்பா முள்ளுக் கம்பியோட செத்துக் கிடந்தார். நான் அலையிலை அடிபட்டு எழும்பேக்கை மரக்கொப்பை பிடிச்சபடியால் தப்பினன்" இது 15 வயதுச் சிறுவனின் புலம்பல். சிறுவர்கள் எதிர்காலத்தின் நிர்மானிகள் தேசத்தின் எதிர்கால தலைவர்கள் ஏற்கனவே போரால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு சிறுவர்களுக்கு இது அடுத்த பேர் இடி. இத்தகைய மனவடுக்களுடன் உருவாகும் சிறுவர்களால் எவ்வாறு நாளை நிமிர்ந்து நிற்க இயலும், தேசத்தை தீர்மானிக்க முடியும். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அறிக்கையின்படி பாதிக்கப்பட்ட சிறுவர்கள் விபரம்.

| மொத்த இழப்பு | வடக்கு | கிழக்கு | மொத்த இறப்பு வீதம் |
|---|---|---|---|
| தந்தை இழந்தோர் | 3219 | 1995 | 62% |
| தாய் இழந்தோர் | 1874 | 1288 | 69% |
| இருவரும் இழந்தோர் | 692 | 406 | 59% |
| மொத்தம் | 5785 | 3689 | 64% |



### மாவட்ட ரீதியாக

| | |
|---|---|
| அம்பாறை | 1116 |
| மட்டக்களப்பு | 1105 |
| முல்லைத்தீவு | 487 |
| யாழ்ப்பாணம் | 86 |
| திருமலை | 67 |
| கிளிநொச்சி | 01 |

சிறுவரின் உள்ளத்தில் இறைவனை காணலாம் என்பார்கள். ஒளி இழந்த சிறுவர்களுக்கு ஒளி கொடுப்பது யார்?

மனங்களில் மாறாக் காயங்களை சுமந்து நிற்கும் மனிதர்களுக்கு மருந்திடுபவர்கள் யார்? மருத்துவர்களா, அவ்வாறாயின் இலங்கையை பொறுத்தவரை 20 மில்லியன் மக்களுக்கு 30 உள மருத்துவ நிபுணர்கள் மட்டுமே உள்ளனர். என்று குறிப்பிடுகிறது.

முன்பு எம்நாட்டிற்கு உளவளம் என்பது தேவைப்படவில்லை. எமது சமூக அமைப்பு அவ்வாறு இருந்தது. உதாரணமாக ஒரு மரண வீட்டை எடுத்துக் கொண்டால் எல்லோரும் இருந்து கூடி அழுவார்கள். அழாதவர்களையும் அழவைப்பார்கள். தனது மனப்பாங்குகளை ஒப்பு சொல்லுவதன் மூலம் கொட்டித்தீர்ப்பார்கள் பின் ஒரு மாதகாலம் அளவிற்கும் எல்லோரும் வந்து போவர். கூடியிருந்து கதைத்து இழப்புக்குரியவரை தேற்றுவார்கள். ஆனால்

இன்று நிலை அவ்வாறு இல்லை. சமூகம் சுக்கு நூறாக உடைந்து விட்டது. அது மட்டும் அல்ல யாரையார் ஆற்றுப்படுத்துவது என்ற நிலை அவ்வாறாயின் பாதிக்கப்பட்டவரின் நிலையென்ன? இவர்களுக்கு கை கொடுப்பது யார்?

முதலில் எவ்வாறு கை கொடுப்பது என்பதை நோக்கிவிட்டு பொருத்தமானது யார் என்பதை தேடுவது பொருந்தும். சிறுவர்களே அதிகம் பாதிக்கப்பட்டமையால் அவர்கள் பற்றி யோசிப்பது சாலப் பொருந்தும்

சிறுவர்கள் சுனாமியின் இழப்புக்களை நேரடியாக பார்த்த அனுபவம் உள்ளவர்கள். பெரிய அவலத்திலிருந்து மீண்டும் எழுந்தவர்கள். இதனால் அவர்களிடம் ஏற்பட்ட பயம், மனவிரக்தி. பசுமரத்தாணி போல் மனதில் பதிந்திருக்கும். இது அவனது ஆளுமையை, எதிர்கால சிந்தனையை சின்னாபின்னமாக்கிவிடும். இதிலிருந்து மீள்வதற்கு உடனடியாக சில வழிமுறைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

1. சிறுவர்களை அதிர்ச்சியில் இருந்து மீளவைத்தல்
2. பாதுகாப்பான வாழ்விட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
3. முழுமையான கல்வி வழங்கல்.

இம்மூன்று நடைமுறைகள் ஊடாகவும் சிறுவரின் உள்ளத்தில் ஒளி ஏற்ற முடியும்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் பாடசாலையிலேயே அதிகம் காலத்தை செலவிடுகின்றனர். அவர்களுக்கு அன்பான அணைப்பு தேவைப்படுகிறது. அவர்கள் கூறும் கதைகளை பொறுமையாக இருந்து கேட்பதற்கு ஆட்கள் தேவைப்படுகின்றார்கள். ஆளியவளை பாடசாலைக்கு நாங்கள் (கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்கள்) சென்ற போது தரம் 3 மாணவர் ஒருவர் கூறியது "ரீச்சர் எங்கட வீட்டிலை எல்லோரும் செத்து போட்டினம் நான் ஆரோடை கதைக்கிறது" என்றார் இன்னும் தரம் 2 மாணவன் அவர்களுக்கு இடைவேளையில் வழங்கப்பட்ட பிஸ்கற்றின் மீதியை வீட்டில் உள்ளவர்களுக்கு கொடுக்க சொல்லும் போது வீட்டை தம்பி செத்து போட்டுது. நான் இதை யாருக்கு கொடுப்பதென்றார்.

இவ்வாறான மாணவர்களிடம் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டு அவர்களிற்கு நம்பிக்கை ஊட்டப்பட வேண்டும். இதனால் மாணவன் தனது இயலாமைகளையும், சோகங்களையும் மறந்து அப்பணியில் மனநிறைவுடன் ஈடுபடுவதனால் அதனை சரியாகச் செய்து முடிக்கும் போது அவனிடம் பூரிப்பு ஏற்படுகிறது.

நாடகங்கள், சித்திரங்கள், வேறு இசை நிகழ்வுகள் என்பவற்றில் மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலமும், அவற்றைப் பார்ப்பதன் மூலமும் மாணவரின் மனங்களில் மனநிறைவு ஏற்படுகின்றது. இதனால் மாணவர் தம் துன்பங்களை மறக்கின்றனர். அத்துடன் தலைமை தாங்கும் பண்புகள் மாணவரிடத்தில் வளர்கிறது. தம் பிள்ளைகளின் நிகழ்வுகளை பெற்றோர் பார்க்கும் போது அவர்களது மனத்திலும் சந்தோஷம் ஏற்படுகின்றது.

கதைகள் மாணவர்களை ஈர்க்கக் கூடிய ஒரு விடயம். போராடி வெற்றி பெற்ற கருப்பொருட்களை உடைய கதைகளும் நகைச்சுவைக் கதைகளும் மாணவர்களின் மனங்களுக்கு ஒத்தடம் கொடுக்கக் கூடிய விடயங்கள்.

அடுத்து ஆசிரியர் சமூகத்தின் ஓர் அங்கம் - அவரால் ஒரு சமூகத்தை மாற்றி அமைக்க முடியும். எனவே இதை செய்யக்கூடியவர் ஆசிரியரே.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் உடனடியாக செய்ய வேண்டியவை. நீண்டகால உறுதிப்பாட்டை போணபின் வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

1. கல்விக்காக ஒதுக்கப்படும் சுனாமி நிதி மூலம் உலகத்தரமான கல்வி வசதிகள் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஏற்படுத்தப்பட வேண்டும்.


2. பாடத்திட்டங்களிலும் ஆசிரியருக்கு வழங்கப்படும் பயிற்சிகளிலும் அனர்த்தத்திற்கு வழங்கப்படும் பயிற்சிகளிலும் அனர்த்தத்திற்கு முகம் கொடுத்தல் தயார்படுத்தல், வளமான சூழலைக் கட்டியெழுப்புதல், மற்றும் சமூக ஒருங்கிணைப்பு போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.

3. பாடசாலை வாழ்வில் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் சிறுவர் உரிமைகள் ஒருங்கிணைக்கப்படவேண்டும். வன்முறை ஒதுக்கல் என்பன இல்லாமல் தொழிற்படவேண்டும்.

4. தனியார் மயப்படுத்தலுக்கு இடமின்றி அனைத்துப் பாடசாலைகளும் அரசமயப்படுத்தப்பட வேண்டும்.

இதற்கு அழுத்தம் கொடுப்பதும் ஆசிரியரின் கடமையாகும். இதன் மூலம் முழுமையான கல்வியை வழங்க வழி செய்யலாம்.


இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட எம்மை அர்ப்பணிக்க எத்தனை பேர் தயாராக உள்ளோம். முடிவு எம்கையில்.



வல்லமை தாராயோ பராசக்தி - இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே
சொல்லடி சிவசக்தி - நிலச்
சுமை யென வாழ்ந்திடப் புரிகுவையோ?

**ஜெ. ஜெகரூபன்**
**(2ம் வருடம், சித்திரம்)**

# ACTIVITIES




# ACTIVITIES



# ACTIVITIES



# ACTIVITIES



# ACTIVITIES



# ACTIVITIES



# ஈழத்தில் தமிழிசை வளர்ச்சி

*ஈழத்தை ஆண்ட தமிழ் நாகர்களால் இலங்கைக்கு முதன் முதலில் இடப்பட்ட தமிழ் நாமம் ஈழம் ஆகும். ஈழத்தை அதன் வடபாகத்தை வீணாகானபுரம் என அழைத்து வந்தனர். ஈழத்தில் இசை அதி உன்னத இடத்தை வகித்தது என்பது மகாவம்சத்திலிருந்து அறியப்படுகின்றது. பழைய வரலாற்று நூலாகிய பாரதத்திலும் ஈழநாட்டுநாகர் பற்றி கூறப்பட்டுள்ளது. இயக்கரும் நாகரும் பூர்வீக இலங்கையராக வாழ்ந்து வந்தனர். இவர்கள் வாழ்ந்து வந்த நாகதீப என்பது யாழ்குடா என தற்போது பெயர் மாற்றம் பெற்றுள்ளது என கூறப்படுகின்றது. மாதோட்டம் நயினாதீவு குதிரைமனை என்னும் இடங்களில் நாகர்கள் கூடுதலாக வாழ்ந்து வந்தார்கள். நாகர்களின் மொழியில் ஈழம் என அழைத்தனர். இராவணன் வீணை கொடியுடை வேந்தனாக விதந்துரைக்கப்படுகின்றான். இவன் துவாரயுகத்திற்கு முற்பட்ட காலம் வாழ்ந்தவன். இராவணன் ஈழத்தில் இசை முன்னோடியாகவும் இலகு ஆதாரங்களுடன் விளக்கப்பட்டிருப்பதைக் காணலாம். திருஞானசம்பந்தர் பாடிய 5000 பாடல்களில் 483 பதிகங்களில் கிட்டத்தட்ட 483 இடங்களில் இராவணனின் சிறப்புப் பற்றிச் சுட்டுவதைக் காணலாம்.*

*"தென் மாநிலங்கை" என்று சங்கப்புலவராலும் "சிவபூமி" என்று திருமூலராலும் குறிக்கப்படும் இலங்கையை இராவணனுக்குப் பின் அவரது தம்பி விபூஷணன் அரசாண்டான். அக் காலத்தில் இசை நன்கு மேலோங்கி இருந்ததை அறிய முடிகின்றது. கோணேஸ்வரப் பெருமானில் இராவணன் சிறந்த பக்தி உடையவனாகவும் அவனுடைய தாயும் மனைவி மண்டோதரியும் சிவனில் பக்தி உடையவர்கள். இராவணன் சாமா கானம் பாடி சிவனை வழிபட்டதாகவும் அதுபற்றிய விளக்கங்களை வான்மீகி இராமாயணம் முதல் கம்பராமாயணம் வரை சுட்டுவதைக் காணலாம்.*

*7ம், 8ம் நூற்றாண்டில் பல்லவர் காலத்தில் வாழ்ந்த திருஞானசம்பந்தர், சுந்தரர் ஈழத்து சிவத்தலங்களான திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய இரு தலங்கள் மீதும் மூன்று திருப்பதிகங்கள் பாடி உள்ளனர். திருகோணமலைப் பதிகம் எனப்படும் புறநீர்மை, நிரைகழளரவம், பண் நட்டராகம், விடுதுகுன்றம் இவை சம்பந்தர் பாடியது. இவற்றைவிட திருநாவுக்கரசர் பூதியணி கொன்திறத்தர் திருக்கேதீஸ்வரப் பதிகம் பண் நட்டபாடை நத்தார்படை சுந்தரர் பாடியது. சேக்கிழார் பாடிய திருத்தல புராணங்களும் ஈழத்தைச் சார்ந்த மூத்த பாடல்களாகும்.*

*17ம் நூற்றாண்டில் தென்னிந்திய இளவரசியான மாருத புரவீகவல்லி என்பவர் கீரிமலையில் நீராடி மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலை வழிபட்டதன்*

பின் தன் குதிரை முகம் மாறியதன் காரணமாக அந்த ஆலயத்தை புனருத்தாரணம் செய்ததுடன் இந்தியாவிலிருந்து இசைக் கலைஞர்களையும் வருவித்து தமிழிசையை எங்கும் பரவச் செய்தனர்.

இக்காலத்தில் சமயத்தொண்டு, கலை என்பவற்றை செய்வதற்கு தேவரடியார் என்பவர் நியமிக்கப்பட்டார். சோழரின் பின் இலங்கையை ஆட்சி செய்த 1ம் விஜயபாகு காலத்தில் கந்தளாயில் இருந்த விஜயராஜேஸ்வரன் எனும் சிவாலயத்தில் 7 தேவரடியார் நியமிக்கப்பட்டதாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

11ம், 12ம் நூற்றாண்டுகளின் ஈழமண்டலத்தில் சிறப்புப்பெற்றிருந்த வானவன்மாதேவி ஈஸ்வரம் திருவிரா ஈஸ்வரம், ராஜராஜேஸ்வரம், உத்தமசோழேஸ்வரம், ரவிகுலமாணிக்க ஈஸ்வரம் போன்ற கோயில்களில் தமிழ்நாட்டுக் கோவில்களைப் போல் தேவார திருப்பதிகங்கள் தமிழ்நாட்டு இசைமரபுக்கு அமைய பாடல்பாடப் பாட்டு வந்துள்ளதாக அறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண அரசிலே பண்ணிசை சிறப்பான கோயில்களில் இடம்பெற்றுள்ளதுடன் நாதஸ்வரமும் தழிமும் முகவரி இடம் பெற்றுள்ளது. முன்னேஸ்வர கோயில் 2ம் கால பூஜை தீப ஆராதனையின் போது அலங்காரத்தின் போது முகவீணை தாளம், மிருதங்கம் ஆகிய வாத்தியங்கள் இசைக்கப்பட்டன. காலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தயாமம், ஆகிய பூஜைகள் நடைபெறும் வேளையில் பெரியமேளம் இசைக்கப்பட்டது. சுவாமி வீதியுலாக் காட்சி ஆரம்பிக்கும் போது மல்லாரி இராகம் இசைக்கப்பட்டது.

17ம், 18ம் நூற்றாண்டுகளில் போர்த்துக்கேயரும் அவர்களைத் தொடர்ந்து ஒல்லாந்தரும் யாழ்ப்பாணத்தை ஆண்டார்கள். ஈழத்தமிழர் இசைக்கு இது ஒரு இருண்டகாலம் என்று இக்காலத்தில் பல ஆலயங்கள் அழிக்கப்பட்டன. கலைஞர் பலர் கலைகள் வளர்ப்பதைவிட பேணுவதையே முக்கியமாகக் கொண்டனர்.

1796 ஆம் ஆண்டு ஏற்பட்ட பிரித்தானியர் ஆட்சியின் போது கலை மீண்டும் வளரத் தொடங்கியது. போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் தொடர்பால் கீழைத்தேச இசையின் தாக்கமும் ஏற்பட்டது. கிறீஸ்தவ சமயம் சார்ந்த இசையும் வளரத்தொடங்கியது.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தின் பின் கர்நாடக இசையின் வளர்ச்சிக்கு பணிபுரிந்தவர்கள் நாதஸ்வரக்காரர்கள் ஆவார். இவர்களைப் பெரியமேளம் என அழைப்பர். இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்டு ஈழத்துக் கலைஞருக்கு கூடிய பயிற்சி அளித்தனர். 19ம் நூற்றாண்டின் இலங்கையர் சிலர் இந்தியா சென்று பயின்று வந்தனர். மாவிட்டபுரம், அளவெட்டி, இணுவில், கோண்டாவில், சாவகச்சேரி, பருத்தித்துறை, மூளாய், பிந்துவில், காரைதீவு, நீராவியடி, வட்டக்கபுராய், வண்ணார்பண்ணை ஆகிய இடங்கள் நாதஸ்வரக் கலைஞர்களின் குடியிருப்புக்கள் அமைந்தன.

19ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆறுமுகநாவலர் பண்ணிசைப் பிரியர், நல்லூர் கந்தசுவாமி கோயிலில் திருவிழாவின் போது சுவாமிக்குப் பின்னால் தேவாரங்கள் ஓதுவதற்கு திருவாவடுதுறையில் இருந்து ஓதுவார் மூர்த்திகள் சிலரை அழைத்து வந்தனர். நாவலர் திருமுறைகளை கற்று அதன் மேலுள்ள ஆர்வம் காரணமாக 11ம் திருமுறை, திருவாசகம் அகத்திய தேவாரத்திரட்டு என்பவற்றை பதிப்பித்தார். சில கீர்த்தனைகளையும் இயற்றியுள்ளார். இவர் எடுத்துக்காட்டாக கதிர்காமத்தின் மேல்பாடிய கீர்த்தனையைக் குறிப்பிடலாம்.

ஈழத்து இசைவளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டவர் புத்துவாட்டி சோமு என்று அழைக்கப்படும் வண்ணார்பண்ணை தா.சோமசுந்தரர். சமீப காலம் வரை யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர். 11 வயதில் இசைத்திறன் மிக்கவராக விளங்கினார். இவர் நாடகத்திலும் ஈடுகொண்டு சங்கரதாஸ் சுவாமிகளை தமது குருவாகக் கருதினார். ராரங்கி எனும் இசைக்கருவியும் நன்கு வாசிப்பர். இவர் வாய்ப்பாட்டுஇசை, வாத்தியஇசை முதலியவற்றில் தேர்ச்சி பெற்றிருந்தது மாத்திரமன்றி குறிப்பிடத்தக்க வாக்தியகாரராகவும் விளங்கினார். உதாரணம் உசேனி ராசர் ஆதிதாளம் சுவாமி உன் சந்நிதியே தஞ்சம் என்று நம்பிவந்தேன். 1931ல் திருமதி மகேஸ்வரி நவரத்தினம் என்பவர் இந்திய இசை, வீணை ஆசிரியர் என்ற இரு நூல்களை எழுதினர்.

1970ம் காலம் இலங்கை வானொலி ஈழத்துப் பாடல்களை ஒலிபெருக்கியது. இதனால் மெல்லிசை வளர்ச்சியுற்றது. ஈழத்து இசை வளர்ச்சியில் 1944 - 1992 வரை அரசாங்கம் ஏற்படுத்தி கல்விச் சீர்த்திருத்தங்களால் மாணவர்கள் இசையினைக் கற்பதற்கான சூழ்நிலைகளை ஓரளவு உருவாக்கியது. 1944ம் ஆண்டு கல்விச்சீர் திருத்தங்களில் இசை ஆசிரியர்கள் பாடசாலையில் நியமிக்கப்பட்டனர். இத்துடன் இதற்கென இசைக்கென தனிப் பரிசோதகர்களும் நியமிக்கப்பட்டனர். எனவே பாடசாலையில் கட்டாய பாடமாக இடம்பெற்ற இசை, நடனம், ஓவியம் இவை பல்கலைக்கழகங்கள் வரை வளர்ச்சியுற்று இத்துறைகளில் பட்டம் பெறும் அளவிற்கு அதி உன்னதவளர்ச்சி அடைந்துள்ளது.

தொகுத்து நோக்கும் போது ஈழத்தமிழரின் இசைமரபுகள் நீண்டகால வரலாறும் பல அம்சங்களும் கொண்டவை. காலத்திற்குக் காலம் அரசியல், சமூகம் முதலியவற்றில் ஏற்பட்ட மாற்றங்களும் தாக்கங்களும் முதலியவற்றுக்கேற்ப சிறப்புறுதலும், சிறப்புக்குன்றியும் வந்துள்ளது எனலாம்.

அன்பரசி N.
(2ம் வருடம், சங்கீதம் )

# சாரணியத்தின் இலக்கு

சாரணர் சத்திய வாக்குறுதியினதும், விதிகளினதும் அடிப்படை வழியாக வரும் பெறுமான முறையின் ஊடாக மக்கள் தனிநபர் நிலையில் சுய நிறைவு உடையவர்களாகும் சமூகத்தில் ஆக்க பூர்வமான வகிபாகத்தை உள்ளவர்களாகவும் விளங்கும் ஒரு சிறப்புடைத்தான ஓர் உலகினை கட்டியெழுப்புவதற்கு உதவும் வகையில் இளைஞர்களின் கல்விக்கு பங்களிப்புச் செய்வதே இலங்கை சங்கத்தின் திட்டமாகும்.

1907 ஆம் ஆண்டு உலகின் முதல் பாசறை இங்கிலாந்தில் உள்ள பிரவுன்ஸ் தீவில் அந்நாட்டின் பல்தரப்பட்ட சமூகத்தினரது இளைஞர்களை ஒன்றிணைத்து 20 சாரணர்களுடன் இப்பாசறையினை ஸ்தாபகரான உயர் திருமாவீரன் றொபேட் ஸ்டீவின்சன் ஸ்மித் பேடன் பவல் அவர்கள் நெறிகெட்டு சீரழிந்து கொண்டு இருந்த இளைஞர் சமுதாய எண்ண ஓட்டத்தினை திசை திருப்பி "சாரணர் இயக்கம்" என்னும் அமைப்பினை அந் நாட்டிற்கு பெற்றுக் கொடுத்தார்.

தனது சகோதரியின் விருப்பத்திற்கும் அன்றைய தேவைக்கும் ஏற்ப பெண்கள் சாரணர் 1910 ஆம் ஆண்டு தோற்றம் பெற்றது. பின்னர் பாரியாரின் துணையுடன் "வழிகாட்டிகள்" என்று அழைக்கப்படும் பெண்சாரணர் வழிநடாத்தப் பட்டனர். பெண்களால் எதையும் செய்ய முடியும் அவர்கள் சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் அல்ல என்பதை இன்றைக்கு 95 வருடங்களுக்கு முன்பே பேடன்பவல் சம உரிமை கொடுத்தார்.

1910 ஆம் ஆண்டு கடல் சாரணரும், குழந்தைகளின் விருப்பத்திற்கு ஏற்றவகையில் ஆடல், பாடல், விளையாட்டு, கதை என்பவற்றுடன் இயற்கையினை இரசிக்கும் ஆற்றலை உள்ளடக்கி "குருளைச் சாரணர்" பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. 1918 ஆம் ஆண்டு திரிசாரணர் பிரிவும், 1925 ஆம் ஆண்டு செவிப்புலன் அற்றவர்களுக்கான சாரணியமும் 1941 ஆம் ஆண்டு விமான சாரணர் பிரிவும் சர்வதேச நிலையில் ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இளைஞர், யுவதிகளின் எதிர்காலத் தேவைகளை உள்ளடக்கியமைந்த இவ் அமைப்பு இலங்கைக்கு 1912 ஆம் ஆண்டு கட்டிட நிபுணரான திரு. கு.பு. ஸ்டீவின்சன் அவர்களால் மாத்தளையில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறு இலங்கையில் தோன்றிய அந்த உதயம் இளைஞர், யுவதிகளின் வாழ்க்கையில் பிரகாசமாக அமைந்தது "உங்கள் செயற்பாடுகள் அறிவு பூர்வமானதாகவும் அன்பு, கருணை, நட்பு நிறைந்த சேவையாக இருக்குமேயானால் மற்றவர்களின் பாராட்டும் ஆசீர்வாதமும் உங்களுக்குரியதாகும்" என்று பேடன்பவல் கூறிய அறிவுரைக்கமைய 1957 ஆம் ஆண்டு இலங்கைப் பாராளுமன்றத்தில் சாரணர் சட்டக் கோவை அங்கீகரிக்கப்பட்டது. 1966 ஆம் ஆண்டு யூலை 27 ஆம் திகதி இலங்கையில் இருந்து முதல் முதலாக மூவர் இராணி மாளிகை சென்று இராணி விருதினைப் பெற்று இலங்கை சாதனையாளருடன் இணைந்தனர். மலையகத்தைச் சேர்ந்த K. பாலசுந்தரம், கல்முனை M. சம்சுதீன் புத்தளத்தைச் சேர்ந்த A.M.K. கலீல் ஆகியோர் மேற்படி விருதினைப் பெற்றவர்கள் ஆவர்.

தற்போது இலங்கையின் பிரதம சாரணராக மாண்புமிகு ஜனாதிபதி அவர்களினால் முன் எடுக்கப்படுகிறது. அவருக்கு துணையாக பிரதம மந்திரி, எதிர்கட்சித்தலைவர், பிரதம நீதிஅரசர், கல்வி உயர்கல்வி அமைச்சர் ஆகியோர் காணப்படுகின்றனர். ஆலோசனைச் சபையில் கடற்படைத் தளபதி, பொலிஸ்மா அதிபர் கொழும்பு மாநகர சபை மேஜர் உட்பட மேலும் 10 உறுப்பினர்களுடன் கல்வி உயர்கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளரும் இச் சபையில் நிரந்தர அங்கம் வகிப்பார். சாரணர் இயக்கத்தின் செயற்பாட்டை முன்னெடுக்க தேசிய சாரணர் தலைமைக் காரியாலயத்தில் பிரதம ஆணையாளர் பதில் பிரதம ஆணையாளர், சர்வதேச ஆணையாளர், உதவிப் பிரதம ஆணையாளர்கள், தலைமைக் காரியாலய ஆணையாளர்கள் என அதிகாரம் பெற்றவர்கள் செயற்படுகின்றனர். சாரணர்கள் பயிற்சியினையும் சாரணத் தலைவர்கள் (ஆசிரியர்கள்) பயிற்சியினையும் முன்னெடுக்க தேசிய தலைமைக் காரியாலயத்தில் தேசிய பயிற்சி ஆணையாளர், தேசிய பயிற்சிக்குழு, மாகாணப் பயிற்சி இணைப்பாளர் என்போரும் மாவட்ட ஆணையாளர்களும் உள்ளனர். இலங்கையில் சுமார் 40 இற்கு மேற்பட்ட சாரணர் மாவட்டங்கள் உள்ளன. இவர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதி அவர்களுக்கே உண்டு.

இவ்வாறு பரந்த சாரணர் அமைப்பில் 217 நாடுகளில் இலங்கையும் அங்கம் வகிக்கின்றது. தற்போது 25 மில்லியன் சாரணர்கள் உள்ளனர். எளிதானதும் நீண்டகால நோக்கில் நன்மை தரக்கூடிய ஒன்றாகவும் அமைகின்றதுமான சாரணர் செயற்பாடு கல்வியோடு இணைந்து செயற்படுத்தி வருகிறது. இதன் சிறப்பினை சிறு வயதிலேயே ஆரம்பித்தாலே அனுபவிக்க முடியும். உடல், உள, ஆத்மீக, சமூக, புத்திக்கூர்மை, தன்னம்பிக்கை, ஆளுமை விருத்தி, ஒழுக்க மேன்மை என்பவற்றுடன் நற்பிரஜையின் தன்மை வெளிக்கொணரப் படுகின்றது.

சாரணர்களில் இன, மத, மொழி, நிற, சாதி வேறுபாடுகள் காணப்படுவதில்லை. எந்தச் சாரணனும் எந்த நாட்டிற்கும் சென்று வரமுடியும். அப்படிப்பட்ட ஒரு அமைப்பில் உள்ளவர்கள் சுவாமி விவேகானந்தரின் சிந்தனையான "எழுந்து நில்லுங்கள், தைரியமாக இருங்கள், வலிமையுடன் இருங்கள் எல்லாப் பொறுப்புக்களையும் நீங்களே ஏற்றுக் கொள்ளுங்கள் உங்கள் வாழ்க்கைப் பாதையை நீங்கள் தான் உருவாக்க வேண்டும். என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அனைத்தையும் உருவாக்கத் தேவையான வலிமையும் நம்பிக்கையும் உங்களுக்குள்ளேயே இருக்கிறது. அவற்றை வெளியே கொண்டு வந்து உங்கள் எதிர் காலத்தை நீங்களே உருவாக்குங்கள்" என்ற அவர் கருத்து ஒரு சாரணனுக்கு மிகவும் பொருந்துகின்றது. இலங்கையில் ஒற்றுமையான இனத்தை பெற்றுக் கொள்ளவும் ஆரோக்கிய சமூகத்தை பெறவும் 2013 இல் இலங்கை சாரணர் சங்கமானது நாட்டின் தேசிய ஒற்றுமையை நிலை நிறுத்துவதாகவும் இளம் சந்ததியினரின் தேவைகளையும் அபிலாசைகளையும் கருத்திற் கொண்டு இவ் இளைஞர், யுவதிகளிடத்து பெறுமான தளம் உள்ள முறை சாரா கலவன் கல்வி முறைமையின் ஊடாக தலைமைத்துவ பண்புகளை வளர்க்கும் அசைவு இயக்க துடிப்புள்ளதானதும் ஒரு இலட்சம் அங்கத்தினரை கொண்டதுமான ஒரு நிறுவனமாக அமையும் என்ற இலக்கை நோக்கி சாரணியம் நடைபோடுகிறது.

**யோகநாதன் கேதீசன்**
**(1ம் வருடம், சித்திரம்)**

# மதிப்பாவை

பரந்த இவ்வானத்திலே
பகலவன் சென்றபின்பு
மாலை மயங்கும் வேளைதனிலே
மங்கையிவள் மஞ்சள் பூசி
மன்னனிடம் வருகின்றாள்.
நட்சத்திரத் தோழியர்தம்
நளினமாகக் கண்ணசைக்க
மேகக்கூட்டப் பஞ்சணைமேல்
மோகனமாய் வருகின்றாள்.


மன்னவனைக் காணவில்லை
மதியவள் தான் வாடி விட்டாள்
முகிற்திரைக்குப் பின்னாலே
முகம் மூடி விசும்புகின்றாள்
அவள் சோகம் பொறுக்காது
கமலத்தோழி கூம்பிட்டாள்
சத்தமின்றி மெதுவாக
மீண்டும் எட்டிப்பார்க்கின்றாள்

அல்லித் தோழி தனக்காக
மலர்ந்து மணம்பரப்ப
தன்வரவை எதிர்பார்த்து
காத்திருக்கும் தன்மையினை
தண்மதியாள் கண்டுவிட்டாள்
மெல்ல முகில்த் திரையினின்று
விடுபட்டு விலகுகின்றாள்
கண்டுவிட்ட அல்லியாரும்
முகமலர்ந்து மகிழ்கின்றாள்

சேர்ந்தவர்கள் மகிழ்ந்திருக்க
பிரிந்தவர்கள் வாடிவிட
முல்லை மொட்டு மலர்கிறது
தென்றல் அதை வாரிவந்து
இன்ப சுகம் சேர்க்கிறது
மீண்டும் சுடர் நெருப்பின்
பிரிவுத் துயர்தனை வாட்ட
மதிப்பாவை மறுகுகின்றாள்
மெல்ல முகில்த் திரையிடையே

சரணடையத் தொடங்குகிறாள்
இன்று அவள் வரவில்லை
எங்கு சென்றாள் யாரறிவார்?
அன்று சோகம் கொண்டவள் தான்
மெல்லமெல்லத் தேய்ந்துவிட்டாள்
என்று அவள் வந்துவிடுவாள்?
ஒற்றைத் திங்கள் சென்றிடுமாம்
யாரோடு ஊடிவிட்டாள்?
ஓ!அந்த மன்னவன் தான் - அவள்
மறைவிற்கு காரணமோ?


T. துஷ்யந்தினி
(2ம் வருடம், ஆரம்பக்கல்வி)



# FOOT BALL TEAM



# CRICKET TEAM



# NET BALL TEAM




# VOLLEY BALL TEAM (GIRLS)



# BATBINTON TEAM



# VOLLEY BALL TEAM





சுதேசிய பாரம்பரிய விளையாட்டு நிகழ்வின்போது...



# அழகியல் கல்வியில் நடனத்தின் பங்கு

அழகியல் கல்வி என்பது நுண்கலைகளான இசை, நடனம், ஓவியம், சிற்பம் என்பனவற்றை உள்ளடக்கியது. "அழகு" என்பது தமிழில் எழில் முருகு, கவின், காமர், பொற்பு, பொலிவு, வனப்பு எனப் பல சொற்களால் சுட்டப்படுகின்றது அழகு என்பது இயற்கையிலும் மனிதன் உருவாக்கிய பொருட்களிலும் கலைகளிலும் காணப்படினும் அழகியல் என்பது இவற்றின் பண்புகளை விளக்கக்கூடியது என்று பொதுவாகக் கருதப்படினும் கலைப் பொருட்களை விளக்கும் ஒரு சிந்தனைச் சாதனமாகவே இன்று பலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. என திரு. சு. நடராசன் "தமிழ் மரபில் அழகியல் கொள்கை" எனும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். அழகியலை தொகுத்துத் திரட்டிப் பார்ப்பதற்கு தொல்காப்பியம் ஈறான பல நூல்களில் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

மேற்கத்தேய நாடுகளில் கூட அழகியல் என்பது தத்துவத் தளத்தில் ஒரு கொள்கையை விளக்கும் கலைச் சொல்லாக கி.பி 18 ஆம் நூற்றாண்டில் தான் முதன் முதலில் "அலெக்சாண்டர் கோட்டீப் பாம்கார்த்தன்" என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. இன்று அழகியலானது தத்துவத்திலும் கலை இலக்கியத்திலும் மிகவும் சக்தி வாய்ந்த ஒரு பரிமாணமாக விளங்குகின்றது.

கலைகள் என்பது கலை இலக்கியம், விஞ்ஞான இலக்கியம் என இருவகைப்படும். இவற்றுள் கலை இலக்கியம் எனப்படுவது சாதாரண கலைகள், நுண்கலைகள் என இரு பிரிவுகளைக் கொண்டது. நுண்கலைகளான சித்திரம், சிற்பம், ஓவியம் என்பன நிலையான கலைகள் எனவும் இசை, நடன, நாடகம் ஆகியன இயங்கும் கலைகள் எனவும் கொள்ளப்படுகின்றன.

இவ்வகையிலே இயங்கும் கலைகளுள் பரதநாட்டியக் கலையானது இன்று உலகு எங்கும் காணக்கூடிய ஓர் அரும் பெருங்கலையாக இன, மத மொழி பேதங்களிற்கு அப்பாற்பட்டதாகப் பல்லின மக்களாலும் பயிலப்பட்டு பின்னர் அரங்கக்கலையாகப் பரிணமித்து இன்று அவைக்காற்றுக் கலைகளுள் ஒன்றாக சிறப்பானதோர் இடத்தைப் பரதக்கலை வகிக்கின்றது.

இலங்கையில் நடனக்கலையானது. 1972 ஆம் ஆண்டு கல்விக் கலைத்திட்டத்தில் ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டது. பாடசாலைகளுக்கிடையே நடைபெறும் இயல், இசை அரங்குகளிற்கு அகில இலங்கை ரீதியில் ஒரு தளத்தை அமைத்துக் கொடுக்கும் வகையிலே தமிழ் மொழித்தினப் போட்டிகள் ஆண்டு தோறும் நடாத்தப்பட்டு போட்டிகள் வைத்து வெற்றி பெறுபவர்களிற்குத் தங்கப்பதக்கங்கள், கேடயங்கள், சான்றிதழ்கள் ஆகியன வழங்கப்படுகின்றன. இச் செயற்பாடானது மாணவர் மத்தியில் கலை உணர்வையும் கலைத்தாகத்தையும் ஏற்படுத்தி அவர்களை இக்கலையில் முழு ஆர்வத்துடன் ஈடுபட வழிவகுக்கின்றது. இன்று கல்விக் கல்லூரிகளிலும், ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகளிலும், பல்கலைக் கழகங்களிலும் மரபு வழியான பரதக்கலை பயிற்றப்பட்டு வருகின்றது.

கல்விச் சீர்திருத்தத்திற்கமைய உருவாக்கப்பட்ட புதிய முறைக் கல்வித்திட்டத்தில் அழகியல் கல்வியில் ஆக்கம், நயத்தல், கலாசாரப் பின்னணி ஆகிய அம்சங்கள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விடயங்களாகும். இவற்றைத் தன்னுள் அடக்கிய பரதநாட்டிய பாடத்திட்டமானது மாணவர்களின் கற்பனை வளத்தைப் பெருக்குவதற்கும், இரசனை, இரசிகத்தன்மை ஆகியவற்றை விருத்தி செய்வதற்கும் தமிழ் கலாசார பாரம்பரியத்தினைத் தெரிந்து கொள்வதற்கும் அனுசரனையாக அமைகிறது. இன்றைய கல்வி முறைமாணவர் மையக் கல்வியாதலால் இங்கு மாணவர்கள் முக்கியத்துவப்படுகிறார்கள். நடனக் கலைமூலம் புதிய சிந்தனைகள், எண்ணங்கள், கருத்துக்கள், கற்பனைகள் என்பன வெளிப்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக திருக்குறளின் எண்ணக்கருவை அறிந்து அதனை மையமாக வைத்து அதற்கு ஒரு நாட்டிய நாடக வடிவம் கொடுத்தல் ஆனது பழையன ஊடாக புதியனவற்றை உருவாக்கிச் சமர்ப்பிப்பதாகும். நடனநாடக வடிவங்கள் மனதிலே இலகுவில் பதிந்துவிடுகின்றன. மேலும் மனிதனிடத்தில் இயற்கையாக அமைந்துள்ள மென்மையான உணர்வுகளைத்தட்டி எழுப்புவதற்கும் ஏற்றகருவியாக நடனக்கலை காணப்படுகின்றது.

நடனம் மூலம் பொருத்தமான திறமைகளையும் மனப்பாங்குகளையும் வளர்த்துக் கொள்ள முடிகின்றது. குழுமனப்பாங்கு, பகுத்தறிவு, ஒற்றுமை, மதிப்பளிற்கு வணங்குதல் போன்ற நற்பண்புகள் உருவாகின்றது. நயத்தற்திறன், ஆக்கத்திறன், விமர்சனத்திறன், மதிப்பிடும்திறன் போன்றன வளர்ச்சியுறும் உடல், உள இயக்கம், அறிவு, மனஎழுச்சி ஆகியவற்றை திட்டமிட்டு ஒழுங்குமுறையாக நடைமுறைப்படுத்த அழகியற் கல்வியில் நடனம் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றது. மனிதனின் ஒவ்வொரு வளர்ச்சிப்படியிலும் நடனக்கல்வியானது அவனது ஆளுமை வளர்ச்சிக்குத் துணை செய்கின்றது. குழந்தைப்பருவம் முதற்கொண்டு கட்டிளமைப்பருவம் வரையிலும் வளர்ச்சி காணும் மனிதன் அப்பருவங்களினூடாக அவன் கற்ற கலையில் அமிழ்ந்து நின்று இரசஞான அனுபவத்தைப் பெறுகின்றான். முழுமையான ஒன்றிணைந்த ஆளுமைத் தன்மையின் விருத்திக்கு அழகியற் கல்வியானது ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. நல்ல சிந்தனையானது கலை உணர்வை வெளிப்படுத்தும் என்பது அறிஞர் "லெனினின்" கூற்றாகும்.

ஒட்டு மொத்தமாக ஒருவன் சிறந்த ஆளுமையுடையவனாக விளங்குவதற்கு நடனக்கலை ஓர் அரும் பெரும் சாதனமாக விளங்குகின்றது.

**கார்த்திகா நித்தியானந்தன்**
**(2ம் வருடம், நடனம்)**



# காட்சியும் கவிதையும் I

## *மலரோடு பேசு*

மலர்,
கதிரவனில் கண்திறந்து,
பனித்துனியில் மெய்மறந்து,
உலகோடு உயிர் துடித்து,
காலையில் மலர்ந்து,
மாலையில் மடிந்து
மண்ணோடு சருகாகும்
மலரோடு பேசு
மனிதா
அதன் மடி மீது தூங்கு
அங்கிருந்து பார்,
அமைதி, அமைதி, அமைதி!

**விஜயா. றோஸ் பிரான்சிஸ்**
**ஆங்கிலம் 2ம் வருடம்**



## *காத்திருப்பு*

**நாளை வரும் – மண**
**நாளென எண்ணி**
**நரை தெரிந்த பின்னும்**
**நகரவில்லை**
**நரகச் சீதனம்!**

**கூ. குணாதீபா**
**ஆங்கிலம் 2ம் வருடம்**

**பூவே உனது நிறம் – சிவப்பு**
**ஆனால் எனது மனமோ – கறுப்பு**
**இதற்கு காரணம்**
**கடலன்னையின் – கொதிப்பு**
**என்னவனை பறித்து விட்டது**
**சுனாமி எனும் – நெருப்பு**
**இதனால் என் வாழ்க்கையில்**
**உண்டாயிற்று – வெறுப்பு**
**என்னை இத்துன்ப கடலில்**
**இருந்து மீட்டெடுப்பது**
**இறைவனின் – பொறுப்பு!**

**ஜெ. மேரி உதிஸ்ரா**
**2ம் வருடம்**
**நூலக விஞ்ஞானம்**

## *நீ நான்*

உனக்கும் எனக்கும் தான்
எத்தனை ஒற்றுமை?
உனக்கும் போன பின்தான்
தெரியும் கல்லறையா
கடவுளா என்று
எனக்கும் கட்டிய பின் தான்
தெரியும் கணவனா
கயவனா என்று....

**ஆரபி**

விடுதலை வேண்டிட
சுடுகலன் எடுத்தவன்
தாய்மடி தவறி
தரணியில் வீழ்ந்தநாள்
இன்றோ....?

**S. கௌசிகன்**
**நூலக விஞ்ஞானம்.**

## *உன் நினைவில்*

மகனே!
ஆசையாய் நீ கேட்ட
அல்லிக்குள மொட்டொன்று
இன்று!
அழகிய பூவாய் - உன்
திருவுருவ பட மருகில்

**வ. அரவிந்தன்**
**ஆங்கிலம் 2ம்வருடம்**

# காட்சியும் கவிதையும் II

## எதிர் காலம்

எரியும் திரியோடு
கருகும் இளம் குருத்தே - நீ
பாட நினைவகற்றி - கொஞ்சம்
பாடி மகிழ்ந்தாயா?
பரீட்சைக்கனம் மறந்து - ஒருநாள்
பட்டம் விட்டாயா?
பத்து வயதுனக்கு - ஒழுங்காய்
நித்திரைக்குப் போனாயா?

ஒளிரும் சுடரோடு
துவழும் வரை போராடி
வைத்தியனாவதற்காய்
நோயாளியாகதே!

விஜயா பிரான்சிஸ்



இன்ற குப்பி விளக்கில் நீ
குனிந்திருந்தால்
நாளை அடுப்பங்கரையில் நீ
குனிய வேண்டியதில்லை.

G. மதனகோபன்
நாடகமும் அரங்கியலும்

## குருத்து

குப்பி விளக்கென்ன
குளிர் நிலவிலும் கற்பேன் - நான்
ஏனெனில் - எம்
குலந் தளைக்கவென்று
குருத்தாயிருப்பவளே நான் தான்!

மலைமகள் சந்திரமலர்
விஞ்ஞானம்

## நிதர்சனம்

கண்ணீர் மல்கி குப்பி விளக்கில்
கற்ற நீ இன்று - பல்வைத்தியர்!
கண்குளிர மின்குமிழில்
கற்ற உன் தம்பி இன்று - கற்குழி மதவில்!

வ. அரவிந்தன்

## உயரத் துடிக்கும்....

உயிர் விடத் துடிக்கும்
குப்பி விளக்கினிலும்
உயரத் துடிக்கும்
சிறுமியிவள்.....

வ. தர்சினி
ஆங்கிலம் 2ம் வருடம்

யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற் கல்லூரி
சித்திரக்கலைத்துறை
முகிழ்நிலை ஆசிரியர்களின் மத்தியில்
நடாத்துகின்ற காட்சியும்
கவிதையும் எனும்
ஆக்கத்திறன் செயற்பாட்டில்
இருந்து எடுக்கப்பட்ட
இரண்டு அங்கங்கள்

ஓவியங்கள் திரு. சி. சிவானந்தராஜா
(2ம் வருடம் சித்திரக்கலைத்துறை)

# இலங்கை பற்றிய சிறப்புத் தரவுகள்

1. இலங்கையின் பழைய பெயர்கள் - ஈழம், இலங்காபுரி, தப்பரபேன்
2. இலங்கையின் முதல் அரசன் - இராவனேஸ்வரன்
3. இலங்கையின் வரலாறு கூறும் சிங்கள நூல்கள் - மகாவம்சம், தீபவம்சம், சூழவம்சம்
4. இலங்கையின் ஆதிக்குடிகள் - இயக்கர், நாகர்
5. இலங்கைப் படத்தை முதலில் வரைந்தவர் - தொலமி கி.பி 2ம் நூற்றாண்டு
6. இலங்கையின் வரலாற்று நூல் எழுதியவர் - றொபேட் நொக்ஸ்
7. இலங்கை குடியேற்ற நாடாக்கபட்டது - 1802 இல்
8. கண்டித் தமிழ் இராட்சியம் வீழ்ச்சியடைந்தது - 1815 இல்
9. வன்னித் தமிழ் இராட்சியம் வீழ்ச்சியடைந்தது - 1803 இல்
10. இலங்கை தேசிய காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது - 1919 இல்
11. தேசிய காங்கிரசை நிறுவியவர் - சேர். பொன். அருணாசலம்
12. டொனமூர் அரசியல் திட்டம் வந்த காலம் - 1913 இல்
13. சோல்பெரி அரசியல் திட்டம் வந்த காலம் - 1947 இல்
14. 21 வயதினர்க்கு வாக்குரிமை வழங்கப்பட்டது - 1913 இல்
15. தொலமியின் இலங்கை படத்தில் வடபகுதியின் பெயர் - நாகதீவு
16. பிரதேச, மாகாணசபை தோற்றுவிக்கப்பட்ட காலம் - 1987 இல்
17. இலங்கையில் சுதந்திர அரசியல் சட்டம் ஆக்கப்பட்ட காலம் - 1942 இல்
18. இலங்கையில் முதல் குடியரசு அரசியல் சட்டக் காலம் - 1942 இல்
19. இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை - 1978 இல்
20. சிங்களம் மட்டும் சட்டமாக்கப்பட்ட ஆண்டு - 1965 இல்
21. இலங்கையில் சிங்கள மொழி நடுநிலமை இதழ் - ராவய
22. சிங்களமொழி நாளேடுகளின் பெயர் - சிலுமின, தவச, லங்காதீப
23. சேர் பட்டம் பெற்ற முதல் இலங்கையர் - ஆனந்த குமாரசாமி
24. கண்டியரசனை வெள்ளைக் காரருக்குக் காட்டிக் கொடுத்தவர் - ஏகலப்பொல
25. கற்சிலைமடுப் போருடன் தொடர்புடைய அரசன் - பண்டாரவன்னியன்
26. சுதந்திர இலங்கையின் முதல் தேசாதிபதி - சேர். ஹென்றி மொங்மேசன்மூர்
27. இலங்கையின் முதல் அரசியல் சட்டம் எழுதப்பட்டது - சேர். ஐவர் ஜெனிங்ஸ்
28. 19ம் நூற்றாண்டில் பௌத்தமத மறுமலர்ச்சிக்கு பாடுபட்டவர் - அநகாரிக தர்மபால
29. போக்குவரத்துச் சேவை தேசிய மயமாக்கப்பட்டது - 1958 இல்
30. போக்குவரத்துச் சேவை மக்கள் மயமாக்கப்பட்டது - 1993 இல்

**தொகுப்பு**

R. **சசிகலா**

**(1ம் வருடம், நாடகமும் அரங்கியலும்)**

# ஓவியர் மு. கனகசபை நேர்காணல்

*எமது மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஓவியர்களில் மூத்தவரும் ஆசிரியப் பணியில் நீண்ட காலம் சேவையாற்றி ஓய்வு பெற்று இன்னும் தனது திருப்திக்காக ஓவியங்களை அவ்வப் போது வரைந்தவாறு வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஓவியன் முத்தையா கனகசபை அவர்களை சந்தித்து அவருடன் அவரது கலையுலக வாழ்வு பற்றிய அனுபவங்களையும் கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டோம்.*

*இவர் கொழும்புத்துறையில் 1925 ஆம் ஆண்டு மார்ச் 12 இல் முத்தையா - பொன்னம்மா ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்.*

*ஆரம்பக்கல்வியை தனது வீட்டுக்கு அண்மையில் உள்ள கொழும்புத்துறை வித்தியாசாலையில் கற்றார். பின் இசன் பற்றிக் கல்லூரில் ஆங்கில மொழிக் கல்வியையும் கற்றார். தனது 19 வயதில் கோப்பாய் ஆசிரிய கலாசாயையில் ஆசிரியத்துவ பயிற்சியை பெற்றார். பின்னர் வலுப்பிட்டிய தொழிற்பயிற்சிக் கல்லூரியில் மரவேலை, கட்டிடவேலை, பற்றிக் வேலை, கோழி ஆடு மாடு வளர்ப்பு போன்ற வாழ்க்கைத் தேர்ச்சிப் பயிற்சிகளைப் பெற்றார்.*

*கொழும்புப் பல்கலைக்கழத்தில் வெளிவாரிப் பட்டதாரியாக பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ளார். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கற்க பதிவு செய்த போதும் கல்வியைத் தொடராது சித்திரமும் வரைதலும்* (Art and Graph) *துறையில் இரண்டு ஆண்டு கல்வியை நிறைவு செய்துள்ளார் கொழும்பு நுண்கலைக் கல்லூரி ஆசிரியராக 21 ஆண்டுகள் சித்திர வித்தியதிகாரியாக 18 ஆண்டுகள் பணியாற்றிய இவர் சித்திரக்கலையை முறையாக யாரிடமும் பயிலாத போதும் மேலைத்தேய ஓவியர்களான மானே, ஓனே வன்கோ ஆகியோரின் படங்களைப் பார்த்து அவர்களின் பணியினை பின்பற்றி ஓவியங்களை வரைந்துள்ளனர்.*

*எனது ஆத்மதிருப்திக்காகவே ஓவியர் ஆரம்பத்தில் நீர்வர்ணத்திலும் பின்னர் தைல வர்ணத்திலும் படைப்பாக்கம் செய்துள்ளார்.*

*அவலம் நிறைந்த புறச்சூழலில் வாழ்ந்தாலும் அவர் அச்சூழலில் நின்று விலகி மகிழ்வான சூழலையே படவாக்கம் செய்துள்ளார். "துயரின் காட்சிகளை வரைந்து பார்ப்பவரையும் துயரில் ஆழ்த்த எனக்கு விருப்பமில்லை" எனக் கூறும் இவர் தனது ஓவியங்களை விற்பனை நோக்குடனோ அல்லது பிறரின் வேண்டுதலுக்காகவோ வரையவில்லை. தனது மனதில் வரையும் ஆசை ஏற்பட்ட போது வரைந்துள்ளார். இவரிடம்*

*எமது சமுதாயத்தில் ஓவியரசிப்பு என்பது எந்த நிலையில் இருப்பதாக தாங்கள் கருதுகிறீர்கள்? என்று கேட்டதற்கு எங்கட வீடுகளை அழகுபடுத்திறதுக்கு சினிமாப்பட கலண்டர்களை நூக்கிறம் ஆனால் ஐரோப்பிய நாடுகளில் வரையப்பட்ட ஓவியங்களை காட்சிப்படுத்துகின்றனர். எங்கட மக்களுக்கு வரையப்பட்ட ஓவியங்கள் பற்றி தெரியாது. என்று தான்*

சொல்லுவேன் எனது வீட்டுக்கு வரும் பலர் எனது படங்களைப் பார்த்து விட்டுச் சொல்வார்கள். "இதை ஏன் இப்படி வைச்சிருக்கிறீங்கள் இதை கண்ணாடிக்கடையில் கொடுத்து பிறேம் (Frame) போட்டால் நல்லதே" என்பார்கள். அவர்களுக்கு வரையப்பட்ட படம் பற்றி தெரியாது. வரையப்பட்ட படம் அதில் உள்ள அழகு தூரிகையால் தளத்தில் ஏற்படுத்துகின்ற வர்ண வேறுபாடுகள் அசைவுகள் எல்லாம் தெரியாது. கண்ணாடிச் சட்டம் போடுவதால் அவை தெரியாது போய்விடும் அதாவது தைல வர்ணத்தில் உள்ள இயற்கைத்தன்மை கண்ணாடிப் பிறேம் போடுவதால் கெட்டுவிடும். கண்ணாடியூடாக படத்தை நாம் பார்க்கும் போது ஏற்படும் (Shining) ஒளித்தொகுப்பு படத்தின் அழகைக் குறைக்கும் எண்ணைவர்ண ஓவியத்தின் இந்த வகையான அழகை இரசிக்கும் தன்மையை எமது மக்கள் பெற வேண்டும் உரிய முறையில் படங்களை இரசிக்கப்படுகின்ற நிலை வரும் போது நிச்சயம் ஓவியர்களுக்கு பெறுமதி ஏற்படும். அப்போது ஓவியங்களுக்கும் பெறுமதி ஏற்படும்.

நீங்கள் வரைந்த ஓவியங்களில் உங்களுக்கு பிடித்தவை பற்றி ஏதாவது சொல்ல முடியுமா?

எனது ஓவியங்கள் எல்லாம் எனது குழந்தைகள் அதில் பிடித்தது பிடிக்காதது என்று சொல்ல முடியாது எல்லாம் எனது பிள்ளைகள்.

வண்டிற்சவாரி, தேர்த்திருவிழா, பறை அடித்தல், சாமி காவுதல், மழையில் நனைந்த ஆட்டை இழுத்துச் செல்லுதல், தோணியில் பாய் இறக்கல், தாய் (பிரத்மை ஓவியம்) பனை ஏறுதல், இன்னும் பல, சில என்னிடம் உண்டு. மிகுதி யாழ் நூலகத்திலும், யாழ் பல்கலைக்கழகத்திலும் உண்டு. எல்லாம் எனது மனதில் பட்ட காட்சிகளையே வரைந்துள்ளேன்.

சித்திரத்துறையை கற்கும் மாணவர்களுக்கு.... என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

முதலில் நல்ல இரசனையை உருவாக்க வேண்டும். நிறைய வரைய வேண்டும் விற்பனை என்கின்ற குறுகிய நோக்கங்களை விடுத்து கலைக்காக என்கின்ற வகையில் செற்படத்துணிய வேண்டும் என்றார்.

முதுமையிலும் மகிழ்வாய் வாழ்ந்து கொண்டிருக்கும் மூத்த ஓவியர் K. கனகசபை அவர்கள் எந்தவித ஆர்ப்பாட்டமோ பெருமிதமோ இன்றி அமைதியான முறையில் தானும் தன்பாடுமாக வாழ்ந்து வருகின்றார். ஆனால் இன்று 80 வயதில் தன் உடற்தளர்வைக் கூட கருத்தில் எடுக்காது ஓவியம் வரைந்து கொண்டுதான் இருக்கிறார். வேகம் தளர்ந்தாலும் இன்னும் வரைவதற்காக வரைவதற்கு ஏற்றவாறு வரைதளங்களை (கன்வஸ்) தயாராகவே வைத்துள்ளார்.

**எஸ். என். வாசன்**
**சோ. சி. சிவானந்தராஜா**
**(2ம் வருடம், சித்திரக்கலை)**

# கதை முயல்களும் தவளையும்

ஒரு தடவை சில முயல்கள் கோடை காலத்தில் ஒரு வரண்ட இலந்தைப் புதரில் ஒன்று சேர்ந்தன. வயல்களில் அந்நாட்களில் தானியமில்லாததால் அவைகள் எல்லாம் பசியோடிருந்தன. தவிர இந்நாட்களில் காலை, மாலை உலாவருபவர்களோடு வரும் நாய்களும் அவைகளைத் துன்புறுத்தின.

மைதானத்திலுள்ள புதர்களும் வரண்டிருந்தன. நாய்கள் விடாமல் துரத்துவதால் வரண்ட மைதானத்தில் ஒளிந்து கொள்ளப் புதர்கள் இல்லாமல் துன்புற்றன. ஆகவே துயரத்தினால் அமைதியிழந்து காணப்பட்டன.

ஒரு முயல் "பிரம்மா நம் குலத்துக்கு மிகவும் அநியாயம் செய்திருக்கிறார். நம்மைப் பலமில்லாமலும் சிறிய உருவத்துடனும் புடைந்திருக்கிறான். நமக்கு அவர் மானைப் போல் கொம்புகளோ அல்லது பூனையைப் போல் கூர் விரல்களோ அளிக்கவில்லை. எந்த விலங்கைப் பார்த்தாலும் நாம் தம்பியோட வேண்டியுள்ளது. எல்லாப் பக்கங்களிலிருந்தும் படைப்புக் கடவுள் ஆபத்தை நம்மவர்களின் தலையில் சுமத்தி விட்டார்." என்று சொன்னது.

மற்றொரு முயல் நான் இந்தத் துயரமும் கவலையும் நிறைந்த வாழ்க்கையால் துன்பப்படுகின்றேன். நான் குளத்தில் மூழ்கி இறக்க முடிவு செய்துள்ளேன்" என்றது.

மூன்றாவது முயலும்" நானும் இறக்கவிரும்புகிறேன். இனிமேலும் கஷ்டப்பட என்னால் முடியாது. நான் இப்போதே குளத்தில் குதிக்கப் போகிறேன்" என்றது.

"நாங்கள் அனைவரும் உன்னுடன் வருகிறோம். நாம் அனைவரும் ஒன்றாகவே இறப்போம்" என்று எல்லா முயல்களும் கூறின. எல்லா முயல்களும் குளத்தை நோக்கிச் சென்றன. குளத்திலிருந்து அநேக தவளைகள் வெளியே வந்து கரையில் உட்கார்ந்திருந்தன. முயல்களின் வருகைச் சத்தம் கேட்டதும் அவைகள் தண்ணீரில் "புட் புட்" என்று குதித்தன. தவளைகள் பயந்து கொண்டு தண்ணீரில் குதிப்பதைப் பார்த்து முயல்கள் தடைப்பட்டு நின்றன.

ஒரு முயல் "சகோதரர்களே! உயிரை விட வேண்டியதில்லை. வாருங்கள் திரும்பிச் செல்வோம். பிரம்மாவின் படைப்பில் நம்மைவிடச் சிறிய பயந்த ஜந்துக்களும் உடனிருந்து வாழ்கின்றன. அப்படியிருக்க நாம் ஏன் வாழ்க்கையில் விரக்தி அடைய வேண்டும் என்றது.

அதன் வார்த்தையைக் கேட்டு முயல்கள் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தை விட்டு திரும்பிச் சென்றன.

துன்பம் தரும் காலங்களில் அச்சம் தோன்றினால் உலகில் உன்னைக் காட்டிலும் எத்தனை மக்கள் துயரத்தின் பிடியில் சிக்கித் தவிப்பவர்களாக வறுமை, நோய், கவலைகளால் பீடிக்கப்பட்டவர்களாய் வாழ்கின்றார்கள், என்பதைப் பார், நீ அவர்களைக் காட்டிலும் எவ்வளவு நல்ல நிலையில் இருக்கின்றாய் என்று உணர்ந்தால் உன்னைத் துயரங்கள் தொடரா!

ந. நிசாந்தினி
(1ம் வருடம், ஆரம்பக்கல்வி)

# கலைத்திட்டச் செல்நெறியில் உளவியலின் செல்வாக்கு

கல்விச் செயன்முறையின் அடிப்படை நோக்கம் தமது சூழ்நிலையுடன் சிறந்த பொருத்தப்பாட்டினைப் பெற்று, உடல், உளநலத்துடன் மாணாக்கர்கள் வாழ்வதுக்கு உதவுவதாகும். கல்வி இலக்கினையும் இதனோடு இணைந்து காணப்படும் வாழ்க்கை மதிப்புக்கள், வாழ்க்கை இலட்சியங்கள் ஆகியவற்றையும் எளிதில் அடைவதற்கு பாடசாலைக் கலைத்திட்டங்களும் செயல்களும் மாணாக்கர்களுக்கு உதவுகின்றன.

"கல்வி ஏற்பாடு" என்னும் சொல்லுக்கு இன்று பலர் குறுகிய பொருளினைக் கொள்கின்றனர். மாணாக்கர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டிய பல்வேறு பாடங்களின் தொகுப்பே கல்வி ஏற்பாடாகும் என்பது இத்தகைய குறுகிய பொருளாகும். ஏட்டுக் கல்வியே உண்மைக்கல்வியாக எண்ணப்பட்டது. வகுப்பறைக்கு வெளியே மாணாக்கர் பெறக்கூடிய அனுபவங்கள், அவை எத்துணைச் சிறந்தவையாக இருப்பினும் கல்வி ஏற்பாட்டில் பங்கு பெறத் தக்கவையாகக் கருப்படவில்லை. கல்விக்கான முழுமையான வாய்ப்புக்கள் யாவும் இப்போது "கலைத்திட்டம்" என்னும் சொல்லால் குறிக்கப்படுகின்றன.

மாணவர்களின் மனப்பக்குவத்தை அனுசரித்து பல்வேறு பாடங்களும், படிப்புக் கிரமமும் மேற்கொள்ளப்படுகின்றன. இக்கோட்பாட்டிலிருந்து எழும் கருத்து மாணவனின் உளவியலிற்கு கூடிய கவனம் செலுத்திக் கலைத்திட்டம் அமைக்கப்பட வேண்டும். மனவளர்ச்சியின் தன்மைக்கேற்ப சீரமைந்த கலைத்திட்டம் அமைக்கப்பட வேண்டும். தோல்விகளை அறைகூவல்களாக மாற்றும் திறனை மாணவரிடத்து ஊக்குவித்தல் சாலச்சிறந்தது.

உலகம் முழுவதும் அறிவு வளர்ந்து கொண்டு செல்கின்றது. பெருக்கெடுத்துச் செல்கின்ற அறிவை கலைத்திட்டம் தொடர்ந்து உள்வாங்கிக் கொண்டு இருப்பதால், கலைத்திட்டத்திற்கு நிரந்தரமான வடிவம் ஒன்று இல்லை என்று கூறுகிறார்கள். அறிவு வளர, வளர கலைத்திட்டத்தில் மாற்றங்கள் கொண்டு வரல் வேண்டும். சமூக வளர்ச்சியாலும், கலைத்திட்ட வடிவமைப்பு மாறுபாடு கொண்டிருக்கின்றன. புதிய கலைத்திட்டத்தில் சீலம் மேம்பாடடைய வேண்டும் என்றும் கூறப்படுகின்றது.

கல்வி உளவியலின் மையப்பொருள் "கற்றல்" ஆகும். கல்வி உளவியல் திறமையான கற்றலுக்குத் தேவையான பொருத்தமான நிலமைகளை உருவாக்க முனைகின்றது. மற்றும் கற்றல் இடமாற்றம், அனுபவ இடமாற்றம் முதலியவற்றைப் பொருத்தமான நிலமைகளில் ஏற்படுத்துதலே சிறந்தது.

ஒவ்வொரு துறையிலும் சாதாரண பிள்ளைகளின் பிரச்சினைகளிலேயே முக்கியமாக அக்கறை செலுத்த வேண்டியுள்ளது. ஆயினும் கல்வி உளவியலார்கள் மீத்திறன் உள்ள பிள்ளைகள், உளப்பாதிப்படைந்த பிள்ளைகள் ஆகியோரிலும் சமமான அக்கறை செலுத்தினர். இதுமட்டுமன்றி தனியாள் வேறுபாடுகள், கல்வி மற்றும் தொழில் சார்ந்த பிரச்சினைகளிலும் அக்கறை செலுத்தினர். இதனூடாக மாணவரின் தளத்தில் நின்று

பிரச்சினைகளை அணுகுதல் வேண்டும். மாணவனுக்கு ஒரு பாடம் விளங்கவில்லை என்றால் அதனை அவனது நிலைக்கேற்ப கோபப்படாது விளங்க வைத்தலுடன் பரிகாரக் கற்பித்தலையும் வளம்படுத்துதல் வேண்டும். மாணவரின் பங்குபற்றலையும், ஈடுபாட்டையும் கற்பித்தலில் முனைப்புடன் ஊக்குவித்தல் சாலச்சிறந்தது.

ஓர் ஆசிரியரிற்கு பிள்ளைகளின் விருத்தி சார் நடவடிக்கைகள், தனியாள் வேறுபாடுகள், கற்றல் சூழலின் இயல்புகள், கற்றற் தொழிற்பாட்டின் இயல்புகளும் கற்பித்தல் முறைகளும் பிள்ளைகளின் பிரச்சினைகளும் உள நலமும், கற்றலின் அளவீடு என்பவை பற்றி நன்கறிந்து, பொருத்தமான கற்றற் சூழலை ஏற்படுத்திக் கொடுக்கவும், இலகுவாகவும், விரைவாகவும் கற்றலை ஏற்படுத்தக் கூடிய கற்பித்தல் உத்திகளைக் கையாளவும் கல்வி உளவியல் அறிவு அவசியமாகும்.

புதிய கல்விச் சீர்திருத்தத்தில் தேசிய ஒருமைப்பாடு, சமூகநீதி, பண்பாட்டு நோக்கம், உளநிறைவு கொண்ட தொழில், மனவளவிருத்தி, சூழலோடு இணைதல், சர்வதேச கௌரவம் போன்ற நோக்கங்களை அடைய கலைத்திட்டம் உதவி புரிகின்றது.

கலைத்திட்ட இலக்குகள், கலைத்திட்ட கோட்பாடுகள், கற்பித்தல் கோட்பாடுகள், ஆசிரியத்துவம் பற்றிய கருத்துக்கள், மதிப்பீட்டியல் நுட்பங்கள், கற்பித்தல் நுட்பங்கள், கண்டு பிடிப்புக்கள் இவை போன்றன ஆசிரியர், மாணவர் கற்றல், கற்பித்தலில் உளவியல் முழுமையாகவும், பகுதி, பகுதியாகவும் செல்வாக்குச் செலுத்தின.

“கில்காட்” எனும் உளவியலாளர் - உளவியலிற்கும் கலைத்திட்டத்திற்கு மிடையேயுள்ள தொடர்பை விளக்கும் போது கற்றலை முதன்மைப்படுத்தி சில உளவியல் கருத்தை முன் வைத்துள்ளார். எமது இலங்கைக் கல்வியியல் 2 எண்ணக்கருவை முன் வைத்துள்ளார்.

1) கற்றலுக்காக கற்றல்
2) வாழ்நாள் முழுவதும் கல்வி

கற்பவனுடைய கொள்ளளவும், ஆற்றலும் வயதும் கருத்திலே கொள்ளப்படல் வேண்டும். இதற்கேற்பவே கலைத்திட்டத்தைத் திட்டமிடல் வேண்டும்.

ஆசிரியரிடையே ஊக்கல் பற்றிய உளவியல் சார்ந்த தெளிவான விளக்கம் காணப்படல் வேண்டும். ஏனெனில் அளவிற்கதிகமான ஊக்கல் மன உளச்சலையும், உளநோய்களையும் உண்டாக்கும்.

உ+ம்:- 5ம் ஆண்டு புலமைப்பரிசில் திட்டம்
க.பொ.த(உ/த) “Z” புள்ளி

மற்றும் பெற்றோர் அதீத கற்பனையில் மாணவர்களை நகர வைக்கும் போது அவர்களிற்கு மனமுறிவு ஏற்படல். நகரப்புற பாடசாலைகளை நோக்கி நகரவைத்தல். இதன் போது அவர்களிற்கு மனமுறிவு உண்டாகிறது. இதனால் கற்றல் பாதிக்கப்படுகின்றது.

பாரம்பரிய கலைத்திட்டத்தில் செயல் ஊக்கம் குன்றிய பங்குபற்றலும், தனியாள் வேறுபாடும் முக்கியத்துவம் பெற்றதாக காணப்படவில்லை. ஆனால் இன்று தனி ஒவ்வொருவனையும் முதன்மைப்படுத்தி கற்பித்தல், தனியார்மயப்பட்ட கற்றல், புதிய கணிப்பீட்டில் ஒவ்வொரு மாணவனையும் முதன்மைப்படுத்த வேண்டி இருத்தல். அவனது முழு வளர்ச்சியையும் காட்சிப்படுத்துவதற்குரிய வரைபுகள் காணப்படுதல் போன்றன புதிய கலைத்திட்டத்தில் செயல் ஊக்கம் உள்ள கலைத்திட்டத்தை மாணவரிடையே அறிமுகப்படுத்த வேண்டி உள்ளது.

ஆசிரியரது வகுப்பறைக் கற்பித்தலில் பயன்படுத்தும் ஒவ்வொரு கற்பித்தல் உபகரணங்களும் ஆசிரியரது ஒவ்வொரு அசைவும் கருத்தாழம் உடையதாக இருத்தல் வேண்டும். கற்றல் இடமாற்றம், ஞாபகப்படுத்தல், மீட்டெடுத்தல், கணிப்பீடு, கற்றல் அபிவிருத்தியின் ஒவ்வொரு படிநிலையையும் கலைத்திட்ட செயற்பாட்டிலே பரவலாக செயற்படுத்தல் அவசியம்.

புறூணருடைய போதனைக் கோட்பாடுகள் தொடர்பான உளவியல் ஆராய்ச்சிகள் கலைத்திட்டத்திலே செல்வாக்குச் செலுத்துகின்றன. இக்கோட்பாடு - தூண்டிக்கும் துலங்கலிற்கும் இடையே இடம் பெறுகின்ற தொடர்புகள் வளர, வளர உள்ளார்ந்த நிலையிலே களஞ்சியப்படுத்தின் வளர்ச்சி அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. இது வகுப்பு அதிகரிக்க, அதிகரிக்கக் கூடிக் கொண்டே செல்கிறது. ஆனபடியால் எமது கலைத்திட்டத்திலும் வருடா, வருடம் கலைத்திட்டத்தை மாற்றி அமைக்கும் போது முன்னரிலும் கூடிய தரவுகள் வழங்கப்படல் வேண்டும்.

அறிவு வளர, வளர எண்ணக்கரு அளவு, சொற்களஞ்சியம், குறியீடுகளின் திறன், கையாளும் திறன், பிரயோகிக்கும் திறன், சூழலோடு இடைவினை காணும் திறன், பன்முகப்பாடுகளை அறியும் திறன், பிரச்சினை விடுவிக்கும் திறன், பிரயோகிக்கும் திறன் என்பன வளர்ச்சி பெறுகின்றன. இவை யாவும் அறிவைச் சிக்கனமான முறையில் உள்வாங்க கலைத்திட்டத்தினூடாக எடுக்கப்பட வேண்டிய விடயங்களாகும்.

இன்றைய கால கட்டத்தில் தேசிய கல்வியியற் கல்லூரிகள், ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர் பட்டப்படிப்புக்களின் கலைத்திட்டத்தில் உளவியல் பாடநெறி போதிக்கப்படுகின்றது. மாறிவரும் சமூகச் சூழலில் ஆசிரியருக்கும் கல்வி நிலையங்களுக்குமுள்ள பொறுப்புக்கள் அதிகரித்து வருவதனால் உளவியலிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுதலை முழுக்க, முழுக்க கவனத்தில் கொள்ளப்படுகின்றது. ஆனால் இவை ஆசிரியர் மூலம் வகுப்பறைகளில் பயன்படுத்தப்படுகின்றனவா என்பது தான் தற்கால சமூகத்தில் கேள்விக் குறியாக அமைகின்றது.

எனவே கலைத்திட்டம் நெகிழ்ச்சியும் செழுமையும் கொண்டதாகவும், மாணவர்களை நடுநாயகப்படுத்தி அவர்களின் தனியாள் வேறுபாடுகளைக் கருத்தில் கொண்டு கட்டியெழுப்பப்படல் வேண்டும். மாணவர்களின் தேவைகள், மற்றும் விருப்புக்களை நிராகரித்து கல்விச் செயற்பாடுகளை கட்டியெழுப்ப முடியாது. கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மாணவர்களின் தேவைக்கேற்றவாறு நெகிழ்ச்சியுடையதான நெகிழ்கலைத்திட்டம் அமைக்கப்படல் சிறந்ததாகும்.

# உசாத்துணை நூல்கள்:


1) கலாநிதி. சபா. ஜெயராசா - பாடசாலையும் கலைத்திட்டமும்
2) பேராசிரியர் வ. ஆறுமுகம் - கல்விப் பாரம்பரியங்கள்
3) கலாநிதி. சபா. ஜெயராசா - குழந்தைக் கல்விச் சிந்தனைகள்
4) கலாநிதி. சபா. ஜெயராசா - குழந்தை உளவியல்
5) பேராசிரியர் க. சின்னத்தம்பி - அறிகைத் தொழிற்பாடுகளும் ஆசிரியரும்
6) யோ. பெனடிக்ற்பாலன் - கல்வி உளவியல் அடிப்படைகள்
7) விஞ்ஞான சங்க வெளியீடு - புதிய கல்விச் சிந்தனைகள்
8) பொருளியல் நோக்கு - "கல்விச் சீர்த்திருத்தங்கள் தொடர்பான ஒரு குறிப்பு" நவம்பர் / டிசெம்பர் 1999
9) பேராசிரியர் சபா. ஜெயராசா - கல்விச் சீர்மியம்


**திருமதி. கௌரி சுரேசன்**
**(கல்வியலாளர்)**
B.A., Dip in Ed., M.Ed



"பேசும்தூரிகை" ஓவியக்கண்காட்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறைத் தலைவர் பேராசிரியர் ம. சின்னத்தம்பி உரை நிகழ்த்துவதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கலைஞர் ரமணியும், கல்லூரி பிடாதிபதியும்.

விசேட கல்வி நிறுவனங்கள்

அறிமுகம் ~ 1

# சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை

இப்பாடசாலை யாழ்ப்பாணத்தில் கோண்டாவில்பதியில் அமைந்துள்ளது. கடந்த வருடம் ஆடி மாதம் இரண்டாம் திகதி இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. மனவிருத்தி குறைந்த குழந்தைகள் ஆரோக்கியமாகவும் அன்பாகவும் மகிழ்ச்சியுடனும் வாழ வகை செய்யும் நோக்கில் இப்பாடசாலையினை ஆரம்பித்துக் கொண்டனர். ஆடல், பாடலுடன் குழந்தைகள் தமது அன்றாட கடமைகளைச் செய்யும் பழக்கத்தினை ஏற்படுத்திக் கொள்ளவும். இயன்ற வரையில் ஏனைய குழந்தைகளைப் போல் தாமும் மற்றவர்களுடன் பழகவும் இங்கு சிறப்பான முறையில் ஆசிரியர்களால் பயிற்சியளிக்கப்படுகின்றது.

மனவளர்ச்சி குறைந்த குழந்தைகளை சாதாரண பாடசாலைகள் ஏற்கப் பின் நிற்பதால் அவர்களில் பலர் வீட்டில் அறைகளில் பூட்டி வைக்கப்பட்ட பரிதாப நிலையை உணர்ந்த சிவநெறித்தவ மகன் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகனின் முழு முயற்சியால் இப்பாடசாலை உருவாகிற்று.

மேலை நாடுகளுக்கு அவர் சொற் பொழிவுகளுக்குச் சென்ற போது அங்கு நிதர்சனமாக கண்ட காட்சிகள் மனவளர்ச்சி குறைந்தவர்களை அவர்கள் எவ்வாறு கருணையுடனும் அன்புடனும் அரவணைக்கின்றனர். என்பதனைக் கண்டு இத்தகையதோர், செயற்பாடு எமது மண்ணிலும் இருக்க வேண்டும் என்ற உந்துததால் வெளிநாட்களில் வாழும் எம்மவர்கள் உதவியுடன் மற்றும் கண்வைத்திய நிபுணர் டாக்டர். கே. குகதாசன், திரு. என். சதாசிவஐயர் ஆகியோரின் அனுசரணையுடன் இப் பாடசாலையை நிறுவி வெற்றியுடன் ஓராண்டைப் பூர்த்தி செய்துள்ளார்

மிகச் சிறிய கட்டிடங்களுடன் ஆரம்பித்த இப்பாடசாலையை இன்று, மிகப் பெரியளவில் மூன்று மாடிக் கட்டடத்தினைக் கொண்டதாக வளர்ச்சி பெற்று வருகின்றது.

நல்ல மனங்கொண்டோர் பலர் மிகத் தாராளமனதுடன் சிவபூமிப் பாடசாலைக்கு உதவி வருகின்றனர்.

செஞ்சொற் செல்வர் மிகுந்த மகிழ்ச்சியுடன் இச் செய்தியினை குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடும் போது "சிவபூமிப் பாடசாலைக்காக நான் யாசித்து நிதி சேர்த்த காலம் மாறி பல நல்ல உள்ளங்கொண்டவர்கள் எமது வளர்ச்சிக்காக அள்ளித் தருகின்றார்கள் என்றார். இந்த சிந்தனை வளரவேண்டும். இங்கு பயிலுங் குழந்தைகளும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும்.

சிவபூமி பாடசாலையில் 2005ஆம் ஆண்டு அறிக்கையின்படி இங்கு 12 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். 84 மாணவர்களைத் தாண்டி மாணவர் தொகை அதிகரித்துச் செல்கின்றது.

இன்றைய யுத்த சூழலில் இப்பாடசாலையின் தேவை மிக அவசியமானது. அதனை ஆரம்பித்த செஞ்சொற் செல்வரும் நிர்வாகக் குழுவினரும் எமது மண்ணுக்கு அரிய தொண்டாற்றினைச் செய்துள்ளார்கள். அங்கு கடமை புரியும் ஆசிரியர்களின் தியாகம் என்றும் மதிக்கப்பட்ட வேண்டியது.

**வித்தியாதாசன்**

## விசேட கல்வி நிறுவனங்கள்
## அறிமுகம் – 2
# வாழ்வகமும் அதன் வளம் மிக்க பணிகளும்

கண் பார்வையற்றவர்கள் இவ்வுலகிலே மகிழ்ச்சியாகவும், கௌரவமாகவும் வாழ்வதற்குக் கல்வி மிகவும் இன்றியமையாதது. எனினும், துர்திஷ்டவசமாக நமது நாட்டிலுள்ள பார்வையற்றவர்கள் அனைவருமே இக் கல்வி வாய்ப்பினைப் பெறமுடியாதவர்களாகவே உள்ளனர். இவ்விதமாக உள்ளவர்களுக்குக் கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அவர்களது வாழ்வை வளம்படுத்தும் நோக்குடனேயே வாழ்வகம் 1988ம் ஆண்டு தெல்லிப்பழையிலே ஸ்தாபிக்கப்பட்டது. பதின்மூன்று பிள்ளைகளோடு வாடகை வீடொன்றில் ஆரம்பிக்கப்பட்ட வாழ்வகம் வெகு சிறப்பாகத் தனது பணிகளை முன்னெடுத்துவந்த வேளை, 1990ம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக அங்கிருந்து இடம்பெயர நேர்ந்தது. எனினும் வாழ்வகத்தை ஆரம்பிப்பதில் முன்நின்று உழைத்த செல்வி. அ. சின்னத்தம்பி அவர்களும் அவருக்குப் பக்கபலமாக நின்ற அன்பு உள்ளங்களும் மனம் தளர்ந்துவிடவில்லை. அதன் பயனாக மீண்டும் 1992ம் ஆண்டு வாழ்வகம் உடுவில் மல்வம் பகுதியில் தனது பணிகளை ஆரம்பிக்க முடிந்தது. இருந்தபோதிலும், 1995ம் ஆண்டு ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வு காரணமாக அங்கிருந்தும் வாழ்வகம் இடம்பெயர நேர்ந்தது. அத்தோடு பெருமளவு பொருளிழப்புக்களையும் சந்திக்க நேர்ந்தது. இருந்த போதிலும், இம்முறையும் யாரும் மனம் தளர்ந்திடவில்லை. 1997ம் ஆண்டு மீண்டும் வாழ்வகம் மானிப்பாயில் தனது பணிகளை ஆரம்பித்தது.

இவ்விதம் வாழ்வகமானது தனக்கென ஒரு நிரந்தர வதிவிடமின்றி அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருப்பதைக் கண்டு சகித்துக் கொள்ள முடியாத நல்லிதயம் படைத்தோர் சிலர் வாழ்வகத்தை நோக்கித் தமது நேயக் கரங்களை நீட்ட முன்வந்தனர். இதன் பயனாக, இன்று சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியிலுள்ள தனது சொந்த வதிவிடத்தில் வாழ்வகம் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.

தற்போது வாழ்வகத்தில் இருபத்தைந்து பார்வையற்ற / பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகள் உள்ளனர். இவர்கள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, சுன்னாகம் இராமநாதன் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயில்கின்றனர். சாதாரண பிள்ளைகளோடு இணைந்து அவர்களுக்குச் சமமாகக் கற்றுவரும் வாழ்வகச் சிறார்களுக்குத் தேவையான விசேட உதவிகள் மற்றும், மேலதிக வழிகாட்டல்கள் என்பவற்றை வாழ்வகத்தால் பயிற்றுவிக்கப்பட்ட விசேட ஆசிரியர்கள் வழங்கி வருகின்றனர். விழிகளிலே ஒளியில்லாவிட்டாலும் ஒளிமயமான ஒரு எதிர்காலத்தை நோக்கி இச்சிறார்கள் பயணித்துக் கொண்டுள்ளனர்.

வாழ்வகம் மேலும் வளர அதன் பணிகள் இன்னும் பன்முகப்பட நாமும் துணை செய்வோமாக.

**ஆ. ரவீந்திரன்**
**(கல்வியியலாளர்)**

## SPECIAL EDUCATION UNION



## PRIMARY UNION




# PHYSICAL EDUCATION UNION



# ENGLISH UNION



# MATHS UNION



# SCIENCE UNION



# TAMIL UNION




# CULTURAL UNION




# CHIRISTION UNION




# ISLAMIC UNION



# AESTHETIC UNION



# IT UNION



# Late Mrs. T. Karthikeyan
# An - Appreciation



It Was the beginning of the Year 2003. The Jaffna National College of Education was searching for a helping hand for the successful conduct of the Library Science and IT course a field which has found remarkable development in the world. At that crucial moment Mrs. Thirumagal Karthikeyan knocked at the college doors along with her father prof. Kugabalan of Jaffna University. Subsequently, she joined us as part time lecturer in the field of Library Science, with the necessary approval from the Ministry of Education. But she was only nominally part time; she was in even during nights but received a paltry payment for four hours per week. Her dedicated services along with her wide knowledge in the relevant field (M.Sc (LIS) Madras) uplifted the course procedures as well as the college library.

The library has become a full-fledged one because of Mrs. Karthikeyan's magical touch. It was shifted to the new premises with her valuable guidance and supervision. The rules and regulations relating to the use of the library have effectively been introduced through plays directed by Mrs. Karthikeyan. The efforts were praised by the college society. She didn't stop with that. The planned a syllabus for the field of Library Science along with the part time lecturers who visit the college form the University library. The syllabus design even received recognition and praise among the high officials in the field of Education. All these praises were modestly acknowledged with a simple smile and she continued to work for the well - being of the prospective teachers and the college itself.

The prospective teachers used to call her as Their mother as she hed a close relationship with each and every individual. In handling problems she utilised her own style and techniques effectively and has secured the top most place in the minds of the prospective teachers. She had never restricted herself to the curricular activities only. She actively got involved in the co-curricular activities and guided the prospective teaches at sports meets, Union programmes, field trips etc. During filed trips she went along with the prospective teachers and assigned tasks and responsibilities enabling them to gather appropriate experiences.

Since 2003 the field of Library Science showed a tremendous development with numerous activities and tasks introduced by her. Even the results obtained by the prospective teachers at final exams were commended by the high officials in March 2005 she gave her final touches to the reference section of the college library. We were preparing for a ceremonial opening of the reference section but we never even dreamt that she would leave us for ever so soon. But alas, on the 13th May 2005 we suddenly learnt to our utter shock and grief that Mrs. Thirumagal Karthikeyan had passed away at the young age of thirty at the hospital. The cruel fate has snatched away from our midst the precious lady. our savior in the filed of Library Science.

The irreparable loss of Thiru has created a huge vacuum in the relevant field of our college. We are unable to have it replaced and it remains a puzzle to all of us.

May her soul rest in Peace

**T. Mohan**
Lecturer

## எமக்குள் இருக்கும் எழில் மகள்!

கல்வியியல் முற்றத்தில்
கமழ்ந்த (சு)வாசம்!

வண்ணச் சாலையில்
வலம் வந்த
சின்னச் சோதரி
எங்கள் எண்ணங்களில்
ஏமாற்றம் தந்து
எங்கம்மா சென்றாய்?

ஆங்கில மிடுக்கும்
ஓங்கிய தமிழும்
வங்கிய வனப்பே,
நூலக வலங்களின்
நூதன வதனமே,
குகமகவின்
கார்த்திகேயப் பூவே,
அகம் நோகுதம்மா உன்
அந்திச் செய்தி!

கருவறைக்குள் புகுந்து
காவுகொள்ள
காலனுக்கு யார் கொடுத்தான்
கடுழியக் கட்டளை?
ஜம எஜமானத்துடன்
சமரிட முடியவில்லையே.....

புதிய உதயம்
ஒன்றிற்காய்
பூரித்திருந்தவளே,
இதயம் இடிந்ததம்மா
உன் இழப்புக்கேட்டு.....

இறைவியின்
இத நாமம் கொண்ட
இனியவளே - இளையவளே
உறையாத
உணர்வுகளோடு
என்றும் எம் -
உடனிருப்பாய் சோதரி....

**மானியூர் ரட்ணேஸ்**

## Personal Memory of Mrs. Thirumagal



I Can't forget you mo(u)m.....

I can't forget
the kind hands - which
led my foot steps
when I struggled to
even stand up,
In my childish days
of my college life.

I can't forget
the pleasant face - which
lit my mind,
when I suffered - by
a severe home sickness,
In my childish days
of the college life.

I can't forget
the merciful voice - which
lashed my fear,
when I shivered to
face the new environment
In my childish days
of the college life.

I can't forget
the first lecture - which
lifted my courage
when I was loaded by
a great burden,
In my childish days
of the college life.

I can't forget
the last lecture - which
lent me advice,
when I forgot - about
the great burden on me,
In her last days
of her life.

I can't even forget
the movement less moments - which
filled with tears,
when I stared at
her lifeless body,
In the last chance
to have a look.

Miss. Gasthuri Kanagalingam
(English 2nd Year)

# இத(ய)மார்ந்த நன்றிகள்

தவண்டு, புரண்டு
நடைவண்டித் துணைதாண்டி
நிமிர்ந்தெழுந்து,
மிளிர்கிறாள் - இன்று எம்
கல்லூரித்தாய்!

அறிவொளியூட்டும்
அகல்களின் - அசல்களின்
ஆழ சிந்தையில்
நீள ஓடிய உணர்வுகளை
கொட்டித் தீர்த்த
கெட்டிப் பொக்கிசமே
இக் "கலாசுரபி"ப் பெட்டகம்!

சொற்களின் இராட்சியத்தில்
எழுத்துக்கள் ஆட்சிசெய்ய.....
அற்புதப் படைப்புக்களாய்
கல்லூரி முற்றம்
முகிழ்ந்த முத்துக்களில்
அவிழ்ந்த ஐந்தாம் சொத்திது!

அரைத் தசாப்தத்தில்
அற்புதம் காட்டிய
கமல இதழ்களின்
விரிந்த மொட்டுக்கள்
புரிந்த சாதனைகளின்
புள்ளி விபரங்கள் - இப்
பள்ளி ஏட்டில் பரந்து மிளிர்கிறது!

சுரபியின் அருவியில்
பனியாய், துளியாய்
நிலவின் ஒளியாய்
இனிய, மழையாய்
சங்கமித்த அங்கத்தினருக்கு
இங்கிதமாய் நன்றிகள்!



**க. நடனேஸ்வரன்**
**இதழாசிரியர்**



Guru Printers, 56, Adiyapatham Veethy, Thirunelvely.